வெளியீடு : 23 - 11 - 2002 Issued : 23 - 11 - 2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 1, 2002 – தொகுதி 16 – எண் 3

**Monday the 1st April, 2002– Volume 16 – No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

## 1-4-2002

### உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| *முன்னாள் உறுப்பினர் மறைவு* | 111-112 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 112-151 |
| **3. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| *(அ) முறையான கடவுச் சீட்டு இன்மையால் கைதாகி வேலூர் சிறையில் உள்ள குவைத் பெண் குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை* | 152-153, 187 |
| *(ஆ) சூளைமேடு பகுதி பாரதிய ஜனதா கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை* | 154-155 |
| **4. தகவல் கோரல்—** | |
| *உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்* | 155-156 |
| **5. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—** | |
| *திரு. இ. புகழேந்தி* | 156-176 |
| *திரு. வி. ஜெயராமன்* | 177-186 |
| *திரு. டி. சுதர்சனம்* | 187-202 |
| *திரு. தி. வேல் முருகன்* | 202-209 |
| *திரு. வை. சிவபுண்ணியம்* | 209-222 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 222-224 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 18, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 ஏப்ரல் 1, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்."*

பயனளிக்காத சொற்களை விடுத்து, மனதில் பதிந்து பயனளிக்கக்கூடிய சொற்களையே அனைவரும் கூறவேண்டும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி சி. குழந்தை அம்மாள் அவர்கள் 27-3-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சி. குழந்தை அம்மாள் அவர்கள் 1957-1962 மற்றும் 1962-1967 ஆகிய ஆண்டுகளில் சூளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த முன்னாள் உறுப்பினர் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 41, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**41—**

### மேல்நிலைப் பள்ளிகளாக்குதல்

***3252—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட ஐந்து உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த கோயம்புத்தூர் மாநகராட்சி உரிய கட்டணத்தைச் செலுத்திய பின்பும் உயர்த்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஐந்து உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் 3 மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் 2001-2002 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள [illegible] நிலைப் பள்ளிகள் குறித்து, வரும்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224484.
சென்னை-600 008



கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டால், அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக் கருதப்படும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட 5 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட வேண்டுமென்று அதற்குரிய ஆலோசனைகளையும், தேவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, கோவை மாநகராட்சி அதற்குரிய நிதியையும் மாநகராட்சியின் தீர்மானத்தின் வாயிலாக நிறைவேற்றி ஒதுக்கியிருப்பதால் 3 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கியிருப்பது குறித்தும், எஞ்சியுள்ள இரண்டை நடப்பு நிதியாண்டில் உயர்த்துவதற்குப் பதிலாக, நிதிநிலையைக் கருத்தில் கொண்டு செய்யப்படும் என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு பள்ளிகளையும் கட்டாயம் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்று அந்த வட்டாரத்தின் பொதுமக்களும், அரசியல் கட்சிகளும் பெரிதும் விரும்புகிறார்கள்; எதிர்பார்க்கிறார்கள். 780-க்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு உயர்நிலைப் பள்ளிகளையும் இந்த நடப்பாண்டிலேயே மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த நிதியொதுக்கம் செய்ய உத்தரவிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மேலும், வரதராஜபுரம் உயர்நிலைப் பள்ளிக்கு கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக தலைமையாசிரியர் நியமிக்கப்படாமல் துணை ஆசிரியர் மூலமாக அது நிருவகிக்கப்படுகிறது. அதுவும் இப்போது மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுவதில் ஒன்றாக இருக்கக்கூடிய பள்ளி என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதன்மீதும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து, நம்முடைய அரசால் பரிசீலனை செய்யப்படும்; தற்போதைய நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் செயல்படுத்த முடியும். ஏனென்றால், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து இதுபோன்ற வேண்டுகோள்கள் வந்து இருக்கின்றன. தமிழகத்தில் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன், நடப்பு கல்வியாண்டில் 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கினார்கள். இதுவரை யாரும் செய்யாததை

[ 2002 ஏப்ரல் 1

இந்த ஒரே ஆண்டில் அந்த அளவுக்குச் செய்து காண்பித்திருக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. எல்லாம் நிதி நெருக்கடியைப் பொறுத்திருக்கிறது. நிதி நெருக்கடி ஓரளவுக்குத் தீர்ந்தவுடன் அவையெல்லாம் பரிசீலனை செய்யப்படும்.

ஆசிரியர் நியமனங்களைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் இந்த ஆண்டில் தேர்வாணையம் மூலமாகத் தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேர்வுகள் முடிந்தவுடனே அந்தப் பகுதிக்கு வேண்டிய ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படவிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து நீங்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய பகுதியிலுள்ள சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். இப்போதுதான் பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறோம். நம்முடைய கல்வி மானியத்திற்கு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்படும் என்பதைப் பார்த்து அந்த நிதி நிலைமைக்கேற்ப எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தலாம் என்பதைப் பார்த்து பிறகுதான் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கு இரண்டு இலட்சம் ரூபாயை அப்பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் செலுத்தவேண்டும் என்கிற விதியை இப்போது வைத்திருக்கிறார்கள்.



2002 ஏப்ரல் 1 ]

அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கே அரசுக்குப் பணம் செலுத்தவேண்டும் என்பது மக்கள் மத்தியிலே பெரிய ஏமாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. சில கிராமங்களிலே ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் பணம் செலுத்த முடியவில்லை. இதுபோன்ற பள்ளிகள் இன்னும் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படாமல் இருக்கின்றன. இரண்டு இலட்சம் ரூபாய் கட்டவேண்டும் என்கிற விதியைத் தளர்த்தி, அந்தப் பகுதியிலே மாணவர்கள் அதிகமாக இருப்பின் வேறு மேல்நிலைப் பள்ளி இல்லையென்று சொன்னால், அந்தத் தகுதி அடிப்படையிலே அவற்றையும் கருத்தில்கொண்டு இரண்டு இலட்சம் ரூபாய் கட்டாவிட்டாலும்கூட அரசு மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கு பொதுமக்களிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் நிதியாக வசூலிக்கப்பட்டு அரசுக்குச் செலுத்தப்படுகிறது என்பது உண்மை. அதைச் செலுத்தினால்தான் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்ற விதிமுறை கிடையாது. முதலில் முக்கியத்துவம் கொடுக்கப்படும்; முதலிடம் கொடுக்கப்படும் அவ்வளவுதான். ஆகவே அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொதுமக்களின் பங்குத் தொகையைச் செலுத்தும் பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்படும். ஏனென்றால், மற்ற பகுதிகளிலிருந்து அந்த ஆர்வத்தோடு வரும்போது அவர்களுடைய ஈடுபாட்டையும், அவர்களுடைய ஆர்வத்தையும் கருத்திற்கொண்டு முதலிடம் அளிக்கப்படுகிறது. பங்குத்தொகை கட்டித்தான் ஆகவேண்டுமென்ற விதிமுறை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன்.

**திரு.கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்துகின்றபோது, முறையாகத் துறையின் மூலமாகக் கருத்துருக்கள் பெறப்படுகின்ற கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர். கிராமப்புறப் பள்ளிகளுக்கு முன்னுரிமை.

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது; முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கு நிதிநிலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, முதலிலே அரசினுடைய நிதிநிலையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, சட்டப் பேரவை உறுப்பினருடைய மேம்பாட்டு நிதியிலே இருந்து அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்து, வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு பணம் ஒதுக்குகின்ற அத்தகைய பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அரசு மீண்டும் மறு பரிசீலனை செய்து அதை நிலை உயர்த்துமா; அல்லது பள்ளி மாணவ மாணவிகளுடைய எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அதற்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பள்ளியின் அவசியம் கருதி, முதலிலே அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கு அரசு ஏதேனும் முக்கிய அறிவிப்பு வெளியிடுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருத்தல் வேண்டும் என்ற விதி இருக்கிறது. சில நேரங்களில் சூழ்நிலைக்கேற்ப, அந்தப் பகுதியினுடைய தேவைக்கேற்ப, அந்த எண்ணிக்கை குறைக்கப்படும். 100 மாணவர்கள் இருந்தால் முன்னுரிமை கொடுத்துச் செயல்படுத்தப்படும் என்ற விதி இருக்கிறது.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கு, அந்த நிதியைக் கட்டுவதற்கு வசதி இல்லாத கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதிவிலக்கு அளிப்பாரா என்பதையும், அப்படி இல்லாத பட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் இரண்டு இலட்சத்தை ஒதுக்கிக்கொள்ள நடப்பாண்டிலேயே அந்த அனுமதி கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 1 ]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டது போல மிகவும் பின்தங்கிய பகுதி, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி போன்ற சில பகுதிகளுக்கெல்லாம் இத்தகைய பணம் கட்ட வேண்டிய அவசியம், தேவை கிடையாது. அதை எல்லாம் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் எம்.எல்.ஏ.—வினுடைய பணத்தை அதற்கு ஒதுக்கீடு செய்யலாமா என்பது குறித்து நிதியமைச்சர், நீங்கள் மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து முடிவெடுக்க வேண்டும். அதுபற்றி எனக்குச் சரியாகத் தெரியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன். (குறுக்கீடு) இருங்கள். பேராசிரியர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதி மேம்பாட்டிற்காக வழங்கப்படுகிற நிதி, அரசாங்கத்தினுடைய வரியிலேயிருந்து வழங்கப்படுகிற காரணத்தால், அரசாங்கத்திற்குப் பொதுமக்கள் கட்ட வேண்டிய நிதிக்கே அந்த நிதியைப் பயன்படுத்தக்கூடாது என்ற ஒரு கருத்துரு ஏற்கெனவே நிதித் துறை வெளியிடப்பட்டு, அதன்படி பள்ளிகளின் நிலை சார்பாக வெளியிடப்பட்டு, அதன்படி பள்ளிகளின் நிலை மேம்பாட்டிற்காக நிதி கொடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்ற ஒரு முறை இருந்தது. அந்த முறை நீடிக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் சொன்னதைப் போல இதுவரையில் அந்த விதிமுறை செயல்வடிவில் அப்படியே இருந்து கொண்டுதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கு 2 இலட்ச ரூபாய் கட்ட வேண்டிய தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். கிராமப்புறங்களிலே, பல கிராமப் பள்ளிகள் தகுதியிருந்தும் பணம் கட்டமுடியாத நிலையில் அவர்கள் 10ஆம் வகுப்பிலே இருந்துகொண்டு பல மைல் தூரத்திற்கு நடந்து சென்று படித்து வருகிற நிலை இருக்கிறது. அப்படி விதியில்லை என்று சொன்னால்—கடந்த காலங்களிலே பணம் கட்டியும் பல பள்ளிகள்

மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த முடியாத நிலை இருக்கிறது. அரசினுடைய கருத்து அப்படி இருக்குமானால்—நம்முடைய பேராசிரியர் அவர்கள் கடந்த கால ஆட்சியிலே கல்வி அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்கள்கூட இதற்கு வழி செய்திருக்கலாம். ஆனால் இதுவரையில் தமிழகத்திலே பணம் கட்டாமல் எந்த..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** அதைத்தான் நான் இப்போது சொல்ல வருகிறேன். கடந்த காலத்திலே அரசினுடைய வழக்கத்தின்படி எத்தனை பள்ளிகளுக்குப் பணம் கட்டாமல் தகுதி அடிப்படையிலே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டேன். சில பகுதிகளில் சில பள்ளிகள் பணம் கட்டாவிட்டாலும்கூட, அந்தப் பள்ளிகளை நிலை உயர்த்தியிருக்கிறோம். முழுமையாகக் கட்டாவிட்டாலும்கூட—சிலர் ரூ. 2 இலட்சம் என்றால் ரூ.1 இலட்சம் கட்டியிருப்பார்கள்; 50 ஆயிரம் ரூபாய் கட்டியிருப்பார்கள். அதுபோன்ற சில பள்ளிகளுக்கு—விதிவிலக்கு அளித்து நிலை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே 2 இலட்சம் ரூபாய் கட்டினால்தான் நிலை உயர்த்தப்படும் என்ற விதிமுறை ஒரு பக்கத்திலே இருந்தாலும் அதைத் தளர்த்துவதற்கு அவ்வப்போது அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தணி தொகுதியிலே கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே, விடையூர் என்கிற கிராமத்திலே நடுநிலைப் பள்ளிகளை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரவிராஜ், இது குறித்து தனிக் கேள்வி போட வேண்டும்.

வினா எண் 42. திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



**42—**

## மேல்நிலைப் பள்ளி

***16255—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், கீழப்பெரும்பள்ளம், அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பூம்புகார் தொகுதி, கீழப்பெரும்பள்ளம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர் மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்குகிறேன், தமிழ்த் தாயை வணங்குகிறேன். தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதிதிராவிட மாணவிகள் பள்ளிக் கல்வியைத் தொடர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே 11, 12 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு சைக்கிளை வழங்கி வருகிறார்கள்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக ஆதிதிராவிடர்கள் பாதிக்கப்பட்ட பகுதியான தூத்துக்குடிக்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி வந்திருக்கிறார்கள்; நிதியுதவியும் வழங்கியிருக்கிறார்கள். ஆதிதிராவிடர்கள் அதிகமாக வசிக்கின்ற கீழப்பெரும்பள்ளம் பகுதியிலே உள்ள கீழப்பெரும்பள்ளம் உயர்நிலைப் பள்ளியை நடப்பாண்டிலேயே

[ 2002 ஏப்ரல் 1

மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்திட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10.15*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்குட்பட்டு அவருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்கான கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அரசு ஏற்கெனவே அறிவித்ததாக எனக்கு நினைவு. உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தையுமே மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கான முயற்சியை அரசு எடுப்பதற்கான திட்டம் இருக்கிறதா? அப்படி அரசு கல்விக் கொள்கையை மாற்றுவதற்கான முயற்சி எடுத்துவிட்டால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழாமல் போகுமே. ஆகவே, அப்படிப்பட்ட கருத்துரு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயே இந்த அரசினுடைய கொள்கையான அனைத்து நடுநிலைப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்துவது குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். இதுதான் இந்த அரசினுடைய கொள்கை. இதைச் செயல்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கெண்டிருக்கிறோம். நிதிநிலைக்கேற்ப படிப்படியாக ஆண்டுக்கு இவ்வளவு என்று நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். இந்த அரசினுடைய கொள்கை அனைத்துப் பள்ளிகளையும், குறிப்பாகக் கிராமப்புறத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதும்தான். நிதிநிலைக்கேற்ப நாங்கள் படிப்படியாக ஆண்டுக்காண்டு செய்து, அதை முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.



2002 ஏப்ரல் 1 ]

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்துவது உயர்மட்டக் குழு பரிந்துரையின் பேரிலே செய்யப்படுகிறது என்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழு பரிந்துரை செய்வதற்கு என்னென்ன விதிமுறைகள் உள்ளன? எப்படியெல்லாம் இருந்தால் அந்தப் பள்ளிகளை நிலை உயர்த்த முடியும் என்கிற விதிமுறைகள் இருக்கின்றனவா? அந்த விதிமுறைகள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்குச் சில நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஒன்று முதலில் அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொதுமக்கள் பங்குத் தொகையைச் செலுத்தியுள்ள பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும். இரண்டாவது, மகளிர் பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும். மூன்றாவது, மலைப் பகுதி, ஆதிதிராவிடர் மக்கள் தொகை அதிகமாக உள்ள இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நகரப் பகுதியாக இருந்தால் மூன்று ஏக்கர் நிலமும், இதர இடங்களுக்கு 5 ஏக்கர் நிலமும், விளையாட்டு மைதானத்துடன் இருத்தல் வேண்டும். 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருத்தல் வேண்டும். ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும் அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர் தூரம் இருத்தல் வேண்டும் என்ற நெறிமுறைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியினுடைய தேவைக்கேற்ப அரசு சில நேரங்களில் சில விதிகளைத் தளர்த்தி அந்தந்தப்பகுதிகளுக்கு அந்தந்தப் பள்ளிகளை நிலை உயர்த்தித் தர ஆணையும் பிறப்பிக்கிறது. இந்த உயர்மட்டக் குழுவில் அந்தப் பள்ளி இயக்குநரும் மற்றும் அவருக்குக்கீழ் பணியாற்றுகின்ற முதன்மைக் கல்வி அலுவலர் போன்றவர்களும் இருக்கின்றார்கள். இவர்களுடைய பரிந்துரையின் பேரில் இவை செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும்போது பெண்களே முழுவதும் படிக்கின்ற உயர்நிலைப் பள்ளியை

மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதற்கு முக்கியத்துவம் தரப்படும்; முன்னுரிமையும் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 ஆம் வகுப்பிலே co-education-லே நடந்து முடிந்த பிளஸ் 2 தேர்விலே படித்து முடித்த 7 ஜோடிகள் என்னுடைய தொகுதியிலேயிருந்து பிளஸ் 2 தேர்வு முடிந்தவுடனே ஓடிவிட்டார்கள். (சிரிப்பு) அங்கே பெண்களுக்கு என்று தனியாக உயர்நிலைப் பள்ளி இருந்தும்கூட, அங்கே co-education இருந்த காரணத்தினாலே இதுபோன்றதொரு நிகழ்வு ஏற்பட்டுவிட்ட காரணத்தினாலே, அங்கே முன்னுரிமை அடிப்படையிலே அந்த உயர்நிலைப் பள்ளியை, பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நிகழ்ச்சிக்கும், இந்தப் பள்ளிக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. தனித்தனியாக இருந்தாலும்கூட இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடைபெறத்தான் செய்கின்றன. யாரும் தவிர்க்க முடியாது. (சிரிப்பு) இருப்பினும், நான் முன்பு சொன்னதுபோல், பெண்கள் படிக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்குத்தான் முக்கியத்துவம் தரப்படும்; முன்னுரிமை தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தண்டராம்பட்டு வேலு. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஒரு நிமிஷம் இருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லவந்த கருத்து; காதலிப்பது தவறா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.



**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவதிலே பொருளாதார ரீதியாகச் சங்கடங்கள் இருப்பதாகத்தான் திரும்பத் திரும்ப அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எவ்வளவுதான் நிதி இருந்தாலும் படிப்படியாகத்தான் உயர்த்தப்படும் என்றும் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மேல்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில் தனியார்கள் அல்லது அறக்கட்டளை வைத்திருப்பவர்கள் அல்லது கம்பெனி முதலாளிகள் அதற்குரிய 2 லட்சம் ரூபாயைக் கொடுத்து, மேல்நிலைப் பள்ளிக்கு வேண்டிய கட்டடத்தைக் கட்டிக் கொடுத்து, அதற்கு வேண்டிய ஆய்வகத்தைக் கட்டிக் கொடுத்தால், அந்த அறக்கட்டளை பெயரையோ அல்லது அந்த கம்பெனியின் பெயரையோ, தனியார் பெயரையோ வைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடங்கள் கட்டிக் கொடுத்து, வேண்டிய ஆய்வுக் கூடங்கள் எல்லாம் அமைத்துக் கொடுத்தால் அவர்கள் பெயர் வைக்கப்படுமா என்று கேட்கின்றார்கள். இந்த மாதிரியான திட்டம் சில காலங்களுக்கு முன்பு செயல்பட்டுக் கொண்டிருந்தது. இப்போது அது பரிசீலனையில் இருக்கின்றது. அவ்வாறு செய்ய முடியுமா என்பது பற்றி இறுதியான முடிவு இல்லாமல் இருக்கிறது. இரண்டாவதாக, இங்கே நிதி நிலைமைக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்படும் என்று நான் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நிதி இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த வேண்டும் என்றால் recurring expenditure மட்டும் ஆண்டிற்கு ரூ. 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை ஆகிறது. ஆசிரியர்களுக்குச் சம்பளமாகக் கொடுப்பதற்கு மட்டும். ஏதோ கட்டடம் மட்டும் இருந்து விட்டால் போதாது; இதுவும் தேவைப்படுகிறது. ஆகவே இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டுதான் அந்தப் பள்ளியினைத் தரம் உயர்த்த முடியுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து, ஆணை பிறப்பிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி இரா. சரோஜா.

**திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உப்பிலியாபுரம் தொகுதியில், பச்சைமலையிலே செம்புளிச்சாம்பட்டி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை நிலை உயர்த்தவேண்டும். நூறு மாணவர்கள் இருந்தால்தான் உயர்நிலைப்

[ 2002 ஏப்ரல் 1

பள்ளியாக நிலை உயர்த்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தாலும் மலைவாழ் பகுதியாக இருக்கின்ற இந்த இடத்திலே அவ்வளவு மலைவாழ் மாணவ, மாணவிகள் இல்லை. அந்த மலைவாழ் மக்கள் படிக்கக்கூடிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் பகுதியில் படிக்கின்ற மாணவர்களுக்கு அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது. ஆகவே, சில விதிமுறைகள் இருந்தாலும்கூட தேவைக்கு ஏற்ப, அந்தப் பகுதியின், சூழ்நிலைக்கு ஏற்ப, மலைவாழ் மக்களுக்குச் சில விதிமுறைகளைத் தளர்த்தியும் சில திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல இவற்றையும் நாங்கள் விதிமுறைகளைத் தளர்வுசெய்து தேவைப்படும்போது நிதிநிலைக்கு ஏற்ப செயல்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 43, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**43—**

### கிராமக் கோவில்களில் பூசை

***4187—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமக் கோவில்களில் அரசு மானியம் மூலம் அன்றாடம் நடத்திவந்த பூசையை மீண்டும் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கோயில்களில் அரசு மானியம் மூலம் ஒரு கால பூசைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழ்நாட்டில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களில் ஒரு கால



2002 ஏப்ரல் 1 ]

பூசையாவது தவறாது நடைபெற வேண்டும் எனக் கருதி, ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பொதுமக்கள் பங்காக ரூ. 2,500 நன்கொடை மூலம் பெற்றும், பாக்கித் தொகை ரூ. 22,500 நிதிவசதியுள்ள திருக்கோயில்களிலிருந்தும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி மற்றும் ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்தும் பெற்றும் மொத்தம் ரூ.25,000 திருக்கோயில் பெயரில் நிரந்தர முதலீடு செய்து, அந்த முதலீட்டினால் மாதந்தோறும் கிடைக்கப்பெறும் வட்டியிலிருந்து தினசரி ஒரு கால பூசை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள, எனது குளத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதியில் உள்ள பல கிராமக் கோயில்கள் ஒரு கால பூசை கூட நடத்தப்பெறாமல் மிகவும் பாழடைந்து இருக்கின்றன. இந்த ஆண்டு ஒரு கால பூசை நடத்துவதற்கு குளத்தூர் தொகுதியில் எத்தனை கோயில்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மூலம் இதுவரை மொத்தம் 8242 திருக்கோயில்கள் பயன்பட்டு வருகின்றன. தற்போது தமிழ்நாட்டில் ஒரு கால பூசை நடைபெறாத திருக்கோயில்கள் 2063 உள்ளன எனக் கண்டறியப்பட்டு, முதற்கண் ஆயிரம் திருக்கோயில்களுக்கு வைப்பு நிதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமப்புற அரசுக் கோயில்களிலும், நகர்ப்புறக் கோயில்களிலும் பூசை செய்வதற்கு ஆண்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள். ஆணும் பெண்ணும் சரிசமமாக உள்ள தமிழகத்தில் பெண்களை இந்தப் பணியில் அரசு நியமிக்குமா? தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இதிலே அரசு இடம் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் செயல் அலுவலராகப் பணியாற்ற ஆண்கள் மட்டும்தான் பணிக்கு வேண்டும் என்று அரசுத் தேர்வாணைக் குழுமத்திற்கு அனுப்பப்பட்டது. வழக்கு போட்ட பின்னாலே

[ 2002 ஏப்ரல் 1

பெண்களுக்கும் அங்கே உரிமை உண்டு என்று தெரிவிக்கப்பட்டு இப்போது அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதைப்போலவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44. திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**44—**

**திருமண மண்டபம்**

***6686—திரு. எஸ்.எம். பாலன்**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியிலுள்ள அன்பில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் அறநிலையத் துறை சார்பில் திருமண மண்டபம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இடவசதி இல்லாததால் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியில் அன்பில் கிராமத்தில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டினால் 25 கிராமத்து ஏழை எளிய மக்கள் பயன் அடைவார்கள். அத்துடன் அங்கே இடவசதியும் அதிகமாக இருக்கிறது; தண்ணீர் வசதியும் இருக்கிறது. அத்தோடு ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலினுடைய நிர்வாகத்தின்கீழ் வருவதால் அங்கே நிதிவசதி பெறுவதற்கு வழி இருக்கிறது. சமயபுரம் மாரியம்மன் கோயில், மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயில் ஆகிய நிர்வாகங்களிலேயிருந்து கடன் வசதி பெற்று இந்தத் திருமண மண்டபத்தைக் கட்டித்தர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 1 ]

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் என்பது ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயிலினுடைய உபகோவில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயில் வளாகம், தேர்த் திருநாள் மற்றும் பஞ்சபிரகாரத் திருநாட்களில் பயன்படும் அளவில் மட்டுமே உள்ளது. திருமண மண்டபம் கட்டும் அளவிற்கு இடவசதி இத்திருக்கோயில் வளாகத்தில் இல்லை. எனவே அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இடத்தை பெற்று தருவார்களேயானால் அருகில் இருக்கின்ற சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தினுடைய நிதியிலிருந்து கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இடவசதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் அந்தத் திருமண மண்டபத்தை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே இடவசதி இல்லையென்று கூறினார்கள். ஆனால் நிறைய இடங்கள் இருக்கின்றன. ஏனென்றால் எனது சொந்த ஊரான அன்பில் கிராமத்திலே, சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு அடுத்தாற்போல் அருள்மிகு அன்பில் மாரியம்மன் கோயில் மிகுந்த பிரசித்தி பெற்ற தலம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்தக் கல்யாண மண்டபத்தைக் கட்டுவதற்கும், அதேபோல் அம்மை நோயால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் அங்கே வந்து தங்குவதற்குப் போதிய இடம் இல்லாததாலும் புதியதாக ஒரு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கையை நிறைவேற்ற அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற வசதி படைத்தவர்கள் மூலம் நிதியை வசூலித்துத் தருவார்களேயானால் அருகிலே இருக்கின்ற சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தினுடைய நிதியிலிருந்து கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஏ.எம். உசேன், திருமண மண்டபத்திற்கு நிதியுதவி கொடுக்கிறீர்களா?

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மிகப் புகழ் பெற்ற பார்த்தசாரதி கோவில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அன்பில் மாரியம்மன் கோயில் பற்றிய கேள்வி. திரு. அன்பில் பெரியசாமி, உங்களுடைய அப்பா இருக்கும்போது சொல்லியிருந்தால் கட்டிக் கொடுத்திருப்பார் அல்லவா? திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லால்குடி தொகுதியிலுள்ள அன்பில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்கு இடவசதி இல்லை என்ற காரணத்தை இங்கே சொன்னார்கள். இப்போது தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஆலயங்களிலே, ஆலய வளாகங்களிலே அந்தத் திருமண மண்டபங்கள் எந்த விதிமுறையிலே எந்த அடிப்படையிலே, என்ன அளவுகோலை வைத்துக் கட்டப்படுகின்றன? அப்படிக் கட்டப்படக்கூடிய அந்த சூழ்நிலையில் இப்போது கோயில் வளாகத்திலே இருக்கக்கூடிய திருமண மண்டபங்கள் எத்தனை? அந்தத் திருமண மண்டபங்கள் மூலமாக ஆண்டிற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ரொம்பப் பெரிய கேள்வி.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய அளவுகோல் எவ்வளவு என்பது பொறியாளர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. கட்டடம் எவ்வளவு என்பதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் நான் பதில் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 45, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அடுத்த கேள்வியும் இதே பொருள் குறித்து வருவதால் இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.



2002 ஏப்ரல் 1 ]

45—

### மருத்துவமனை

***2529—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி கீரனூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியம், கீரனூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

முற்பகல் 10.30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

46—

### கழுகுமலை மருத்துவமனை

***15127—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலை மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு முன்வருமா?

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதை அரசு மருத்துவமனையாக உயர்த்தும் திட்டம் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டுக்கும் இல்லை என்று சொல்வதற்காகவா தனித்தனியாக எடுக்காமல் சேர்த்து எடுத்துக்கொள்ளச் சொன்னீர்கள்?

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூர் பேரூராட்சி என்பது தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதி. அங்கே சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதைச் சுற்றியுள்ள சுமார் 15 கிராமங்களிலுள்ள சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தினந்தோறும் கீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். தற்போது இந்த அரசு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி அங்கே அறுவை சிகிச்சை அரங்கம், அதேபோல எக்ஸ்ரே வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்தித்தர முன்வந்துள்ளது. அதன் அடிப்படையிலே அந்தத் தொப்பம்பட்டி ஒன்றியத்தில் உள்ள கீரனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்கிறபோது ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுகிற திட்டம் எதுவும் இல்லை என்றுதான் சொன்னேன். காரணம், ஆரம்ப சுகாதார நிலையத்தின் பணி என்பது வேறு, அரசு மருத்துவமனையினுடைய பணி என்பது வேறு. ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் அது கிராமப்புற மக்களுக்குச் சுகாதாரச் சேவைகளை வீடுதேடிச் சென்று செய்து வருகிற ஒரு மிகச் சிறந்த பணியாகும். ஆரம்ப சுகாதார நிலையத்திலே பணியாற்றுகிற சுகாதாரச் செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் எல்லாம், கிராமப்புறங்களில் மலேரியா, பைலேரியா, வயிற்றுப்போக்கு, காசநோய், போலியோ போன்ற நோய்க் கிருமிகளின் அறிகுறிகள் தென்படுகின்றபோது வீடுகளுக்கே சென்று தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். ஆனால் மருத்துவமனை என்பது நோய் வந்த பிறகு சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் சென்று பெறுகின்ற



2002 ஏப்ரல் 1 ]

அந்த வசதியைக் கொண்டது. எனவே, ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பணியாளர்கள் வீடு தேடிச் சென்று சுகாதாரச் சேவை செய்கிறார்கள். ஆனால் மருத்துவமனைக்கு நோய் வந்தவர்கள் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். எனவே, இந்த வகையிலே ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக மாற்றுகின்றபோது அங்கே பணியாற்றுகின்ற சுகாதாரப் பணியாளர்கள் ஆய்வாளர்கள், சுகாதார கிராமச் செவிலியர்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்கின்ற அந்தச் சூழ்நிலை ஏற்படும். இதனால்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களை எப்போதும் அரசு மருத்துவமனையாக மாற்றுவதில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கீரனூரிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துகின்ற அந்த அடிப்படையின்கீழ் 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 30-3-2002 அன்று எங்கள் மாவட்டமாகிய தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்திருந்தார்கள். சங்கரலிங்கபுரத்திலுள்ள, பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ரூபாய் 13,33,700-ஐ வழங்கி அந்த மக்களின் துயரைத் துடைத்து, ஆறுதல் கூறி வந்த எங்களுடைய இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய வினாவை எழுப்புகிறேன். தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கழுகுமலை கிராமத்தில், கழுகுமலைப் பேரூராட்சியில் சுமார் 12 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். மொத்த population 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ள ஒரு சூழ்நிலை உள்ளது. அங்கே அரசு மேல்நிலைப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளிகள் மற்றும் அரசின் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதி, பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி ஆகியவை உள்ளன. மேலும் தீப்பெட்டித் தொழில் செய்யும் ஏழை மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மைய மருத்துவமனையிலே ஒரு டாக்டரும், ஒரு பெண் டாக்டரும், ஒரு செவிலியரும் ஒரு மருந்தாளுநரும்தான் இருந்து வருகிறார்கள். ஆகையினால், அந்த மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்ற முடியாவிட்டாலும், ஆரம்ப சுகாதார நிலைய மையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியமைத்துத் தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழுகுமலை ஆரம்ப சுகாதார நிலையமும் தரம் உயர்த்தப்படும் பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான கடையநல்லூரில் உள்ள இடைகால் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட வசதியோடு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 47, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**47—**

**குடிநீர் குழாய் அமைத்தல்**

***1497—திரு.வி.கே. லட்சுமணன்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பில்லூர் அணையிலிருந்து தனியாக ஒரு பிரதானக் குடிநீர்க் குழாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பில்லூர் மற்றும் சிறுவாணி அணையை நீர் ஆதாரமாகக் கொண்டு தற்போது கோவை மாநகராட்சிக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கோவை மாநகராட்சியினுடைய மக்களின் எதிர்காலத் தேவைக்காக பில்லூர் 2-வது குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கு சிறுவாணி மூலமாகவும், பில்லூர் திட்டம் மூலமாகவும் தண்ணீர் வழங்கப்பட்டாலும், சிறுவாணித் திட்டம் என்பது புவியீர்ப்பினாலே வரக்கூடிய நீர்த் திட்டம். அதேசமயத்திலே பில்லூர் திட்டம் என்பது விசைப் பம்பினாலே தண்ணீர் ஏற்றப்பட்டு கோவைக்கு வருகிற ஒரு குடிநீர்த் திட்டம். இந்த பில்லூர் திட்டத்திலே போடப்பட்டிருக்கிற குழாய்கள் அடிக்கடி உடைந்து போகின்ற காரணத்தினாலே கோவை மக்கள் இப்போது தண்ணீர் இல்லாமல் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகையினாலே, புதிதாகப் போடப்படுகிற, இந்த பில்லூர் திட்டக் குழாய்கள் ஸ்டீல் குழாய்களாகப் போடப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக இப்போது மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. அது இரும்புக் குழாய்களா அல்லது வேறு எந்தக் குழாய்கள் என்பதற்குத் துறையிலிருந்து சரியான பதில் கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே. சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்திற்கு சிறுவாணி அணையிலிருந்தும், பில்லூரிலேயிருந்தும் குடிநீர் வழங்கப்பட்டு வருவதையொட்டி எழுப்பியுள்ள இந்த வினாவில், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல, இந்த இரண்டாவது திட்டத்தை, அதாவது பில்லூரிலேயிருந்து ஊராட்சிப் பகுதிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளுக்கு வருகிற அந்தத் திட்டத்தை இரும்புக் குழாய்களின் மூலமாகவே அமைத்தால்தான் பாதிப்பு இல்லாத நிலையிலே மக்களுக்கு விநியோகிக்க வழி கிடைக்கும். இன்றும், நேற்றைய தினத்திலேயும் 8 இடங்களுக்கு மேற்பட்ட இடங்களில் அங்கே சாலை மறியல், குடிநீருக்காக ஜனங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பில்லூர் குடிநீர்த் திட்டப் பகுதியிலே குழாயிலே பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் பழுது பார்ப்பதற்காக 2 நாட்கள் தண்ணீர் விநியோகம் இருக்காது என்றும் நேற்று செய்தி வெளி வந்திருக்கிறது. இன்றும் நாளையும் தண்ணீர் வராது. கோடைக்காலம் தொடங்கக்கூடிய நிலையிலே ஜனங்களுடைய போராட்டங்கள் ஆங்காங்கே வருவதைத் தடுக்கிற வகையில் அதுபோன்ற உடைப்புகள் இதர பாதிப்புகள் வராத வகையிலே, அமைக்கின்ற அந்த

அடுத்த குடிநீர்த் திட்டமானது மிகுந்த பாதுகாப்புடன் அமைக்கப்பட வேண்டுமென்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன். இதற்காகக் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உரிய ஆணைகளை உள்ளாட்சித் துறையே பொறுப்பெடுத்து நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தெரிவித்து எதிர்காலத்திலே அவர்களுடைய கோரிக்கைகள் பற்றிச் சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லூர் திட்டம் என்பது; அதாவது அத்திக் கடவுத் திட்டம் என்பது கோவை மாநகராட்சிப் பகுதிக்கு மட்டுமல்லாமல் கோவை மாவட்டத்திலுள்ள பல்வேறு ஊரகப் பகுதிகளுக்கும் தண்ணீர் எடுத்துச் செல்கிற திட்டம். இன்னும் சொல்லப்போனால், காங்கேயம் வட்டம் வரைக்கும் தொடுகின்றது. பொங்கலூரினுடைய கடைசி ஊருக்குக்கூடச் செல்கிற திட்டம் அந்தத் திட்டம். அதிலே, குழாய்களின் அழுத்தம் காரணமாகவும், தரக் குறைவின் காரணமாகவும் அடிக்கடி உடைப்பெடுத்து விடுகிறது. தண்ணீர் செல்வதில்லை. எனவே, தரமான குழாய்களாக மாற்றியமைத்துத் தங்குதடையில்லாமல் சீராகத் தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரை சுமார் 100 கோடி ரூபாய் வரை திட்டம் தயார் செய்யப்பட்டு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்தமட்டில், எதிர்காலத்திலே பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கு இரும்புக் குழாய்கள் பதிப்பதாக இருந்தால் அது தொடர்பாகக் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அதிகாரிகள் பரிசீலிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி இரண்டு பகுதி. ஒரு பகுதி ஏற்கெனவே இருக்கின்ற திட்டத்தைப் பற்றிதான் நான் கேட்டேன். திரு வி. கே. லட்சுமணன் அவர்கள் இப்பொழுது புதியதாகப் போடுகிற குழாய்கள் பற்றிக் கேட்டார்கள். ஏற்கெனவே போட்டிருக்கிற குழாய்கள் தரக்குறைவின்



காரணமாக, தண்ணீர் அழுத்தத்தின் காரணமாக உடைப்பெடுத்துவிடுகின்றன. எனவே, உடைப்பெடுத்த அந்த இடங்களிலே குறைந்தபட்சம் தரக்குறைவான அந்தக் குழாய்களை மாற்றியமைத்து, சீரான குடிநீர் விநியோகத்திற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி குழாய்களில் பழுது ஏற்படுவதாகக் கூறினார்கள். துறையின் மூலம் நல்ல தரமான குழாய்கள் பதிப்பதற்கும், பாதிப்பு ஏற்படாத வகையில் அந்தக் குழாய்களைச் சீர்செய்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆளுநர் உரையிலே நூறும் அதற்கு மேற்பட்டும் மக்கட்தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புப் பகுதிக்கும் குறைந்தபட்சம் ஒரு பொதுக் குடிநீர்க் குழாய் வழங்கப்படும் என்று அரசு தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. ஆனால், கோவை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலும் பொதுக் குடிநீர்க் குழாய் அமைக்க இயலாது, அதற்கு உலக வங்கியின் நிபந்தனைகள் தடையாக இருக்கின்றன என்று பிடிவாதமாக அதற்கு உத்தரவு வழங்க மறுத்து வருகின்றார்கள். வேண்டுமானால், அவரவர்கள் தனியாக இணைப்புப் பெற்றுக்கொள்ளச் சொல்லுங்கள் என்று கூறுகிறார்கள். சேரிப் பகுதியிலே வாழும் மக்களாகட்டும், நடுத்தர மக்களாகட்டும், 10,000 ரூபாய், 15,000 ரூபாய் என்று பெரும் தொகையைச் செலுத்தித் தனியாகக் குடிநீர் இணைப்புப் பெற இயலாத நிலையிலே இருக்கின்றனர். ஆகவே மாநகராட்சிகளுக்குப் பொதுக் குடிநீர்க் குழாய் அமைத்துத் தருவதற்குரிய உத்தரவினை இந்த அரசு பிறப்பிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பொதுக் குழாய்களின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நீராதாரத்தைப் பொறுத்து, அந்தப் பகுதியிலே, தனிப்பட்ட ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுப்பதற்குத் தண்ணீர் அதிகமாக இருந்தால்தான் பொதுக் குழாய் மூலம் வழங்கப்படும். தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்றபொழுது பொதுக் குழாய்கள் மூலம் வழங்குவதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களுக்குத் தண்ணீர்த் திட்டம் கொண்டுவரும்பொழுது, அந்தத் தண்ணீரை பல கிராமங்கள் வழியாக நாம் கொண்டுவர வேண்டி உள்ளது. கோடைக்காலங்களிலும் தண்ணீர் பற்றாக்குறைக் காலங்களிலும் கிராமத்து மக்கள் குழாய்களை உடைத்துத் தண்ணீரை எடுப்பதுடன் தண்ணீரை வீண் செய்கிறார்கள். அதன்பொருட்டு, இந்த அரசு தண்ணீர்த் திட்டங்களைக் கொண்டுவரும்போது, கிராம மக்களுக்கும் ஒரு இணைப்பைக் கொடுத்து அவர்களும் பயன்பெறும் வகையிலே செயல்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியிலேயுள்ள கிராமப்புறப் பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுப்பது நடைமுறையிலே இருந்து வருகின்ற பழக்கம் ஆகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கிராமத்திலே, எந்தப் பகுதியிலே அவ்வாறு பிரச்சினை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே Borewell போட்டாலும் தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது. அதற்குப் பதிலாகக் கிணற்றை வெட்டித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** Borewell போடுவது என்பது 100 அடிக்கு, 200 அடிக்கு ஆழமாக போட்டுத் தண்ணீர் இல்லை என்றால் கிணறு வெட்டுவதற்கு — மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிணற்றை வெட்டினால் பாறையிலேதானே கிணற்றை வெட்ட முடியும். அவ்வாறு கிணற்றை வெட்டி தண்ணீர், பாதுகாக்கப்பட்ட குடிநீர் இருக்கும் என்று சொன்னால்—மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பற்றிச் சிந்திக்கப்படும். கிணறு வெட்டி, அந்த இடத்தில் தண்ணீர் இருக்கிறது என்று எந்த இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றார்களோ அந்த இடத்திற்கு அரசு முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.



2002 ஏப்ரல் 1 ]

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஏற்கெனவே துறையிலேயிருந்து பைப் எல்லாம் சப்ளை செய்தார்கள். இடையிலே ஒப்பந்தக்காரர்களே பைப்களை வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவை மாற்றி அமைத்திருக்கின்றார்கள். அதனாலே, பல இடங்களிலே தரமில்லாத குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மீண்டும் அரசுத் துறை வாயிலாகவே அந்தப் பைப்களைக் கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் மூலமாகத் தற்போது குழாய்கள் வாங்கி விநியோகம் செய்வதில்லை. ஒப்பந்தங்கள் விடுகின்றபோது, ஒப்பந்தக்காரர்களே தரமான குழாய்களை வாங்கிப் பயன்படுத்த வேண்டுமென்றுதான் இந்தத் துறையினுடைய விதிமுறையில் இருக்கிறது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்திலே தரமற்ற குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அது சம்பந்தமாக எழுத்துபூர்வமாக எழுதிக் கொடுத்தால், அந்தக் குழாய் பதிப்புப் பணியைச் செய்த ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அதை மேற்பார்வையிட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**48—**

## குடிநீர் வழங்கல்

***3490—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-2 தொகுதிக்குட்பட்ட கொண்டப்பன் நாயக்கன்பட்டி ஊராட்சிப் பகுதி முழுவதும் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் இரண்டாவது தொகுதிக்கு உட்பட்ட கொண்டப்பன் நாயக்கன்பட்டி மற்றும் செட்டிச்சாவடி ஊராட்சியைச் சேர்ந்த குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 52.99 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரண்டாவது தொகுதி, கொண்டப்பன் நாயக்கன்பட்டி மற்றும் செட்டிச்சாவடி ஊராட்சியைச் சேர்ந்த பகுதிகளிலே அந்தப் பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கோடை காலமாக இருக்கிற காரணத்தினால் அந்தப் பணியை விரைவாகச் செய்வதற்கும் அதைப்போல அந்தப் பகுதியில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்படுகிற வகையிலே கூடுதலாக பைப் வழங்கி, அனைவருக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். இந்தத் திட்டத்திலே ஏற்கெனவே அந்த ஊராட்சிப் பகுதியிலே இருக்கிற மேல்நிலைத் தொட்டிகள் மட்டுந்தான் சேர்க்கப்பட்டு, செயல்படுத்தப்பட இருக்கிறது. கண்டிப்பாக அங்கே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக மேல்நிலைத் தொட்டிகளைக் கட்டி, அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயன் பெறுகிற வகையிலே குடிநீர் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் மேல்நிலைத் நீர்தேக்கத் தொட்டி கட்ட வேண்டுமென்று எழுத்துபூர்வமாக எழுதிக் கொடுக்க முன்வருவார்களேயானால், அது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதிகமான குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனியப்பன், மூலக் கேள்வி சேலம் சம்பந்தப்பட்டது.



2002 ஏப்ரல் 1 ]

வினா எண் 49, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**49—**

## கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம்

***5900—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு.ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் தற்போது மிகப் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தப் பகுதியில் இருக்கிற பிரதம நிலவள வங்கிகள், ஆரம்பக் கூட்டுறவு வங்கிகள், P.A.C.B.-க்கள் எல்லாம் மிக நவீனமான கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆனால் இவற்றை நிருவகிக்கிற அதிகாரிகளுக்குச் சரியான கட்டடம் இல்லாத ஒரு குறை இருக்கிறது. மேலும் இந்தப் பகுதியினுடைய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இது இருக்கிறது. எனவே, அந்தக்

கட்டடத்தைக் கட்டி வழங்குவதற்கு நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள 29 மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்கள், 63 சரக துணைப் பதிவாளர் அலுவலகங்கள், இரண்டு இணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்), 35 துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) ஆகியோர் அலுவலகங்கள் எல்லாம் நிதியில்லாத காரணத்தினாலே வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. நா. சந்திரமோகன், திரு. வெ. ஏழுமலை, திரு. மே.ப. காமராஜ், திரு. கே.சி. கருப்பணன் மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**50—**

### கிராமக் கூட்டுறவு வங்கி

***5920—திரு. நா. சந்திரமோகன்:**

**திரு. வெ. ஏழுமலை:**

**திரு. மே.ப.காமராஜ்:**

**திரு. கே.சி. கருப்பணன்:**

**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமக் கூட்டுறவு வங்கிகளில் வேலை செய்யும் செயலாளர்களை அரசு ஊழியர்களைப் போல் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பணி மாற்றம் செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் செயலாளர்களைப் பொதுப் பணிநிலையின் கீழ் (Common Cadre of Service) கொண்டு வந்து பணிமாற்றம் செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 75(I)-ன்கீழ் வழிவகை உள்ளது. இதனடிப்படையில் இவ் வங்கிகளில் பணிபுரியும் செயலாளர்களை மாவட்ட அளவில் பணிமாற்றம் செய்வது குறித்து பொதுப் பணி நிலை ஏற்படுத்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்துக் கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரத் தேவையில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-50)

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் இதய தெய்வம் எனது தாயை வணங்குகின்றேன். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரியும் செயலாளர்கள் தாங்கள் ஓய்வு பெறும் வரையிலும் ஒரே தொடக்க வேளாண்மை வங்கியிலேயே நிரந்தரமாகப் பணியாற்றி வருவதால் அந்தந்த வங்கிகளில் பெருமளவில் முறைகேடுகளும், கையாடல்களும் நடைபெறுவதற்கு ஏதுவாகிறது. பொது விநியோகத் திட்டம் மூலம் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களும் பொது மக்களுக்குச் சரிவரக் கிடைப்பதற்கு வழி இல்லாமல் போக வாய்ப்பு உள்ளது. மேலும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்களும் முறையாகத் தரப்படாமல் முறைகேடுகள் நடக்க வாய்ப்பு உள்ளது. பொது மக்களின் நலன் கருதி அரசு ஊழியர்களைப் போல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அந்தந்த வங்கிச் செயலாளர்களை வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பணிமாற்றம் செய்தால் நிர்வாகம் சீர் அடைந்து செம்மையாகச் செயல்பட முடியும். எனவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலாளர்களைப் பணி மாறுதல் செய்ய அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொல்லியிருக்கின்ற அந்த விவாதத்தின் அடிப்படையிலேதான் கூட்டுறவுத் துறை, அரசு ஆணை எண் 55,

நாள் 20-3-2000-ல் இவர்களையெல்லாம் அந்தப் பொது (Common) Cadre-லே கொண்டு வந்து பணிமாற்றம் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய அரசு ஆணை வெளியிடப்பட்டது. ஆனால் அந்த ஆணையை எதிர்த்து அந்தச் செயலாளர்களெல்லாம் சென்னை உயர்நீதிமன்றத்திலே 20-4-2000-லே தடை ஆணை வாங்கியதால் இதைச் செயல்படுத்துவதிலே சற்றுத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு விரைவாக அந்தத் தடை ஆணையை விலக்கி அதைச் செயல்படுவதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** நான் வணங்கும் அன்னை, நடமாடும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டப் பிரிவு 75-ன் படியும் உச்ச நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புகளின்படியும், தவறு செய்கின்ற செயலாளர்களை மாற்றலாம் என்பதன் அடிப்படையிலே இதுவரை கூட்டுறவுச் சங்கங்களிலே தவறு செய்து இருக்கின்ற அல்லது முறைகேடு செய்து இருக்கின்ற எத்தனை செயலாளர்கள் இந்தச் சட்டப் பிரிவின்படி மாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கைப் பிரிவின் மூலம் ஆண்டுக்கு ஒருமுறை தணிக்கை செய்து அறிக்கை கூட்டுறவுச் சங்க நிர்வாகத்திடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்த அறிக்கையின் மீது நிர்வாகத்தின்மூலம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அரசு அப்படியே வைத்துவிட்டு இருக்கின்ற காரணத்தினால் அந்த Audit objection-ல் சொல்லப்பட்டிருக்கின்ற குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. எனவே, அந்த வங்கிகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தக் குறைபாடுகளைப் போக்க தணிக்கை செய்து, Audit objection report கொடுக்கின்ற அந்தத் தணிக்கையாளர்கள் மூலமே அதனை நிவர்த்தி செய்ய இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்கிறபோதே இந்த வழக்கு உயர் நீதிமன்றத்திலே இன்னும் நிலுவையிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். இருந்தாலும் உறுப்பினர் சொல்லி இருக்கின்ற இந்தக் கோரிக்கைகளைப் பற்றி எல்லாம் தனியாக, யார் எல்லாம் அப்படித் தவறு செய்கிறார்கள் என்ற விவரத்தைத் தெரிவித்தால் புரட்சித் தலைவியின் அரசு கடுமையாக நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவு வங்கியில் வேலை செய்யும் செயலாளர்கள் சில இடங்களில் சில தவறுகளைச் செய்கிறார்கள். பல இடங்களில் கிராமக் கூட்டுறவு வங்கி நட்டம் அடைவதற்குச் செயலாளர்களே காரணமாக உள்ளனர். அந்தச் சூழ்நிலையில் மேல் அதிகாரிகள் விசாரணையின் பேரில் தற்காலிகப் பணிநீக்கம் செய்து மீண்டும் அதே கிராமக் கூட்டுறவு வங்கியில் பணி அமர்த்துவதால் அந்த வங்கி இலாபகரமாக இயங்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, அரசு ஊழியர்களைப் போல மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பணி மாற்றம் அல்லது புகாரின் அடிப்படையில் வேறு இடத்திற்கோ அல்லது வேறு மாவட்டத்திற்கோ பணி மாறுதல் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலிலே தெளிவாகச் சொல்லிவிட்டேன். இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்காகத்தான் அரசாணை எண் 55 போடப்பட்டு இருக்கிறது. அந்த அரசாணையை எதிர்த்துத்தான் செயலாளர்கள் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள். அந்த வழக்கினை விரைவிலே முடிவுக்குக் கொண்டு வந்து உறுப்பினர்கள் எண்ணத்தை நிறைவேற்றுகிற வகையிலே அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகின்றேன். எனது தொகுதியில் தாழ்த்தப்பட்ட, நடுத்தரப்பட்ட விவசாயிகள் அந்தச் செயலாளர்களால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால், ஊராட்சிக்கோட்டை விவசாயக் கூட்டுறவு வங்கியில், கடந்த 5, 6 ஆண்டு காலமாக ஒரு செயலாளர் அவர்கள், பல விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் லோன் தருவதாகச் சொல்லி, 2 Vouchers-ல் கையெழுத்து வாங்கிக் கொண்டு, ஒரு Voucher-ஐ வைத்து விவசாயிகளுக்கு உரத்தையும் பணத்தையும் சேர்த்து 25,000 ரூபாய் அளவுக்குத் கொடுத்துவிட்டு, மீதி 25,000 ரூபாய்க்கு இன்னொரு voucher-ல் தனியாகக் கையெழுத்து வாங்கி, அவர் அந்தப் பணத்தை எடுத்துவிடுகிறார். அதேமாதிரி 14.00 இலட்சம் ரூபாயை . . .

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டை அமைச்சர் அவர்களிடம் எழுதிக்கொடுங்கள். என்ன கேள்வி என்பதை மட்டும் கேளுங்கள்.

**திரு. கே.சி. கருப்பணன்:** அதேமாதிரி ஏமாற்றி' இருக்கிறார்கள். அதற்காக அவர்களைக் கூடிய விரைவில் பணி மாற்றம் செய்ய அரசாணையை மாற்றி, கோர்ட் தடையை நீக்கி, அந்த விவசாயிகளைக் காப்பாற்ற அம்மா அவர்கள் ஆணையிடுவார்களா என்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைகளையெல்லாம் போக்குவதற்கு விரைவான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற செயலாளர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையிலே குற்றச்சாட்டுகள் இருக்கும் என்றால், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயம் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், விரைவாக இதற்கு ஒரு தீர்வை காண இந்த அரசு முனைப்போடு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் பெரும்பாலும் நட்டத்திற்குக் காரணமாகச் செயல்படுவது, அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துவது, ஏழையெளிய மக்களைத் துன்புறுத்துவது ஆகிய அனைத்துக் காரணங்களுக்கும் மிக முக்கியமான பொறுப்பு வகிக்கக்கூடியவர்கள் செயலாளர்கள். இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, அரசாணை எண் 55-லே திருத்தத்தைக் கொண்டு வந்து அவர்களை மாற்றுவதற்கு முந்தைய அரசு நடவடிக்கை எடுத்தபோது, நீதிமன்றத்திலே அதற்கான வழக்கு நிலுவையிலே இருக்கிறது என்று தெளிவான பதிலைச் சொன்னார்கள். அப்படிப் பொது மக்களுக்குத் துன்பங்களை விளைவிக்கக்கூடிய அந்தச் செயலைச் செய்பவர்களை மாற்றுவதற்கு அந்த அரசாணை போதவில்லையென்றால், இன்றைய அரசு அந்த அரசாணையை மாற்ற, நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய இந்த வழக்கை விரைவாக முடிக்க என்ன நடவடிக்கையை இந்த 10 மாத காலத்திலே எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அமைந்ததற்குப் பின்னாலே, இந்த அரசாணையை உறுதிப்படுத்துவதற்கு, உயர் நீதிமன்றத்திலே ஆணை பெறுவதற்காகத் தக்க விவரங்கள் அரசு வழக்கறிஞர்களுக்குக் கொடுக்கப்பட்டு, நினைவூட்டும்



2002 ஏப்ரல் 1 ]

செய்யப்பட்டிருக்கிறது. விரைவாக அதை முடிப்பதற்கு அரசு வழக்கறிஞரும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். விரைவிலே இது முடிவிற்கு வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று தனிப்பட்ட முறையிலே செயலாளர்களைப் பற்றி, தவறுகள் இருக்கும் என்றால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், இந்த நீதிமன்ற ஆணை வருவதற்கு முன்னாலே தனிப்பட்ட முறையிலே, விசாரணையின் பேரிலே அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலில், Common Cadre என்ற அடிப்படையிலே கொண்டு வந்து Selection நடத்தப்படும் என்று சொன்னார்கள். 1983-ஆம் ஆண்டு நாம் இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை இயற்றினோம். இன்றைய நிதியமைச்சர் அவர்கள், அன்றைக்கு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தார்கள். அந்தச் சட்டத்திலே Common Cadre, Common Selection Board ஆகிய இரண்டு பிரிவுகளையும் சேர்த்து அந்தச் சட்டம் இயற்றப்பட்டது. அந்தச் சட்டம் இயற்றப்பட்டு 5 ஆண்டுகளுக்குப் பின்னாலேதான், 1988-ஆம் ஆண்டு கூட்டுறவு விதிகள் அங்கீகரிக்கப்பட்டு, சட்டமாக வந்தது. இதுவரை அந்த Common Cadre, Common Selection Board செயல்படுத்தப்படவில்லை, நடத்தப்படவில்லை. Common Cadre உருவாக்கப்படவில்லை. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற கூட்டுறவு இயக்கங்களை ஆங்காங்கே இருக்கின்ற தலைவர்கள், நிர்வாகிகள், நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்கள். 'Co-operation is the Golden via Media between Socialism and Capitalism' என்று சொல்வார்கள். கிராமப்புற மக்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய இயக்கம், கூட்டுறவு இயக்கம். அந்த இயக்கம் சிறப்பாக நடைபெற்றால் இப்போது சமுதாயத்தில் நிலவுகிற பல்வேறு சூழ்நிலைகளுக்கு அது பரிகாரமாக அமையும். . . . .

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. பாரமலை:** அப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கம், இன்று நிர்வாக ரீதியாகச் சரியாக இல்லாத காரணத்தினாலேதான் பல கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டிருக்கின்றன; கடன் வழங்குகிற தகுதியையும் இழந்திருக்கின்றன. அதனால் மக்கள் பெரும் அவதிக்கு

உள்ளாகியிருக்கிறார்கள். பொதுவாகச் சொல்வார்கள்; ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒருவர் தலைவராக வந்துவிட்டால், ஒன்று அவர் இறக்க வேண்டும் அல்லது குற்றத்திற்காக அவர் தண்டிக்கப்பட வேண்டும். இதில் எது முந்துகிறதோ, அதுவரை அவர்தான் தலைவர் என்று சொல்வார்கள். இப்போது கூட்டுறவுச் செயலாளர்களாக வருகின்றவர்கள் அவர்கள் இறக்க வேண்டும் அல்லது கையாடல் செய்ததற்காகத் தண்டிக்கப்பட வேண்டும். இதில் எது முந்துகிறதோ அதுவரை அவர்தான் செயலாளர் என்ற நிலையில்தான் இருக்கிறார்கள் ஆகவே, இந்த நிலையை மாற்ற, Common Cadre, Common Selection Board, கொண்டு வருவதற்கு அரசு விரைவான முயற்சியை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒழுங்கீனங்களையெல்லாம் மாற்றுவதற்காகத்தான் அரசாணை எண் 55 போடப்பட்டு, அது வழக்குமன்றத்திலே நிலுவையில் இருக்கிறது. விரைவிலே அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. ப.வெ. தாமோதிரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**51—**

## முதியோர் உதவித் தொகை

***4942—திரு. ப.வெ. தாமோதிரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், எரிசனம்பட்டியில் முதியோர் உதவித் தொகையைக் கேட்டு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு உதவித் தொகையை அரசு வழங்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.





(ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், எரிசனம்பட்டி கிராமத்தில் 54 நபர்கள் முதியோர் உதவித் தொகை பெற்று வருகிறார்கள். மேலும் பெறப்பட்ட 35 விண்ணப்பங்களில், 18 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு, மீதமுள்ள 17 விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர்கள் உதவித் தொகை பெறும் வயதினை அடையாததாலும், சொந்த பூமி/வீடு உள்ளதாலும் மகன் ஆதரவு உள்ள காரணத்தினாலும் நிராகரிக்கப்பட்டன.

**திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே எங்களுக்கெல்லாம் பேசுவதற்கு வாய்ப்பினை ஏற்பாடு செய்து கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி, முதலிலே அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாய்தந்தையரைக் கவனிக்காத ஆண் வாரிசுகள் இருந்தாலும், அத்தகைய முதியோருக்கும் உதவித் தொகை கிடைப்பதற்கும், வழங்கப்படுவதற்கும் எங்கள் இதய தெய்வம், தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவோடு இதைப் பரிசீலிக்குமா; அதேபோல, தமிழகத்திலே முதியோர் உதவித் தொகைப்பெற்று, இதுவரை எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்பதையும், இதில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு, மாநில அரசின் பங்கு எவ்வளவு, என்பதையும் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 வயது நிரம்பியுள்ள ஆண் மகன் சம்பாதிக்கிறபோது பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற உணர்வு இயற்கையாகவே ஆண் மக்களுக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் அரசு இப்படி ஒரு கட்டுப்பாடு வைத்திருக்கிறது. இனிமேலாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாக ஆண்களும் பெற்றோரைக் கவனிக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக அறிவுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மாநில அரசினுடைய பங்கு 125 ரூபாய்; மத்திய அரசினுடைய பங்கு 75 ரூபாய்; மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து அளிக்கக்கூடிய மொத்த ஊதியத் தொகை, ஒரு மாதத்திற்கு, முதியவர்களுக்கு 200 ரூபாய் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓய்வூதியம் என்பது, வயது முதிர்ந்தவர்களுக்கு, வாழ

முடியாதவர்களுக்கு வாழ்வதற்காக அரசாங்கம் கொடுக்கின்ற ஒரு ஊக்கத் தொகை. அது மாதாமாதம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இரண்டு மாதத்திற்கு ஒருமுறை, மூன்று மாதத்திற்கு ஒருமுறை, சிலருக்கு ஆறு மாதங்களுக்குக்கூடக் கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கடந்த காலங்களில் இருந்த பிரச்சினை. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தி, வயது முதிர்ந்த முதியவர்களுக்கு, எந்தவித கால அவகாசமுமின்றி, மனு செய்த உடனேயே விசாரணைக்கு உட்படுத்தி உடனே அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படி எந்தப் பகுதியிலாவது இதுபோன்ற குறை இருந்து, எழுதிக் கொடுப்பாரேயானால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

*முற்பகல் 11-05*

**திரு. வி.கே லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை வழங்கும் பணியானது கணினிமயமாக்கப் பட்டிருக்கிறதா? இல்லையென்று சொன்னால், அப்படிச் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவர்களுடைய சொந்தப் பொறுப்பிலே மாவட்டத்திலே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் உள்ளடக்கி கணினிமயமாக்கி வைத்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் இப்போது எல்லா மாவட்டங்களிலும் அந்த வசதி வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். நிதியாதாரத்தை மனதிலே வைத்து அதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.



**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முதியோர் உதவித் தொகையைப் பெற்று வந்தவர்களுக்கு கடந்த கால ஆட்சியில் ஜனவரி மாதத்திலிருந்து திடீரென்று நிறுத்தி விட்டார்கள். ஏற்கெனவே முதியோர் உதவித் தொகையைப் பெற்று வந்தவர்களுக்கு, திடீரென்று நிறுத்துகின்றபொழுது, என்ன காரணத்திற்காக அந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டது என்று அறிவிக்கவேண்டுமென்று விதிமுறை இருக்கிறதா? தகுதி படைத்தவர்களுக்கு முதியோர் உதவித் தொகையை வழங்காமல் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக நடந்துகொள்கின்ற அந்த அதிகாரிகளின்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை தருவதற்காகவே சில தகுதிகளை அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. தொழுநோயாளிகள், மனநோயாளிகள், பார்வையற்றோர், பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டவர்கள், அவயம் இழந்தவர்கள் ஆகியோருக்கு மட்டும் வயது வரம்பு 60 ஆகும். இதர முதியோர்களுக்கு வயது வரம்பு 65. மிகவும் முதியவராகத் தோற்றம் உள்ளவர்களுக்குச் சான்றிதழ் தேவையில்லை. இது அரசின் உதவித் தொகை வழங்கப்படுகிறவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற தகுதிகளாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற குற்றச்சாட்டின்படி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அரசினுடைய கவனத்திற்குத் தகவல்கள் எதுவுமில்லையென்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**52—**

**சொகுசுப் பேருந்துகள்**

***6478—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்துகளைப் போன்று அரசு சொகுசுப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தமட்டில் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்ற சாதாரண பேருந்துகளை, படிப்படியாக மாற்றி மிதவை, சொகுசு படக்காட்சியுடன்கூடிய பேருந்துகளாக இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி இருக்கின்ற திசைநோக்கி, அவர் மலர்ப்பாதம் பணிந்து வினாவைத் தொடுக்கின்றேன். அரசு சார்பில் சென்னையிலிருந்து சொகுசுப் பேருந்துகள் மற்றும் மிதவைப் பேருந்துகள் எத்தனை இயக்கப்படுகின்றன? அப்படி இயக்கப்படுகின்ற சொகுசுப் பேருந்துகளில் உதாரணத்திற்கு சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தனியார் பேருந்துகளில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது, அரசுப் பேருந்துகளில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக மொத்தமுள்ள 903 பேருந்துகளில் சாதாரண பேருந்துகளாக 351 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சொகுசுப் பேருந்துகள் 304 இயக்கப்படுகின்றன. படக்காட்சியுடன்கூடிய சொகுசுப் பேருந்துகள் 238 இயக்கப்படுகின்றன. ஏர் பஸ் என்று சொல்லப்படுகின்ற மிதவைப் பேருந்துகள் 10 இயக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு சொகுசுப் பேருந்திற்கும், தனியார் பேருந்திற்கும் உள்ள கட்டண வேறுபாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், திருச்சியிலிருந்து சென்னைக்கு அல்லது சென்னையிலிருந்து திருச்சிக்கு தனியார் பேருந்துகள் சொகுசுப் பேருந்துகளுக்கு ரூ. 220 முதல் சமயம்போல, கூட்டத்திற்குத் தகுந்தாற்போல கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால், அரசுப் பேருந்திற்கு ரூபாய் 145 மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அதேபோல, சொகுசுப் பேருந்துகளுக்கும், அரசுத் துறையின் சார்பாக 38 பைசாவும், சாதாரண பேருந்துகளுக்கு 32 பைசாவும், மிதவைப் பேருந்துகளுக்கு மட்டும் 45 பைசாவும் கிலோமீட்டருக்கு என்ற விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 1 ]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளைவிட தனியார் பேருந்துகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்ற நிலையிருந்தும், தனியார் பேருந்துகளில்தான் மக்கள் அதிகமாகப் பயணம் செய்யும் நிலை இருக்கிறது. தனியார் பேருந்துகளைவிட அரசுப் பேருந்துகளில் குறைவான கட்டணம் இருந்தும் மக்கள் அதிகமான அளவில் பயணம் செய்யாத நிலையினை அரசு அறியுமா? இந்தக் குறையினைப் போக்க அரசு முயற்சிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் தனியார் பேருந்துகளைவிட அரசுப் பேருந்துகளில் கட்டணம் குறைவாக இருந்தும், வருவாய் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடுகள் கடந்த காலங்களிலே இருந்தன என்பது உண்மைதான். இப்பொழுது அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நீக்கிட வேண்டும் என்று நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்பேரில், இப்போது பல்வேறு சீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்து அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் களைந்து தரமான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலமாகக் கூடுதல் வருவாயைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்தைவிட தனியார் பேருந்துகளில் அதிகமான பயணிகள் பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தனியார் பேருந்துகளைவிட அரசுப் பேருந்துகளிலே அதிகமான பயணிகளை அபகரித்துக்கொண்டு, அந்தப் பேருந்தை இலாபகரமாக நடத்துவதற்கு கடினமாக உழைத்துக் கொண்டிருந்த ஏறத்தாழ ஆயிரத்திற்கு அதிகமான ஊழியர்களை, அவர்கள் போனஸ் கேட்டார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் வெளியிலே நிறுத்தப்பட்டதன் காரணமாகத்தான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

தமிழ்நாடு ... காப்பகம்
224484

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### (அ) முறையான கடவுச்சீட்டு இன்மையால் கைதாகி வேலூர் சிறையில் உள்ள குவைத் பெண் குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போலி கடவுச்சீட்டு பிரச்சினையில் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் குவைத் பெண் தலால் ஆஸ்மி குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. போளூர் வரதன், திரு. எ.வ. வேலு மற்றும் திரு. லா. சந்தானம் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். கவன ஈர்ப்பாக திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, செல்வி க. பாலபாரதி, திரு. வை. சிவபுண்ணியம் மற்றும் திரு. ஜி.கே. மணி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கை அளிக்கிறார்கள்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவைத் நாட்டைச் சேர்ந்த தலால் ஆஸ்மி என்ற பெண்மணி முறையான கடவுச்சீட்டு இன்றி இந்தியாவிற்கு, கடந்த 21-3-2002 அன்று வந்திருந்தார். முறையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் அவர் சென்னை விமான நிலையத்தில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்ற உத்தரவின்பேரில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு தற்போது அங்கு இருந்து வருகிறார். முறையான கடவுச்சீட்டு மற்றும் விசா ஆகிய ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவில் தொடர்ந்து தங்க முடியாது என்றாலும்கூட, மீண்டும் குவைத் நாட்டுக்குத் திருப்பி அவர் அனுப்பப்பட்டால், அங்கு உள்ள சட்டதிட்டங்களின் அடிப்படையில் அவருக்கு மிகக் கடுமையான தண்டனை கிடைக்க நேரிடும் என்ற அச்சத்தால் அவர் திரும்பிச் செல்ல மறுத்துள்ளார். இந்நிலையில், தலால் ஆஸ்மி என்ற குவைத் நாட்டுப் பெண்மணி இந்தியாவில் தங்குவதற்குத் தனக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்றும், இந்திய குடியுரிமை பெற்றுத் தரப்பட வேண்டும் என்றும், அவர் தனது விருப்பப்படி, தான் நேசித்து வருகின்ற இந்தியரைத் திருமணம் செய்து கொண்டு, இங்கேயே சுதந்திரமாக வாழ உதவ வேண்டும் என்றும் முதலமைச்சராகிய எனக்கு வேண்டுகோள் விடுத்து கோரிக்கை மனு ஒன்றை வேலூர் சிறைத் துறை அதிகாரிகளிடம் அளித்துள்ளார். தான் விரும்பியவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தோடு இந்தியாவிற்கு வந்துள்ள இந்தப்



பெண்மணியின் சோகமான பின்னணி குறித்துச் செய்தி கிடைத்தவுடன் நான் இது குறித்துத் தமிழக அரசின் பொதுத் துறைச் செயலாளர் மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரிடமிருந்து அறிக்கையைப் பெற்று விவரங்களை அறிந்தேன். தற்போது வேலூர் சிறையில் காவலில் உள்ள தலால் ஆஸ்மி என்ற பெண்மணிக்கு சிறு உடல் நலக் குறைவு காரணமாக 30-3-2002 அன்று மாலை வேலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர் குழுவால் சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டது.

(முற்பகல் 11-15

தற்போது மருத்துவமனையில் உள்ள அவரது உடல்நிலை திருப்திகரமாகவே உள்ளது என அறிகிறேன். இந்த நிகழ்வில் மனிதநேயக் கொள்கையின் அடிப்படையிலும், பெண்ணுரிமை உணர்வு மற்றும் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும்தான் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்பதே எனது கருத்து. இருப்பினும், தலால் ஆஸ்மி என்ற குவைத் நாட்டைச் சேர்ந்த இந்தப் பெண்ணுக்கு, இந்தியாவில் தங்குவதற்கு அனுமதி வழங்கவும், அதனையடுத்து இந்தியக் குடியுரிமை வழங்கவும், உரிய அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் உண்டு. குறிப்பாக, மத்திய அரசு சட்டங்களான, வெளிநாட்டுப் பிரஜைகள் சட்டம், 1946 பிரிவு 3 (அ), அதாவது, The Foreigners Act, 1946 Section 3(a) வெளிநாட்டுப் பிரஜைகள் பதிவு செய்த சட்டம் 1939, அதாவது The Registration of Foreigners Act, 1939 மற்றும் இந்தியக் குடியுரிமைச் சட்டம் 1955, பிரிவு 5 (1)(சி), அதாவது Indian Citizenship Act, 1955 Section 5 (1)(c) ஆகிய மத்திய அரசு சட்டங்களின் அடிப்படையில், தக்க அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பெண்மணிக்கு, இந்தியாவில் தங்க அனுமதியும், பின்னர் இந்தியக் குடியுரிமையும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்திப் பரிந்துரை செய்து, மத்திய அரசுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்று தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, குவைத் நாட்டிலிருந்து தக்க ஆவணங்களின்றி இந்தியாவுக்கு வந்துள்ள தலால் ஆஸ்மி என்ற இந்தப் பெண்ணுக்கு முதலில் இந்தியாவில் தங்க அனுமதியும், உடன் இந்தியக் குடியுரிமையும் மத்திய அரசினால் வழங்கப்படும் என்ற அனைவரின் நம்பிக்கையும் விரைவில் ஈடேறும் என்ற எனது எதிர்பார்ப்பினைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2002 ஏப்ரல் 1

**(ஆ) சூளைமேடு பகுதி பாரதிய ஜனதா கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் மற்றோர் அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், (குறுக்கீடுகள்) இதிலே விவாதத்திற்கு இடம் இல்லை.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, bail, No Objection......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் மற்றோர் அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்க உள்ளார்கள். பிறகு பேசுங்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, சூளைமேடு பகுதியிலுள்ள பாரதிய ஜனதா கட்சி அலுவலகம் ஒன்றில், கடந்த 30-3-2002 சனிக்கிழமை இரவு, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவர் சிலருடன் கூட்டமாகச் சென்று, அந்தக் கட்சியின் அலுவலகத்தில் வைத்திருந்த தொலைக்காட்சிப் பெட்டி, மேஜை, நாற்காலி, மின் விசிறி மற்றும் இதரப் பொருட்களைப் பலவந்தமாக எடுத்துக்கொண்டு திரும்பியுள்ளார் என்ற செய்தியைக் கேட்டு, நான் மிக்க அதிர்ச்சியுற்றேன். சட்டத்திற்குப் புறம்பான இத்தகைய செயலைச் செய்துள்ள திரு. சுந்தரம் என்பவர், முன்பு பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவராக இருந்திருக்கிறார். பின்னர், அவர் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், தன்னை இணைத்துக்கொண்டுள்ளார்.

சூளைமேடு பகுதி, பாரதிய ஜனதா கட்சி அலுவலக நிர்வாகிகள் தடுத்தும், அதை அவர் பொருட்படுத்தாமல் தக்க அனுமதியின்றி, அந்தக் கட்சி அலுவலகத்திற்குள் நுழைந்து, அங்குள்ள பொருட்களைச் சூறையாடி, சிலவற்றை எடுத்துக்கொண்ட அவரது செய்கை, சட்டவிரோதமான செயலாகும். இத்தகைய விரும்பத்தகாத செயலைப் புரிந்தவர் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், நான் அந்தச் சட்டத்திற்குப் புறம்பான செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதுபோன்ற அடாத செயல்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எவர் ஈடுபட்டாலும், அதை நான் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள



2002 ஏப்ரல் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

மாட்டேன் என்றும், இத்தகைய சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் அறவே ஈடுபடக்கூடாது என்பதையும் நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். மற்றொரு கட்சி அலுவலகத்திற்குள் நுழைந்து அங்குள்ள சொத்துகளுக்குச் சேதம் விளைவித்து, அங்குள்ள பொருட்களை முறைகேடாக எடுத்து வந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவர் மீது உடனடியாகச் சட்டப்படி தக்க நடவடிக்கை காவல் துறை எடுக்க வேண்டுமென்று, சென்னை மாநகரக் காவல் துறை ஆணையருக்கு உத்தரவிட்டுள்ளேன். மேலும், தனது மோசமான செய்கையினால், கட்சிக்கும், கட்சித் தலைமைக்கும் அவப்பெயர் விளைவித்துள்ள திரு. சுந்தரம் என்பவரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கி உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், திரு. சுந்தரத்துடன் இந்தச் சட்டவிரோதமான செயலில் ஈடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மகிழன்பன், உதயகுமார், மாரிமுத்து, ராஜாபாதர், குபேரன் ஆகிய 5 பேரையும், கழகத்திலிருந்து நீக்கி வைத்துள்ளேன் என்பதையும் அவர்கள்மீதும் காவல் துறை தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துகொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** நான் 6, 7 அறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள் பேசி அதை முடிவு செய்வோம். (குறுக்கீடுகள்) நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. புகழேந்தி.

முற்பகல் 11-20

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை நடைபெற்றபோதே கவன ஈர்ப்பு கொடுத்து இருக்கிறேன்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு அறிவிப்பு தானே, அறைக்கு வாருங்கள் பேசலாம். (குறுக்கீடு) திரு. மணி, என்ன சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா அலுவலகம் தாக்கப்பட்டது சம்பந்தமாக நானும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்து இருந்தேன்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இது கவன ஈர்ப்பு அல்ல. விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**திரு. ஜி.கே. மணி:** அதில் இதைச் சேர்த்துச் சொல்லி இருக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இது கவன ஈர்ப்பு அல்ல. நான் முதலில் சொன்னது நான் அறிவித்த அறிவிப்பு. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை கொடுக்கும்போது கவன ஈர்ப்பாக அதை எடுப்பதில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** குடிநீர்ப் பிரச்சினை குறித்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள் பேசலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சிதம்பரம், தஞ்சாவூர், தாலுகாக்களில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. அது குறித்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எனது ஆய்வில் இருக்கிறது; அறைக்கு வாருங்கள். பேசி முடிவு செய்யலாம். திரு. இ. புகழேந்தி.

## 5. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பினை அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின் தொடக்கத்திலேயே, இரண்டாவது பக்கத்திலேயே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், 2002-2003 ஆம் ஆண்டுக்கான இந்த வரவு செலவுத்





திட்ட உரை, கடந்தகால மரபுகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து சற்று மாறுபட்டதாக இருக்கும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். நடைமுறைகளிலிருந்தும், மரபுகளிலிருந்தும் மாறுபட்டதாக இருக்கும் என்று தொடங்கி இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை மக்களினுடைய நலனுக்கே வேறுபட்டதாக இருக்கிறது என்பதுதான் என்னுடைய வேதனையாகும், வருத்தமாகும். இந்த நிதிநிலை அறிக்கையில் மரபுகளை நாம் பார்ப்பதற்கோ அல்லது நடைமுறைகளை நாம் கவனிப்பதற்கோ இனி வழியில்லை என்கின்றவிதமாக, தொடக்கத்திலேயே அந்த வாசகங்கள் அமைந்திருக்கின்றன. அதன் காரணமாக தமிழ்நாட்டில் இதுவரையில் விதிக்கப்படாத வரியாக, அரிசி, கோதுமை ஆகியவற்றின்மீது 2 விழுக்காடு வரியும், சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் போன்றவற்றுக்கு 4 விழுக்காடு வரியும், வரி விலக்கு செய்யப்பட்டிருந்த சித்தா, யுனானி மருந்துகள் மற்றும் சாம்பிராணி ஆகியவற்றின் மீது 4 விழுக்காடு வரியும், காகிதம், கோதுமைப் பொருட்கள், இரும்பு உள்ளிட்ட 15 வகையான பொருட்களுக்கு நுழைவு வரியும் புதிதாக விதிக்கப்பட்டு இருக்கிறது. தைக்கப்பட்ட கைக்குட்டை, பட்டுப்புடவை ஆகியவற்றிற்கும் வரி விதித்து இருக்கின்ற இந்தச் சூழ்நிலைகள் இதுவரையில் தமிழ்நாட்டில் இல்லாதவை. இப்படி ஒரு சூழ்நிலையை, ஒரு மரபினை, நடைமுறையை இந்த அரசு பின்பற்றி இருக்கிறது. அதன் மூலமாகச் சுமை ஏறி இருக்கிறது என்று நான் கருதுகிறேன். பலமுனை வரியை மீண்டும் கொண்டு வந்திருக்கிறீர்கள். கலைஞர் ஆட்சியிலே ஒருமுனை வரியாக வியாபாரப் பெருங்குடி மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அந்த நிலை மாறி, மீண்டும் பலமுனை வரியாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது இது கடுமை இல்லாத பட்ஜெட் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால், அவர் சொல்லி இருக்கிற அந்தக் கடுமை இல்லாத பட்ஜெட் என்ற அந்த வாசகத்தை அல்லது அந்த அர்த்தத்தை, அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கின்ற நிலையில் இப்போது நாட்டிலே இருக்கக்கூடிய சூழ்நிலைகள் தெரிவிக்கவில்லை. பல்வேறு தரப்பட்ட மக்கள், வியாபாரிகள் மற்றுமுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், நெசவாளர்கள், இன்னுமுள்ள மற்ற துறைகளைச் சார்ந்தவர்கள் போராட்ட அறிவிப்புகளை அறிவித்து இருக்கிறார்கள். ஊர்வலம் போவதும், அதைப்போல உண்ணாவிரதம் இருப்பதும், அரசுக்கு நாங்கள் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம் என்று சொல்வதும், கடுமையை மீண்டும் இங்கே நிலைநிறுத்தி இருக்கிறதே தவிர, அது கடுமை

இல்லாத நிலை என்பதை நாம் ஒப்புக் கொள்வதற்கில்லை. ஆகவே, அதற்கு ஆதாரமான ஒரு சூழ்நிலையைத்தான் இங்கே நான் முதலில் குறிப்பிட விரும்புகிறேன். ஆனாலும்கூட, இந்த நிதிநிலை அறிக்கை மூலமாக மகிழ்ந்து இருப்பவர்கள் யார்? சந்தோஷப்பட்டுப் பூரித்துப் போய் இருப்பவர்கள் யார் தெரியுமா? நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்: மதுபானம் அருந்துபவர்கள்—மதுப்பிரியர்கள்—பெருந்தனக்காரர்களாக இருக்கின்ற தனியார்கள்—தனியார் முதலாளிகள்—இவர்கள் இருவரும் மகிழக்கூடிய நிலையில் புதிய திட்டமாக இந்த அரசின் இந்த நிதிநிலை அறிக்கையில் மிகப் பிரதானத் திட்டமாகக் கொடுக்கப்பட்டிருப்பது, நான் மீண்டும் அந்த வரிகளைக்கூட, வாசகங்ளைக்கூட இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

"இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானத்தை அருந்துவோர், தாம் அமர்ந்து உட்கொள்வதற்கேற்ற இட வசதி வேண்டும் என்று தொடர்ந்து வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளார்கள்." விவசாயிகள் ஊர்வலம் போய்க் கொடுக்கின்ற வேண்டுகோள்கள், ஆசிரியர்கள் கொடுக்கின்ற வேண்டுகோள்கள், அரசு ஊழியர்களின் வேண்டுகோள்கள், நெசவாளர்களின் வேண்டுகோள்கள், மகளிரின் வேண்டுகோள்கள், பெருந்துத் தொழிலாளர்கள், மற்றைய தொழிற்சாலைகளில் பாதிக்கப்படுகின்ற தொழிலாளர் அமைப்புகள் எல்லாம் ஊர்வலமாக, போராட்டங்களைச் செய்து கொடுக்கின்ற அந்தக் கோரிக்கைகள், வேண்டுகோள்களை இந்த அரசு ஏற்றுக் கொள்ளாமல், இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற வேண்டுகோள் எதுவென்றால் உட்கார்ந்து உட்கொள்வதற்கேற்ற இட வசதி.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேதோ குற்றச்சாட்டுகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார்கள். மதுபான உரிமையாளர்கள், மது விற்கும் கடைகளில் பார் திறக்க வேண்டுமென்று எந்தக் கோரிக்கையையும் அரசிடம் வைக்கவில்லை. மதுபானக் கடைகளில் பார் திறப்பதால் இலாபம் அடையப் போகிறவர்கள் மதுபான உரிமையாளர்கள் அல்ல; அவர்களுக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது. இதனால் அரசுக்கு 81.88 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஏதோ தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மதுபானக் கடைகளில் பார்களே நடைபெறாதவண்ணம் இருந்ததுபோல (மேசையைத்



தட்டும் ஒலி)—தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பார்களே நடைபெறவில்லை என்பதைப்போல—மாண்புமிகு உறுப்பினர் இங்கே பூச் சுற்றப் பார்க்கின்றார். எல்லோரையும் ஏமாற்றப் பார்க்கின்றார் (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எல்லா மதுபானக் கடைகளிலும் அங்கீகாரம் இல்லாத, அனுமதி பெறாத பார்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் இலாபம் அடைந்தவர்கள் அன்றையதினம் ஆளுங்கட்சிக்காரர்களாக இருந்த தி.மு.க வினர். அவர்களுக்கு மாதா மாதம் மாமூல் போய்க் கொண்டிருந்தது. இப்போது அந்த மாமூல் வேறு யார் கைக்கும் போகாமல் இருப்பதற்கு இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து சட்டபூர்வமாகவே பார்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கி, அரசுக்கு 81 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட வழி செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொத்தாம் பொதுவாகத் தன்னுடைய எண்ணங்களை, கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது குறித்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நான் அரசியலுக்காக, அரசியல் கருத்திற்காக இதைச் சொல்லவே இல்லை. அன்றைக்கு என்று சொல்கிறபோதுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரோ அல்லது அவருடைய இயக்கத்தினைச் சார்ந்தவர்களோ அதற்கான புகார் கொடுத்திருக்கலாம். இன்றைக்கு நான் குறிப்பிட விரும்புவது அரசின் உத்தரவோடு, அனுமதியோடு பேரூராட்சியிலிருந்து மாநகராட்சி, நகராட்சி உள்பட தலைநகர் வரை, இது நடைபெறும்போது இதன் மூலமாகச்—சட்டம்-ஒழுங்கு சீர்குலையும், நகராட்சி, மாநகராட்சி நிலைகளை விட்டு பேரூராட்சி அளவிலே போகிறபோது எப்படிப்பட்ட கலவரங்களுக்கு எல்லாம் அந்த பார்கள் இடம் கொடுக்கப் போகின்றன என்பதை, சட்டம்-ஒழுங்கு சீர்குலையப் போகிறது என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்கள் திறப்பதனால் சட்டம்-ஒழுங்கு சீர்குலையப் போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அரசை மிரட்டிப் பார்க்கிறார் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டம்-ஒழுங்கு சீர்குலைவதற்கு தி.மு.க.வினரே காரணமாக இருக்கப் போகிறார்கள் என்பதற்கு அவர் கட்டியம் கூறுகிறார் என்றே கருதுகிறேன். அதை அரசு எதிர்கொள்ளும், தேவையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத்

தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பேசுகிறபோது, ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே தெரிவித்தார்கள். அதனால்தான் நான் விளக்கம் கூற எழுந்தேன். இந்தப் பட்ஜெட்டினால் மதுபான உரிமையாளர்களுக்கு, மதுபானத் தயாரிப்பாளர்களுக்குத் தான் இலாபம் என்று சொன்னார். அது தவறான கருத்து. ஏற்கெனவே நான் தெளிவுபடுத்தி விட்டேன். பார்கள் நடைபெறுவதற்கும், மதுபானத் தயாரிப்பாளர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், மலிவு விலை மதுவை இரத்து செய்ததனால் மதுபான உரிமையாளர்களுக்கு நஷ்டம். அந்த மலிவு மது இரகம் கொண்டு வந்ததனால் மதுபான உரிமையாளர்கள்தான் இலாபம் அடைந்து கொண்டிருந்தார்கள். அரசுக்கு இழப்பு ஏற்பட்டுக் கொண்டு இருந்தது. அதனால்தான் அதை இரத்து செய்திருக்கிறோம் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள்.

*முற்பகல் 11-30*

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற ஒரு பொறுப்பு இருக்கிற காரணத்தால் ஒரு விளக்கத்தைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் மேற்கொள்கிற பல்வேறு பணிகளைக் குறித்து அரசாங்கம் கருதுகிற கருத்துக்கு மாறாக இன்னொரு கருத்து மாற்று கட்சியிலோ எதிர்க்கட்சியிலோ இயல்பாக அமையும். நாட்டிலே மக்கள் அனைவரும் ஒரே கருத்தோடு இருப்பதில்லை. ஒவ்வொரு பிரச்சினையைப் பற்றியும் இரண்டுவிதமான கருத்து இயல்பாகவே அமையும். பார் திறக்கிறார்கள் என்று சொன்னால்—அதுபற்றிப் பத்திரிகைகளில் எழுதப்படுகிற கருத்து இது—இந்த பார் திறப்பது காரணமாக அந்த இடத்திலே 10 பேர், 20 பேர் அமரக்கூடிய நிலைமை ஏற்படுகிறபோது, அதனுடைய விளைவாக சட்டம் ஒழுங்கு குலைவதற்கான இயல்பான சூழ்நிலை உருவாகும் என்ற கருத்து பலரால் பேசப்பட்டு இருக்கிறது. பல அறிஞர்களும் தெரிவித்திருக்கிறார்கள். மதுக்கடைகளில் பார்கள் திறப்பது காரணமாக மதுவுக்கு பார் இருப்பதற்கு பதில் ஆனால் இந்த பார் மதுவுக்கு சிறப்புச் சேர்க்கிறது. இந்த பார் அமர்ந்து குடிப்பதற்காக அமைக்கப்படுகிற இந்த பார் சட்டம் ஒழுங்கைக் குலைக்கும் என்று சொன்னால் அந்தக் கருத்தை முதலமைச்சரோ அல்லது



வேறு அமைச்சர்களோ தாராளமாக மறுக்கலாம். ஆனால், அந்த பாரை பயன்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழகம் சட்டம் ஒழுங்கைக் குலைக்க முயற்சிப்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்வார் என்பது, ஒரு எதிர்க்கட்சி நியாயமான ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துவதைக் கூட தாங்கிக்கொள்ள முடியாமல் முதலமைச்சர் அதைக் கண்டிக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறார் என்றுதான் நான் கருதுகிறேன். அது நியாயம் இல்லை என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தங்கள் கருத்துகளைச் சொல்ல எல்லாச் சுதந்திரமும் உண்டு. அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவமும் எங்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. பார்கள் திறக்கப்படும்; அதற்கு அனுமதி அளிக்கப்படும் என்றுதான் பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறோம். இன்னும் பார்கள் திறக்கப்படவில்லை. இன்னும் அதிகாரபூர்வமாகச் செயல்படத் தொடங்கவில்லை. அதற்குள்ளேயே சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும் என்று இவ்வளவு உறுதியாக மாண்புமிகு உறுப்பினர் எப்படிக் கூறுகிறார் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் சொல்வதும் ஒரு கருத்துத்தான். நீங்கள் பார் திறக்கப்படும் என்ற ஒரு கருத்தைச் சொல்கிறீர்கள். திறந்தால் இப்படியெல்லாம் ஏற்படக்கூடும் என்ற ஒரு கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஆளுங்கட்சி சார்பாக ஏற்படவே ஏற்படாது, சட்டம் ஒழுங்கை எங்களால் காப்பாற்ற முடியும் என்று சொன்னால் பிரச்சினை தீர்ந்து விடுகிறது. ஆக இதற்கு ஒரு motive இருப்பதாக, அதுவும் ஆளுங்கட்சியைச் சார்ந்த முதலமைச்சர் அவர்கள் motive கற்பித்து தி.மு.க.தான் வேண்டுமென்றே சட்டம் ஒழுங்கைக் குலைப்பதற்காக இப்படி முன்கூட்டியே பேசுகிறது என்று சொல்வது நான் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதில் எந்தவிதமான குழப்பமோ அல்லது தவறோ எதுவும் இல்லை என்று கருதுகிறேன். காரணம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், "யாரும் எங்களிடம் மனுவோ மற்ற விண்ணப்பமோ

[திரு. இ. புகழேந்தி] [2002 ஏப்ரல் 1

தரவில்லை" என்று சொன்னாலும்கூட 143-வது பாராவில் "தாம் அமர்ந்து உட்கொள்வதற்கு ஏற்ற இடவசதி வேண்டுமென்று தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர்" என்று அந்த வார்த்தை இருந்ததனால்தான் நான் இந்த வாதத்தை வைத்தேன் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல . . .

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வேண்டுகோளை வைத்தது பொதுமக்கள்; கடை உரிமையாளர்கள். ஆனால் அந்த வேண்டுகோளை மதுபானத் தயாரிப்பாளர்கள் வைக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் என்றோ அல்லது மற்றவர்கள் என்றோ இதில் குறிப்பிடவும் இல்லை.

அடுத்ததாக என்னுடைய அடுத்த கருத்திற்கு நான் போக விரும்புகிறேன். நம்முடைய முன்னாள் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் கடந்த ஆளுநர் உரையின்போது விஷ சாராயச் சாவுகள், கள்ளச்சாராயச் சாவுகள், இவற்றிலே இருந்து கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களைப் பாதுகாப்பதற்காகவும், ஏற்கெனவே விற்கக்கூடிய மதுவின் விலை அதிகமாக இருப்பதாலும் மலிவு விலை மதுவை நாங்கள் கொண்டு வந்தோம் என்று ஒரு முறைக்கு இருமுறை இந்த அவையிலேயே குறிப்பிட்டார்கள். இந்த 10 நாட்களுக்குள்ளாக அதிலிருந்து வேறு ஒரு முடிவுக்கு வருகின்றபோது, நான் குறிப்பிட்டுக் கேட்டுக் கொள்ள விரும்புவது. அதை மூடுவது என்பதை நாங்கள் மலிவு விலை மதுவை ரத்துசெய்வது என்பதை, மூடுவது என்பதை—முழுமையாக வரவேற்கக் கூடியவர்கள். ஆனால் அரசினுடைய நிலைப்பாடு என்பதிலே திடீரென்று ஏற்பட்டிருக்கின்ற அந்த மாற்றத்தை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்போது கள்ளச் சாராய, விஷச் சாராயச் சாவுகள் வருகின்றபோது இந்த அரசு முழுமையான நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் நம்புவதா? அல்லது அந்த மலிவு விலை மதுவைக் கொண்டு வருவதற்கு முன்பாக இருந்த நிலையே தொடர்ந்து இருக்கும் என்று இந்த மக்கள் எண்ணிப் பார்ப்பதா? ஆக இந்த இரண்டு வகைகளிலே இந்த அரசினுடைய நிலை என்ன என்பதனைப் பிறகு நம்முடைய முதலமைச்சரோ அல்லது நிதியமைச்சரோ பதில் தருகின்றபோது சொன்னால் நன்றாக இருக்கும் என்று நான்



2002 ஏப்ரல் 1] [திரு. இ. புகழேந்தி]

நம்புகிறேன். அதைப்போல, எதைச் சொன்னாலும் முன்பே சொல்வது என்பதல்ல. நீங்கள் இன்னும் திறக்கவில்லை; இன்னும் முடிவு செய்யவில்லை; ஆனால் திறப்பதற்கு முன்பு, முடிவு செய்வதற்கு முன்பு, பரிசீலனை செய்யுங்கள் என்று எடுத்துரைக்க வேண்டியது; இதிலும் இப்படி நடைபெறலாம் என்று சொல்ல வேண்டியது ஓர் எதிர்க்கட்சியினுடைய கடமை. அந்தக் கடமையின் அடிப்படையிலே நாங்கள் சட்டம்-ஒழுங்கு கெடுவது குறித்து இங்கே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதை நான் இப்போது குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்த இன்னொரு கருத்துக்கு நான் விளக்கம் கூற விரும்புகிறேன். அவரும் இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார். அவருடைய கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. கருணாநிதி அவர்களும் அந்தக் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அரிசி மற்றும் கோதுமைக்கு இந்தியாவில், தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் வரி போடப்படுகிறது என்று முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி குறை கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். மற்ற மாநிலங்களிலும் அரிசி மற்றும் கோதுமைக்கு முதற்கட்ட விற்பனை வரி கீழ்க்கண்டவாறு விதிக்கப்படுகிறது:

அரிசியைப் பொறுத்தவரையில் ஆந்திரப் பிரதேசத்தில் 4 சதவீதமும், கேரள மாநிலத்தில் 1 சதவீதமும், மேற்கு வங்காளத்தில் 2 சதவீதமும், பஞ்சாப் மாநிலத்தில் 4 சதவீதமும், ஹரியானா மாநிலத்தில் 4 சதவீதமும், உத்தரப்பிரதேச மாநிலத்தில் 4 சதவீதமும் விதிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 2 சதவிகித விற்பனை வரி மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது.

கோதுமையைப் பொறுத்தவரையில் ஆந்திரப் பிரதேசத்தில் 4 சதவீதமும், கேரள மாநிலத்தில் 1 சதவீதமும், மேற்கு வங்காளத்தில் 2 சதவீதமும், பஞ்சாப் மாநிலத்தில் 4 சதவீதமும், ஹரியானா மாநிலத்தில் 4 சதவீதமும், உத்தரபிரதேச மாநிலத்தில் 4 சதவீதமும் விதிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 2 சதவீத விற்பனை வரி மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அரிசி மற்றும் கோதுமை மீதான விற்பனை வரி முதற்கட்ட விற்பனையில் மட்டும் விதிக்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறை மூலம் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமைக்கு விற்பனை வரி விதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[ 2002 ஏப்ரல் 1

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் விடுத்திருந்த அந்த அறிக்கையினைக்கூட மீண்டும் ஒருமுறை சரியாகப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சரியாகப் பார்த்தேன். இன்னும் சொல்லப்போனால், இன்று காலை 'இந்து' ஆங்கில நாளிதழில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்த கருத்தை அப்படியே அதில் வெளியிட்டிருக்கிறார்கள். முதன் முறையாக 'For the first time in the country Tamil Nadu Chief Minister Jayalalithaa has introduced sales tax on rice and wheat' என்று அவர் சொன்னதாக ஆங்கிலப் பத்திரிகையிலேயே வந்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது ஒருவேளை தவறாக இருந்தால் அதற்காக முன்கூட்டியே வருத்தம் தெரிவிக்கிறேன். ஆனால், தமிழகத்தில் முதன்முதலாக அரிசிக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை பத்திரிகையில் நான் பார்த்தேன். தமிழகத்தில் கடந்த காலத்தில் இல்லாமல், இப்போதுதான் வெளிமார்க்கெட்டிலே விற்கப்படுகின்ற அரிசிக்கு வரி விதித்திருப்பதாக ஒரு செய்தியை ஏடுகளில் பார்த்தேன். அந்த முதன்முதல் என்பது, இந்த முதன்முதலாக மாறிவிட்டதோ என்று நான் ஐயுறுகிறேன்.

* **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'இந்து' நாளிதழை மீண்டும் ஒருமுறை படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, உங்களது சார்புப் பத்திரிகையான 'தினகரன்' பத்திரிகையில்கூடத் தெளிவாக வந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் முறையாக, தமிழகத்தில்,' அரிசிக்கு, உணவு தானியங்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது என்று கூறினார் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை.

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே வரி விதிக்கப்பட்டிருந்ததா? இப்போது இரண்டாவது முறையாக வரி விதிக்கப்பட்டதா என்று நான் அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 1 ]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுகாறும் விதிக்கப்படாமல், முதல் முறையாக விதிக்கப்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர், உங்களுடைய இயக்கத்தினுடைய தலைவர் கூறவில்லை. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில்தான் முதலாவதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றுதான் கூறி பத்திரிகைகளில் வந்திருக்கிறது. பத்திரிகைகளைப் படித்துப் பார்த்து பிறகு நீங்கள் கூறலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகைகளில் வந்ததற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். பேராசிரியர் அவர்கள் இப்போது அமரலாம். திரு. புகழேந்தி பேசுங்கள்.

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எண்ணம், தமிழ்நாட்டிலே இப்போது முதன்முதலாக வரி விதிக்கப்பட்டதாக ஒரு செய்தியைக் குறித்து நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அந்த அடிப்படையிலேதான் கேட்டோம். பத்திரிகைகளிலேகூட சில நேரங்களில் எங்களுடைய கருத்துகள் தவறாக வருகின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-40*

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு 'இந்து' பத்திரிகையில் வந்த வாசகங்களை இங்கே வாசிக்க விரும்புகிறேன்.

திரு. கருணாநிதி அவர்கள் சொன்னதாக இதில் வெளியிட்டு இருக்கிறார்கள். "The Chief Minister, Jayalalithaa, who had vowed to pitchfork Tamil Nadu to the top slot, could now proudly claim that it was the first State in imposing a levy on rice and wheat.`` என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் தலைவர் கூறியிருக்கிறார். அவரே இதைப் படிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, தினகரன் நாளேட்டிலே வந்திருக்கிறது. "ஆந்திராவிலும் வரி கிடையாது. தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 1

ஆக்கவேண்டுமா? அப்போதுதானே சொல்ல முடியும்; அரிசிக்கு வரி உண்டா? ஆந்திர முதலமைச்சரைப் பார்த்து அரிசிக்கு வரி உண்டா; இல்லை. பாருங்கள், முதல் மாநிலம் நாங்கள்தான்; அரிசிக்கு வரி போட்ட முதல் மாநிலம். கருணாநிதி சொல்கிறாரே, முதல் மாநிலம் அல்ல என்று, நான் முதல் மாநிலமாக ஆக்கியிருக்கிறேனா, இல்லையா பாருங்கள்" என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆந்திராவிலே 4% வரிபோட்டிருக்கிறார்கள். ஆந்திராவில் இல்லையென்று ஆந்திர முதலமைச்சரைப் பார்த்துக் கேட்கிறேன் என்றும் சொல்லி, இல்லாத ஒன்றை, தவறான ஒன்றை, பத்திரிகைக்கு, மக்களுக்குக் கூறி மக்களைத் திசை திருப்புகிற முயற்சியில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஈடுபட்டிருக்கிறார் என்பதுதான் உண்மை நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** எது எப்படியோ முதல் முறையாக அரிசிக்கும், கோதுமைக்கும் நீங்கள் வரி போட்டீர்கள் என்ற பெயர் உங்களுக்கு வந்து சேருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தைப் பேராசிரியர் அவர்களே மறுத்துவிட்டார்கள். திரு. புகழேந்தி பேசலாம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "யதா ராஜா ததா ப்ரஜா" என்ற பழமொழி உண்டு. தி.மு.க.வைப் பொறுத்தவரை திரு. கருணாநிதி அவர்கள்தான் ராஜா. அவரே விவரங்களைச் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் தவறான கருத்துகளை வெளியிட்டுக் கொண்டிருப்பதால்தான், அவருடைய கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் தவறான தகவல்களையே இந்த அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாகச் சொன்னார்களா; சரியாகச் சொன்னார்களா; ஏடுகளிலே வெளிவந்ததிலே வேறுபாடு இருக்கிறதா; என்பதெல்லாம்கூட வேறு. இந்த 2 சதவிகித வரியை நீக்க வேண்டுமென்பதற்குத்தான் இவ்வளவு கூச்சலும், இவ்வளவு பிரச்சினையும், எழுப்பப்படுகிறது. 2 சதவிகித வரி அரிசிக்குப் போட்டிருப்பது பொதுமக்களைப் பாதிக்கும் என்ற எண்ண அடிப்படையிலே எழுப்பப்பட்ட வாதத்திலே, இடையில் வந்த கருத்துகள் எதுவாயினும், நோக்கம் இந்த வரி கூடாது என்பதுதான்.



2002 ஏப்ரல் 1]

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களையும், ஏழை விவசாயிகளையும் பாதுகாக்க வேண்டுமென்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. அரிசி மீது இந்த 2 சதவிகித வரி போட்டதால் ஏழை விவசாயிகளும் பாதிக்கப்படமாட்டார்கள்; ஏழை எளிய பொதுமக்களும் பாதிக்கப்படமாட்டார்கள். இந்த வரியைச் செலுத்தப்போவது மில் நடத்துபவர்கள்; ரைஸ் மில் வைத்து இருக்கிற மில்லர்கள்தான், ஆகவே ஏழை எளிய மக்களுக்கு பொதுவிநியோக முறையின்கீழ் நியாய விலைக் கடைகளில் ரூ.3.50 என்ற விலைக்கே அரிசியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏழை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம், அதிக விலை கொடுத்து. குறைந்த விலையில் அரிசியை விற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த வரியைச் செலுத்துபவர்கள், விற்பனை வரியைச் செலுத்துபவர்கள் வசதி படைத்த மில்லர்கள்தான் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, 3 மணித் துளிகளில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) 11-20க்கு ஆரம்பித்தீர்கள். எல்லா குறுக்கீடுகளையும் சேர்த்துத்தான் கணக்கு.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையில் 19-வது பாராவில் கொடுக்கப்பட்டிருக்கிற அந்தப் புதிய முறையில்கூட நம்பிக்கையில்லாமல்தான் அந்தப் பாராவை முடிக்கின்றபொழுதுகூட 'எதிர்பார்க்கப்படுகிறது' என்ற ஒரு நிலையைச் சந்தேகத்தோடு இந்த அரசு தெரிவித்திருக்கிறது. என்னவென்றால், அரிசி பெறத் தகுதி பெற்ற குடும்ப அட்டை வைத்துள்ளவர்களுக்கு ஓராண்டிற்குரிய அரிசி பெறுவதற்கான அடையாளச் சீட்டுகள் வழங்கப்படும். இப்படி அடையாளச் சீட்டுகள் வழங்குவதன் மூலமாக எதை இந்த அரசு எண்ணியிருக்கிறது? போலி ரேஷன் கார்டுகளை அல்லது போலி பில் போடுகின்ற அந்த முறையை இது மாற்றும், மாற்றிவிடும் என்று நம்புவதாக, எதிர்பார்க்கப்படுவதாக இந்த அரசு குறிப்பிட்டிருக்கிறது. இந்த அரசு வந்தவுடனேயே திடீரென ஓர் உத்தரவு போட்டு, ரேஷன் கார்டுகள் கணக்கெடுப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் அலுவலர்கள் அனுப்பப்பட்டார்கள். இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவர்கள் பணிக்குத் திருப்பப்பட்டு, அவர்கள் செய்த அந்த வேலையும் விரயமானது; அதற்கான உழைப்பு மட்டுமல்ல, செலவும் விரயமானது. அவர்கள் திரும்ப வந்ததற்குப்பிறகு, அந்தக் கணக்கெடுப்புப் பணி அப்படியே போனது. இப்போது அடையாளச்

சீட்டு. இந்த அடையாளச் சீட்டின் மூலமாக நாம் எதை எண்ணிக் கொண்டிருக்கிறோம்? ரேஷன் கார்டை எடுத்துக்கொண்டு போவது, அதனுடனேயே அடையாளச் சீட்டையும் எடுத்துக் கொண்டு போவது. அரிசி வாங்கத் தகுதிபெற்றவர்கள் என்று ரேஷன் கார்டிலே இருக்கின்றபோது இந்த அடையாளச் சீட்டையும் அவர்கள் எடுத்துக்கொண்டு போக வேண்டுமென்றால் என்ன பொருள்?

(முற்பகல் 11-45

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறையைத் தெளிவாக விளக்கிக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் ஒரு கோடியே 61 இலட்சத்திற்கு மேற்பட்ட ரேஷன் கார்டுகள் புழக்கத்தில் உள்ளன. ஒரு கோடியே 61 இலட்சம் ரேஷன் கார்டுகளும் ஏழை எளிய மக்களிடம் இல்லை. இதில் நிறைய போலி கார்டுகளும் உள்ளன. நிறைய வசதி படைத்தவர்களும்கூட இந்த ரேஷன் கார்டுகளை வேறு காரணங்களுக்காக வைத்திருக்கிறார்கள். அதாவது, பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றாலும்கூட, அவர்களுடைய முகவரியை, இருப்பிடத்தை உறுதி செய்ய வேண்டுமென்றாலும்கூட, வேறு பல காரணங்களுக்காவும் இந்த ரேஷன் கார்டுகளைப் பயன்படுத்துகிறார்கள். நிறையப் பேர் தங்கள் ரேஷன் கார்டுகளில் குறிப்பிட்டுள்ள அரிசியை வாங்காமல் அந்த கார்டுகளை அவர்கள் வீட்டு வேலைக்காரர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் அரசுக்குப் பெருத்த நஷ்டம், இழப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், போலி கார்டுகளைக் களைந்தெடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கூப்பன் முறையை, அடையாளச் சீட்டு முறையை அறிமுகப்படுத்த உள்ளோம்.

ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள் நேரில் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து, அந்த ரேஷன் கார்டைக் காண்பித்தால், அவர்தான் என்று உறுதி செய்யப்பட்ட பிறகு, அவரிடம் ஓராண்டிற்கான கூப்பன்கள், அடையாளச் சீட்டுகள் வழங்கப்படும். நேரில் வராதவர்களுக்கு இந்தக் கூப்பன்கள் வழங்கப்பட மாட்டாது. ஆக, ஒவ்வொரு மாதமும் நியாய விலைக் கடைகளில் இந்தக் கூப்பனை, அடையாளச் சீட்டைக் காண்பிப்பவர்களுக்கு மட்டும்தான் குறைந்த விலை ரேஷன் அரிசி வழங்கப்படும். மற்றவர்கள் வேறு காரணங்களுக்காக இந்த ரேஷன் கார்டுகளை வைத்திருப்பவர்கள், வசதி படைத்தவர்கள் தாங்களாக முன்வந்து அந்த ரேஷன் கார்டுகளை surrender செய்தால், அரசிடம் கொடுத்துவிட்டால் அவர்களுக்கு வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு Identity Card வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த முறையின் மூலம் பல இலட்சக்கணக்கான போலி ரேஷன் கார்டுகள், தேவைப்படாத கார்டுகள் களைந்தெடுக்கப்படும் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.





**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரேஷன் கார்டை உரிய அலுவலகத்திற்குக் கொண்டு சென்று கொடுத்து அடையாளச் சீட்டு வாங்கிக் கொள்பவர்களுக்கு என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே ரேஷன் கார்டிலே அவர்களுடைய குடும்பம், நிலைமை எல்லாம் விவரமாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. வசதி படைத்தவர்களுக்கு என்று சொல்கின்றபோது, இதிலே இருக்கின்ற ஒரு வார்த்தை; அரிசி வாங்கத் தகுதி பெற்றவர்கள்; தகுதி பெற்றவர்களும் என்று வந்துவிட்ட பிறகு, அவர்கள் கொண்டுபோய்க் கொடுக்கின்ற அந்த கார்டுகள் அந்த அடையாளச் சீட்டு தரப்போகிறார்களா. இதிலே எப்படி, நாம் எண்ணிப்பார்க்கும், நாம் நினைக்கும் அளவுக்கு போலி கார்டுகள் . . .

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி என்பதை நான் விளக்க விரும்புகிறேன். அரசினுடைய எண்ணம், அரசினுடைய நம்பிக்கை என்னவென்றால், யாருக்கு உண்மையாக அந்த ரூ.3.50 என்ற விலையில் மலிவு விலை அரிசி தேவைப்படுகிறதோ, அவர்கள்தான் நேரில் அலுவலகத்திற்குச் செல்வார்கள். அவர்கள்தான் கார்டைக் காண்பித்து தங்கள் பெயருக்கு உரிய கூப்பன்களைப் பெறுவார்கள். தேவைப்படாதவர்கள் அலுவலகத்திற்கு வரமாட்டார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளபடியே ஏழைகளுக்கு முறையாக அந்தக் கூப்பன்கள் போய்ச் சேர வேண்டுமென்ற நோக்கத்தோடு, நல்லெண்ணத்தின் அடிப்படையிலே வழங்குவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். நோக்கமும் எண்ணமும் நல்லபடியாக இருந்தாலும்கூட, அதை விநியோகிக்கிற நேரத்திலே ஒருவர் முதல் முறையாகச் சென்று அந்த ரேஷன் அட்டையைப் பதிவு செய்து அந்தக் கூப்பன்களைப் பெற்றுவிட்ட பிறகு, அடுத்து யார் வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம். அப்படிச் செல்கிற நேரத்திலே.. (குறுக்கீடு)

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுடைய அச்சம் அடிப்படையற்ற அச்சம். யார் யாருக்கு இந்த Identity Card ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களே அதை நேரில் எடுத்துக்கொண்டு செல்கிறபோது அதைப் பார்த்துத்தான், அவர்களுக்கு அவர்களுடைய கையொப்பத்தைப் பெற்றுத்தான் தரப்படும். இதன் மூலமாக போலி அட்டைகள் முழுவதும் ஒழிக்கப்படக்கூடிய ஒரு நிலை உருவாகும்.

(முற்பகல் 11-50)

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த principle அடிப்படையில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளோம் என்று சொன்னால், யார் உண்மையிலேயே ஏழையாக இருக்கிறார்களோ, யார் உண்மையிலேயே அதிக விலை கொடுத்து வெளிச்சந்தையில் அரிசி வாங்க முடியாத நிலையில் இருக்கிறார்களோ, யாருக்கு உண்மையிலேயே 3 ரூபாய் 50 பைசா என்ற விலையில் அரிசி தேவைப்படுகிறதோ அவர்கள்தான் நேரில் வந்து தங்கள் குடும்ப அட்டையைக் காண்பித்து அதற்கான கூப்பன்களை, அடையாளச் சீட்டுகளைப் பெறுவார்கள் என்று இந்த அரசு நம்புகிறது. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நபர் கடைக்கு வந்து தன்னுடைய அடையாளச் சீட்டைத்தானே நேரில் கொண்டுவந்து காட்டினால்தான் அவருக்கு அரிசி வழங்கப்படும். ஆகவே வேறு யாரும் அந்த அடையாளச் சீட்டுகளைத் தவறாகப் பயன்படுத்த இந்தத் திட்டத்தில் வாய்ப்பு இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், உட்காருங்கள். திரு. புகழேந்தி பேசி முடிக்கட்டும். திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசும்போது விளக்கம் சொல்லலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. புகழேந்தி, இன்னும் ஒரு 5 மணித் துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் விளக்கம் தந்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்திலேயே எதிர்பார்க்கப்படுகிறது என்ற ஒரு நிலையோடுதான் இருக்கிறது. முழுமையாக அதை நாம் எண்ணுவதுபோல என்று எல்லாம் நினைக்கின்றபோது அதில் ஒரு ஐயம் வருகிறது. தகுதி நிலை என்று சொல்கிறபோது மக்களோ, மற்றவர்களோ [illegible]



2002 ஏப்ரல் 1 ] [திரு. இ. புகழேந்தி]

அந்த ரூ.3.50-க்குக் கொடுக்கக்கூடிய அரிசியை இன்றைக்கு யார், யார் தகுதி உள்ளவர்கள் பெறுகிறார்களோ, அவர்கள் பெறுவதற்கான வாய்ப்பு இருக்குமா அல்லது இன்னும் அந்த நிலை குறையுமா என்பதுதான் அதிலே இருக்கிற முக்கியமான...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மலிவு விலை அரிசியைப் பெறுவதற்கு உண்மையான தகுதி படைத்தவர்கள் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி இந்தத் திட்டம் வெற்றி பெறும் என்று இந்த அரசுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது என்றால் இந்தத் திட்டத்தை ஏற்கெனவே ஆந்திர மாநிலத்திலும், கர்நாடக மாநிலத்திலும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் குடும்ப அட்டைகள் அங்கே கணிசமாகக் குறைந்திருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் உண்மையாக ஏழையாக இருப்பவர், வேறு வழியில்லாதவர் நிச்சயமாக அலுவலகத்திற்குக் குடும்ப அட்டையைக் கொண்டு வருவார். நிச்சயமாக அவருக்குரிய கூப்பன்களைப் பெறுவார். அவர் மாதா மாதம் நியாய விலைக் கடைக்கும் சென்று அந்தக் கூப்பனைக் காண்பித்து அதற்குரிய அரிசியைப் பெறுவார். ஆனால் 30 ஆயிரம் ரூபாய சம்பளம் வாங்குபவர்; 50 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குபவர் மேல்தட்டில் இருப்பவர் நிச்சயமாகக் கடைக்கு வரமாட்டார்; கூப்பனைப் பெறமாட்டார். ஆகவே அந்தக் கார்டுகள் களையப்படும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3 ரூபாய் 50 காசு பெறுமானமுள்ள அந்த அரிசியைத் தொடர்ந்து பெறமுடியும் என்று உத்தரவாதம் தந்தார்கள். இப்போது பெற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு என்றைக்கும் அவர்கள் தர வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கையே தவிர வேறு ஒன்றும் அல்ல.

அடுத்ததாக இந்த நிதிநிலை அறிக்கையிலே, தரிசு நிலங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதில்கூட ஒரு சிறிய clarification. பெரும் பரப்பிலான தரிசு நிலங்களையும், தரம் குறைந்த நிலங்களையும் நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விட அரசு தயாராக உள்ளது என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தரம் குறைந்த நிலங்களையும் என்பது ஒன்று; பெரும் பரப்பிலான தரிசு நிலங்களை யாருக்குத் தருவது என்பது ஒரு கேள்வி. பெருந்தனக்காரர்கள், நிறுவனத்தார் வந்து கேட்டால் தரலாம் என்று வருகிறது. அதிலே என்னுடைய கருத்தாக நான் ஒன்றைக் குறிப்பிட

விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதாரண நிலையிலே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், கூலி வாழ் விவசாயப் பெருங்குடி மக்கள், கூட்டுப் பண்ணை முறையிலேகூட இந்தத் தரிசு நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்குப் பெறுவார்களேயானால் அது ஏழை மக்களுக்குப் பயன்தரும். ஆனால் தனியார் பெருந்தனக்காரர்களுக்கு பெரும் பரப்பிலுள்ள தரிசு நிலத்தை நாம் தருவோமேயானால்; தரக் குறைவான நிலங்களாக தனியாகப் பிரித்து ஒருமுறைக்கு நாம் தருவோமேயானால் அதன் மூலமாக மக்கள் நலன் இங்கே வேறுபடுகிறது, புறக்கணிக்கப்படுகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களுடைய இயக்கம் டெல்லியில் ஆளுகிறது. உங்களது மைய ஆட்சியும் இந்தக் கொள்கையை வகுத்திருக்கிறது. W.T.O-வினுடைய ஷரத்துக்களுக்கும் சம்மதம் தெரிவித்திருக்கிறது. பயன்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ள தரிசு நிலங்களை, ஏழையெளிய மக்களால் மூலதனம் செய்து மேம்படுத்த முடியாத நிலையிலே இருக்கின்ற தரிசு நிலங்களை, 40 ஆண்டு, 50 ஆண்டு, 60 ஆண்டு காலமாக fallow land என்ற நிலையிலே எதற்கும் உபயோகமற்ற நிலையிலே இருக்கிற தரிசு நிலங்களைப் பயன்படுத்த உங்களது மைய அரசினுடைய கொள்கைப்படி நடவடிக்கை எடுப்பதை அங்கு நீங்கள் ஆதரிக்கிறீர்கள், இங்கு எதிர்க்கிறீர்கள், என்ன பொருள் என்று புரியவில்லை.

முற்பகல் 11-55

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள்....

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஒரே ஒரு கருத்து. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்லும்போது, தரிசு நிலங்களை ஏதோ சில தனியாருக்கு விற்றுவிடுவதாகக் கருத்துச் சொல்கின்றார்கள். அது கிடையாது. (குறுக்கீடு) வாடகைக்குத் தருவதாகச் சொல்கின்றார்கள். இந்தத் தரிசு நிலங்களைத் தனியாருக்கு வாடகைக்குத் தந்து (குறுக்கீடு) வாடகைக்கு அல்ல, குத்தகைக்கு.....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும்



அதை ஆதரிக்க வேண்டும், தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு நல்ல திட்டம். இதனால் மாநிலம் முழுவதும் பயனடையும். ஏற்கெனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல 60 ஆண்டுகாலமாக, 70 ஆண்டுகாலமாக எதற்கும் பயன்படுத்த முடியாத தரிசு நிலங்கள், ஒட்டுமொத்தமாக 50 இலட்சம் ஏக்கர் நிலங்கள் தமிழகத்தில் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம், இந்த ஆட்சிக் காலத்திற்குள் அதாவது இன்னும் நான்கு ஆண்டு காலத்திற்குள் — இந்தத் தரிசு நிலங்கள் அனைத்தையும்— மேம்படுத்த வேண்டுமென்ற மாபெரும் திட்டத்தை இந்த அரசு வகுத்துள்ளது. ஏழை எளிய விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் ஒன்றாக இணைந்து ஒரு சங்கம் அமைத்து, அவர்கள் நிலத்தை எடுத்துக்கொள்ள முன்வந்தாலும் அவர்களுக்கும் கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நிறையத் தரிசு நிலங்களில் அதை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னால், நிறைய முதலீடு போட வேண்டியிருக்கிறது. நிறையச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் வசதிபடைத்த தனியார் நிறுவனங்கள் இந்த நிலங்களை எடுத்துக்கொள்ள முன்வந்தால் அவர்களுக்கு இந்த நிலங்களைக் குத்தகைக்குத் தரலாம் என்று இந்த அரசு கருதுகிறது. அப்படிக் குத்தகைக்கு long lease என்று கொடுக்கின்றபோது, அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய விவசாயிகள், நிலமற்ற விவசாயக் கூலிகள் இவர்கள் அனைவருக்கும் அங்கே வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 57-வது பத்தியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஐந்து மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள். நேரம் ஆகிவிட்டது. மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேச இருக்கின்றார்கள்.

**திரு. இ. புகழேந்தி:** பத்தி 57, சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனை, ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் 21 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்டு நிலை உயர்த்தப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், 1999 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில், அன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கை விவாதத்திலே இங்கே இதைக் குறிப்பிட்டு ஜப்பான்

நாட்டிலேயிருந்து ஒரு தூதுக்குழு இங்கே வந்து பார்வையிட்டு ராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் அதற்காகச் சென்று ஒப்பந்தம் போடப்பட்டு,—இதே வார்த்தைகளை — 21 கோடி ரூபாய் மானியமாகத் தந்து, ஜப்பான் நாட்டு அரசாங்கம் கருவிகளைத் தந்ததன் மூலமாக இப்போது ஆசியாவிலேயே முதல் தரமான குழந்தைகள் நல மருத்துவமனையாக இயங்கிக்கொண்டிருக்கிறது என்று ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். அந்த மருத்துவமனை ஓரிரு ஆண்டு காலமாக இயங்குகிறது. நான் கேட்க விரும்புவது வேறு ஒன்றுமல்ல. அந்த 21 கோடி ரூபாயைத்தான் மீண்டும் இப்போது சொல்கிறீர்களா அல்லது ஜப்பானோடு புதியதாக ஏதாவது ஒப்பந்தம் இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னது உண்மைதான். அது முதல் தவணை. எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசினுடைய முயற்சியின் காரணமாக, மாண்புமிகு அம்மாவினுடைய முயற்சியின் காரணமாக ஜப்பான் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இப்போது இந்தத் தொகையை இரண்டாவது தவணையாக நாம் பெறுகிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, உங்களுக்கு இதுதான் கடைசித் தவணை. *(சிரிப்பு)* ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** இதுவரையில் அரசின் அந்தத் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சியினுடைய கருத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதிலே அரசியலோ வேறு எதுவுமோ இல்லை. இன்னும் ஐந்து மணித்துளிகள் அனுமதிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஒப்பந்தம் என்பது ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்டது. அதனுடைய continuity இது அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.





இப்போது இன்னொன்று; மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு; மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக ஆளுநர் விவாதத்தின்போதுகூடச் சொன்னார்கள். கண்ணகி சிலை பாதுகாப்பாக இருக்கிறது, நீதிமன்றத்தின் உத்தரவு வந்தவுடன் எந்த இடத்தில் வைக்கச் சொல்கிறார்களோ அங்கே வைக்கப்படும் என்றார்கள். ஆக, பார்ப்பதற்கு அல்லது அதை எடுத்துக்காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எந்தவிதமான வழக்கும் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் திரு. தம்பிதுரை அவர்கள் செய்தியாளர்களை அழைத்துக்கொண்டு போய் அங்கே பார்க்கச் சொல்லி, பிறகு பார்க்கவிடாமல் வந்த சூழ்நிலையை மாற்றி முதலமைச்சர் அவர்கள்.....

*நண்பகல் 12-00*

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணகி சிலை பத்திரமாக மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் யார் விரும்பினாலும் அங்கே அழைத்துச் சென்று சிலையைக் காண்பிப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் அறிவிக்கிறேன். மற்றபடி நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டவுடன் நீதிமன்றம் எங்கே வைக்கச் சொல்கிறதோ அங்கே இந்த அரசு அந்தச் சிலையை வைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலன் அவர்களுடைய மறைவு குறித்து இங்கே சொல்லப்பட்டாலும்கூட, விசாரணை வந்தாலும்கூட அவருடைய துணைவியார் அவருடைய குடும்பத்தார் பரிதவித்திருக்கிறார்கள். இன்னும்கூட அவர் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் அவர்கள் இருக்கிறார்கள். நாம் போய்ச் சொல்லுகின்றபோதுகூட அவர்கள் இருக்கின்றார்கள் என்ற அந்த நம்பிக்கையைத்தான் அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் கேட்பது சி.பி.ஐ. விசாரணை. அதற்கான ஏற்பாட்டினை இந்த அரசு செய்யலாமே என்பதுதான் எங்களது கருத்து. அதைச் சொல்வதனால், அந்தக் குடும்பத்தினுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு......

[ 2002 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசினுடைய காவல்துறைதான் குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்கிறது. இது நிதிநிலை அறிக்கை. அந்த மானியக் கோரிக்கை வருகிறபோது அதுகுறித்து நீங்கள் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன். (குறுக்கீடு) திரு. புகழேந்தி, பேசி முடித்து விடுங்கள். (குறுக்கீடு) நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசி முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) திரு. ஜெயராமன், இருங்கள். திரு. புகழேந்தி ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுவார்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை குறித்துப் பொதுவாக, இது மக்கள் விரோத அறிக்கையாக, மக்கள் நலன் நாடாத அறிக்கையாக இருப்பது மட்டுமல்ல, இது என்னுடைய எண்ணப்படியும் கருத்துப்படியும் ஒரு அலங்கரிக்கப்பட்ட* பொம்மை என்பதுதான் இந்த நிதிநிலை அறிக்கை குறித்த என்னுடைய கருத்து. தமிழ்நாடு ஆமை புகுந்த வீடாகப் போய் விடுகிறதே என்ற வேதனையோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திணறுகிற அளவிற்கு அவர் விடுத்த வினாக்களுக்கெல்லாம்; எழுப்பிய கேள்விகளுக்கெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அவையே ஏற்கும் வண்ணம், நாடே ஏற்கும் வண்ணம் உன்னதமான பதிலைத் தந்ததற்குப் பிறகு, இப்படியொரு அமங்கலமான சொல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் கற்றறிந்த தமிழ் அறிஞர் கூறுவது அவை மரபுக்கு உகந்தது அல்ல. அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு நான் பணிவோடு வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலங்கரிக்கப்பட்ட ** என்பது ஒரு நல்ல சொல் அல்ல. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அலங்கரிக்கப்பட்ட **என்பதை அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்று மாற்றச் சொல்கிறார்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.
** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.



2002 ஏப்ரல் 1 ]

• **திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கான பெரும் வாய்ப்பை எனக்கு ஈட்டித்தந்த எங்களுடைய அன்புத்தாய், அறிவுத்தாய், பண்புமிக்க தாய், பாசம் மிக்க தாய், இந்த நாட்டை ஒரு நேசத்திற்குள் வைத்திருக்கிற நேசத் தாய், பல்வேறு சோதனைகளை வென்று வீரத் தாயாக அமர்ந்திருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களை இங்கே உரித்தாக்கி இப்போது ஊர் மெச்சுகின்ற அளவிற்கு, பார் போற்றுகின்ற அளவிற்கு, படித்தவர்கள் போற்றுகின்ற அளவிற்கு, 2002—2003 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவோ நிதிப் பற்றாக்குறைகள் சூழ்ந்திருக்கின்ற இந்த நேரத்திலே வறண்டுபோன பாலைவனத்திலே பசுமையான நெல் வயல்களை உருவாக்குவதைப்போல, காய்ந்துபோன மரம், பட்டுப்போன மரம் மீண்டும் தழைத்து எழுந்ததுபோல கடந்த 5 ஆண்டு கால ஆட்சியாளர்களுடைய பல்வேறு செயல்களாலே முடங்கிப்போன, நிதிநிலை காலியாகிப் போன கஜானாவைச் சீர்படுத்தி, தான் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 700 கோடி ரூபாய்க்கு மேலாக ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய பாக்கியிலிருந்தும், கஜானாவிலே 242 கோடி ரூபாய்க்கு மேலாக deficit இருந்தும் அத்தனையும் ஈடுகட்டி கடந்த பத்து மாத கால ஆட்சியிலே செம்மையுற தமிழகத்தைச் சிறப்புறச் செய்து இப்போது பல்வேறுவிதமான நாட்டு நலத்திட்டப் பணிகளைக் கொடுத்து நாட்டு மக்கள் பாராட்டுகின்ற வகையிலே ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயருகின்ற வகையிலே ஒரு சிறப்பான ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற நேரத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையானது, சுதந்திரத்திற்குப் பின்பாக தமிழகத்தினுடைய 12வது சட்டமன்றக் கூட்டத் தொடர் வரையிலே சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து நிதிநிலை அறிக்கைகளுக்கும் மகுடம் சூடியதைப் போன்ற மிகத் தலைசிறந்த நிதிநிலை அறிக்கையாக (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய ஆலோசனையிலே ஏற்பாடு செய்யப்பட்டு இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

மகளிர் நலத்திலே மிகப்பெரிய அக்கறையோடு இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மகளிருக்கான என்னென்ன திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே சேர்ப்பிக்க முடியுமோ, அத்தனையும்

சேர்ப்பிக்கப்பட்டு 10 ஆயிரம் மகளிர் பயன்பெறத்தக்க வகையிலே ஏறத்தாழ 145 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, 10 ஆயிரம் பெண்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்காக இந்தத் திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-05

அதுமட்டுமல்ல, 10 ஆம் வகுப்புக்கு மேல் படிக்கும், ஆதிதிராவிட மாணவிகளுக்கு, பள்ளிக்குச் செல்பவர்களுக்கு 6 கோடி ரூபாய்ச் செலவிலே, நிதிநிலை பற்றாக்குறையாக இருக்கின்ற இந்த நேரத்திலேகூட அரசானது அவர்களுக்கு மிதிவண்டியை இலவசமாக வழங்குகிற திட்டம் இந்த ஆண்டும் தொடரும் என்று அறிவித்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, கிராமங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், பெண்கள் ஒதுங்குவதற்கு இடம் இல்லாமல், கழிப்பிட வசதி இல்லாமல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையை உணர்ந்த தாய், அவற்றைப் போக்க வேண்டும் என்பதற்காக, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே கிராமப்புறத்து மக்கள் பயன்பெறத்தக்க வகையிலே, பெண்கள் பயன்பெறத்தக்க வகையிலே 183 கோடி ரூபாய் செலவிலே மகளிர் ஒருங்கிணைந்த பொதுச் சுகாதாரக் கழிப்பிடங்கள் அமைப்பதற்காக ஆணையிட்டு, நிதியும் ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் தமிழகத்தினுடைய கிராமப்புறங்களிலே இருக்கின்ற, கேள்வி கேட்பாரற்று இருக்கின்ற பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக 1 இலட்சத்திற்கு மேலாக மகளிர் சுயஉதவிக் குழுக்களை அமைத்து, அவர்கள் சுயமாக வேலைவாய்ப்பு அமைத்துக் கொள்வதற்காகப் பல்வேறு திட்டங்களை நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தினை புதிய வேகத்துடன் செயல்படுத்துவதற்காக 22.7 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனைகளாக, வைர வரிகளிலே எழுதப்பட வேண்டிய திட்டங்களாக, ஏழை எளிய மக்களுக்காக, மகளிர்க்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை இந்த நேரத்திலே ஏழை எளிய கிராம மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



அதுமட்டுமல்லாமல் நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகியும், இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற 40 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களைக் கண்டுணர்ந்து, அதற்காகப் புயல் வேகத்திலே திட்டம் தீட்டி தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது 40 கோடி ரூபாயை இந்த ஆண்டு விவசாயிகளுக்காக ஒதுக்கியிருப்பதை இந்த நாடு பாராட்டிக்கொண்டிருக்கிறது. இதனை நல்ல உள்ளங்கள் பாராட்டிக்கொண்டிருக்கின்றன.

எத்தனையோ வறட்சியான சூழ்நிலையில் இந்த ஆட்சிப் பொறுப்பை அம்மா அவர்கள் ஏற்றிருந்தாலும், விவசாயிகளுடைய வாழ்க்கையின் வேதனையைப் போக்க வேண்டும் என்பதற்காக ஏர்முனை பிடித்து உழுகிற விவசாயிகள் நாளும் கண்ணீரைச் சிந்திக்கொண்டிருக்கின்றார்கள் என்ற நிலைமையை உணர்ந்து, அவர்களுடைய கடனுக்கான வட்டியை, அபராத வட்டியை, தண்ட வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதற்காக, சென்ற ஆண்டு 310 கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தார்கள். அதிலே இன்னும் பயன் அடையாது இருக்கின்ற விவசாயிகள் யாரேனும் இருப்பார்களேயானால் ஒரே முறையிலே கடனை அடைத்தால் அதற்காக அவர்களுடைய வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்வதற்காக இந்த நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற சூழ்நிலையிலேகூட 146 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது.

சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டால் ஏழை எளிய கிராம மக்கள் சுகாதார வசதியைப் பெறுவதற்கு 25 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு 8 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 11 கோடி ரூபாய் செலவிலே 200 துணைச் சுகாதார நிலையங்களை ஒதுக்குவதற்காக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது; செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. இத்தகைய நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிற இந்த ஆட்சி கடந்த 10 மாதகாலத்திலே செயற்கரிய நல்ல சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கிறது.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி தொகுதியிலேயிருந்து அம்மா அவர்களால் சட்டமன்ற உறுப்பினராக இந்த அவைக்குத் தேர்வு செய்யப்பட்டு, இங்கே அமர்ந்து நான் பேசிக்கொண்டிருக்கிறேன். கோவை மாவட்டம் பல்வேறு தொழில்கள் நிறைந்த மாவட்டம் ஆகும். கடந்த 5

[திரு. வி. ஜெயராமன்] [2002 ஏப்ரல் 1

ஆண்டுகால ஆட்சியிலே அந்தத் தொழில்கள் எல்லாம் நசிந்துபோய் இருக்கின்றன. ஜப்பான் நாட்டுக்கு அடுத்தபடியாக சிறு தொழில்கள், ஆகாய விமானத்துக்குத் தேவையான உதிரி பாகங்கள், கப்பலுக்குத் தேவையான பாகங்கள் தயாரிப்பது உட்பட, பல்வேறு இயந்திரத் துறைகளிலே பல்வேறு விவசாயத் துறைகளிலே, பனியன் தொழிலிலே, நெசவுத் தொழிலிலே, பவர்-லூம் தொழிலிலே, இப்படிப் பல்வேறு வகையான தொழில்களிலே கோவை மாவட்டம் 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரையிலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே வளர்ந்தோங்கியிருந்தது. அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள், அவர்களுடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக கோவை மாவட்டத்திலே அமைதியின்மை ஏற்பட்டு, மதக் கலவரம் ஏற்பட்டு, அநியாயமான முறையிலே தீவிரவாதிகள் ஆட்சியாளர்களுடைய அரவணைப்பின் காரணமாக தழைத்தோங்கியதன் காரணமாக குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றன. அந்தக் குண்டு வெடிப்புச சம்பவங்கள் காரணமாக—கோவையை நோக்கி கேரளாவிலேயிருந்து, கர்நாடகாவிலேயிருந்து, ஆந்திராவிலேயிருந்து, இன்னும் வெளிநாடுகளிலேயிருந்து பல்வேறு வியாபாரப் பொருட்களை கோவையிலே உற்பத்தியாகிற இயந்திரப் பொருட்களை, கோவையிலே உற்பத்தியாகிற துணிநூல் பொருட்களை மற்றும் பல்வேறு பொருட்களை வாங்கிச் செல்வதற்காக வியாபாரிகள் வந்துகொண்டிருந்தார்கள் — 1996-லிருந்து 2001 வரை நடைபெற்ற நிர்வாகச் சீர்கேடான ஆட்சியின் காரணமாக சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போனதன் காரணமாக, கோவை மாவட்டம் நிலைகுலைந்துபோய் அந்தத் தொழில் கேட்பாரில்லாமல், செய்து வைத்த பொருட்களுக்கு விற்பனை இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ஆசிய கண்டத்திலேயே ஜப்பானுக்கு அடுத்தபடியாகத் தலைசிறந்த மாவட்டமாக 1991-லிருந்து 1996 வரை தழைத்தோங்கி வந்தது. அன்றைக்கு வளர்ந்து வந்த கோவை மாவட்டம் சீர்குலைந்து போன சூழ்நிலை கடந்த ஆட்சியிலே ஏற்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் சின்னத்தைத்தான் காட்டுகிறேன்.

**திரு. வி. ஜெயராமன்:** இந்தச் சூழ்நிலையிலே, இப்போது கோவை மாவட்டம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, குறிப்பாக ஆண்டிப்பட்டி தேர்தலிலே யாருடைய ஆதரவும் இல்லாமல்,



2002 ஏப்ரல் 1] [திரு. வி. ஜெயராமன்]

அம்மா அவர்கள் தனியாக நின்று, தன்னுடைய தனிப்பட்ட திறமையினால் எல்லா மதத்துக்கும் நான் சொந்தக்காரர், எல்லா ஜாதிகளுக்கும் நான் சொந்தக்காரர், எனக்குத் தமிழ்நாட்டு மக்கள்தான் முக்கியம், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கிக்காட்டுவேன், தமிழகம் தலைசிறந்த மாநிலமாக, தொழில் துறையிலே, விவசாயத் துறையிலே, அனைத்துத் துறைகளிலே, கல்வித்துறையிலே தழைத்தோங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வேன் என்று சூளுரைத்து ஆண்டிப்பட்டி தொகுதியிலே அம்மா அவர்கள் தன்னாலேயே தன்னுடைய வெற்றியை பெற்றுக்கொண்டார்கள்.

2001-ல் சட்டமன்றத் தேர்தலின்போது தம்மோடு யாரெல்லாம் கூட்டணி வைத்திருந்தார்களோ அவர்கள் எல்லாம் நம்மைவிட்டு வேறுபட்டுப் பல்வேறு காரணங்களைச் சொல்லி விலகி ஓடிப்போன நேரத்திலே தனி ஒருவராக நின்று [illegible] பெற முடியாத மாபெரும் வெற்றியைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திர பிரசித்திப் பெற்ற வெற்றியைப் பெற்று, யாருடைய தயவிலும் நான் இல்லை, என்னால் எதையும் உருவாக்க முடியும், தமிழ்நாட்டு மக்கள் எனக்குப் பின்னாலே அணிவகுத்து இருக்கிறார்கள், தமிழ் நாட்டினுடைய நன்மை, தீமைகளை உருவாக்குகின்ற அனைத்து சக்தியும், ஒட்டுமொத்த சக்தியும் எனக்குப் பின்னால்தான் இருக்கிறது என்பதை இந்த நாட்டுக்கு, உலகுக்கு அறிவுறுத்தி மாபெரும் வெற்றியைப் பெற்று, எந்த முதலமைச்சர் நாற்காலியை நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலமாக பறித்துக் கொண்டார்களோ அதே நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக இழந்த முதலமைச்சர் நாற்காலியைப் பெற்று இங்கே ராஜ சிம்மமாக, இந்த அவையிலே தனக்கு நிகர் தானாக (மேசையைத் தட்டும் ஒலி) அவரை மிஞ்ச யாருமே இல்லாத வகையிலே, ஒப்பார் இல்லாத மாபெரும் தலைவியாக, 20 ஆம் நூற்றாண்டிலும் முதலமைச்சராக இருந்தார், 21 ஆம் நூற்றாண்டிலும் இப்போதும் முதலமைச்சராக இருக்கிறார். இன்னும் சில காலம், இந்திய துணைக் கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பிலே, அரியணையிலே அமருகின்ற நாளுக்காக அம்மா அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் தீர்ப்பையும் அம்மா அவர்கள் நாடிப் போவதில்லை. இந்த நாடு அம்மா அவர்களுக்கு அந்தத் தீர்ப்பை வழங்கக்கூடிய நாள்—அந்த நல்ல நாள்— இப்போது இந்தியாவிலேயே இந்தி மொழி பேசத் தெரிந்த, ஆங்கில மொழி பேசத் தெரிந்த, தெலுங்கு மொழி பேசத் தெரிந்த, கன்னட மொழி பேசத் தெரிந்த, மலையாள மொழி பேசத் தெரிந்த, அனைத்து மொழிகளையும்

பேசத் தெரிந்த மக்களுடைய ஈடுபாடோடும், அனைத்து மொழிகளையும் பேசத் தெரிந்த மக்களையும் பேச்சின் மூலமாகவும், செய்கையின் மூலமாகவும், எழுத்தின் மூலமாகவும் பெற்று உணர்ந்திருக்கின்ற ஒரு மாபெரும் mass leader (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 21 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலே அம்மா அவர்களுக்கு இணையாக ஒரு தலைவர் இந்திய மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா என்று கேட்டால் நிச்சயமாகக் கிடையாது. எதிர்காலத்திலே இந்தியாவின் தலைவி மட்டும் அல்ல அம்மா; இப்போது நான் சொல்வது, உலக நாடுகளிலே பற்றி எரிந்துகொண்டிருக்கின்ற ஜெருசலேம் நாட்டினுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குக்கூட உங்களுடைய தலைமை எதிர்காலத்திலே தேவைப்படுகிறது என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டு காலம், நீங்கள் பட்டிதொட்டியெல்லாம் பொதுக் கூட்டங்களில் பேசிய நேரங்களிலே உங்களுடைய பேச்சைக் கேட்டு ரசித்தவன் நான். நீங்கள் வரும்போது உங்களை வரவேற்று, செல்லும்போது காத்திருந்து வழியனுப்பி வைத்தவன். மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களுக்கு 45 நிமிடங்கள் கொடுத்தீர்கள். தயவுசெய்து எனக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

எங்களுடைய கோவை மாவட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மாவட்டம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பின்னால் இருக்கின்ற மாவட்டம், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் மானியக் கோரிக்கைகளிலே எல்லாம் பேச வாய்ப்பு நிறைய இருக்கிறது.

**திரு. வி. ஜெயராமன்:** பொள்ளாச்சி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக நான் அம்மா அவர்களால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறேன். கோவை மாவட்டத்திற்கும் பெரியார் மாவட்டத்திற்கும் சம்பந்தப்பட்ட இந்த ஒரே ஒரு பிரச்சினையை சொல்லி நான் விடைபெற வேண்டுமென்று கருதுகிறேன்.

கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சியினுடைய பகுதியாக இருப்பது பரம்பிக்குளம்-ஆழியாறு அணைக்கட்டுத் திட்டம். இந்தத் திட்டம் 40 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டம். இந்தத் திட்டத்தில் மேல் நீராறிலிருந்து கீழ் நீராறுக்குத் தண்ணீர் சென்று, கீழ் நீராறிலிருந்து சோலையாறுக்குத் தண்ணீர் சென்று, சோலையாறிலிருந்து





பரம்பிக்குளம் ஆற்றுக்குச் சென்று, பரம்பிக்குளம் ஆற்றிலிருந்து துணைக் கடவுக்குச் சென்று, துணைக் கடவிலிருந்து பெருவாரி பள்ளத்திற்குப் போய், பெருவாரி பள்ளத்திலிருந்து 48 கிலோ மீட்டர் காண்டூர் கனால் என்று சொல்லக்கூடிய சமமட்டக் கால்வாய் வழியாகச் சென்று திருமூர்த்தி அணையைத் தண்ணீர் அடைந்து, அதற்குப் பிறகு 122 கிலோ மீட்டருக்கு மேல் மட்டத்தில் தண்ணீர் சென்று 3 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பயனடைகிறது. 148 கிலோ மீட்டர் மலைப் பகுதியிலும். சமமட்டக் கால்வாய் வழியாகவும் சுற்றிச் சுற்றித் தண்ணீர் வந்து திருமூர்த்தி அணையைத் தண்ணீர் சென்று அடைகிறபோது, சர்க்கார்பதி பவர் ஹவுசிலிருந்து 48 கிலோ மீட்டர் சமமட்டக் கால்வாய் வழியாகத் தண்ணீர் செல்கின்ற நேரத்திலே, அங்கே 1,150 கன அடி தண்ணீரானது செல்லும்போது, திருமூர்த்தி அணையைச் சென்றடையும்போது, 750 கன அடி தண்ணீர்தான் சென்று அடைகிறது. ஆக, 300 கன அடி தண்ணீர் மலைப் பகுதிகள் வழியாகவும், மலைச்சாரல் வழியாகவும் சென்றுவிடுகிறது. விவசாயத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைப்பது கிடையாது. இதற்கான ஒரேயொரு திட்டமாக மேல் நீராறு திட்டத்தை, இந்தியாவினுடைய இரண்டாவது சிரபுஞ்சி என்று சொல்லப்படக்கூடிய மேல் நீராறிலேயிருந்து $14\frac{1}{2}$ கிலோமீட்டர் தூரத்திற்கு ஒரு சுரங்கப் பாதை அமைத்து, நல்லாறு அணைத் திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக 10 டி.எம்.சி. தண்ணீரை, $16\frac{1}{2}$ கிலோமீட்டர் நேர் பாதை வழியாகக் கொண்டு சென்று, நல்லாறு அணைத் திட்டத்திலே தேக்கி அங்கேயிருந்து திருமூர்த்தி அணைக்குத் தண்ணீரைக் கொண்டு சென்றால் விவசாயிகளுக்கு, இந்த $3\frac{3}{4}$ இலட்சம் ஏக்கரைப் பயன்படுத்துகிற விவசாயிகளுக்குப் பயன் ஏற்படும். எங்கள் பாட்டன் பூட்டன் காலத்திலேயிருந்து நாங்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில் அம்மா உங்களுடைய ஆட்சிக் காலத்திலே அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு பசுமை உண்டாகும். இதற்காக 350 கோடி ரூபாய் செலவாகும். இந்த 350 கோடி ரூபாயைச் செலவு செய்யும் நேரத்திலே உங்களுக்கு நீர் மின்சக்தி மூலம் 350 மெகாவாட் மின்சாரமானது கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. கோவை, பெரியார் மாவட்டங்களிலே இருக்கிற 10 சட்டமன்றத் தொகுதிகளிலும் இருக்கிற வறண்டு போன விவசாயிகளுடைய வாழ்க்கை பசுமையடையும். இதைச் செய்கிற திராணி உங்களைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது.

பிற்பகல் 12-15

அதேபோல், மேல் நீராறு அணைத் திட்டத்திற்கு அடுத்தபடியாக ஆனைமலையாறு திட்டத்தை உருவாக்கினால் 2.5 டி.எம்.சி. தண்ணீராவது

விவசாயத்திற்குக் கிடைக்கும். இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் உருவாக்கிக் கொடுத்தால் கொங்கு மண்டலம் உங்களுக்குப் பின்னாலேயே எப்போதும் நிற்கும். இப்போது எங்களுடைய எல்லாத் தொகுதிகளிலேயும், 15 தொகுதிகளிலேயும் போட்டி போட்ட வேட்பாளர்கள் உங்களால் வெற்றி பெற்றார்கள். நீங்கள் இரண்டு விரல்களைக் காட்டினீர்கள்; இரட்டை இலைக்கு ஓட்டுப் போட்டார்கள். நீங்கள் சைக்கிளுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொன்னீர்கள்; சைக்கிளுக்கு ஓட்டுப் போட்டார்கள். நீங்கள் காட்டிய சின்னத்திலே அனைவரும் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று சொன்னால், அந்தக் கோவை மாவட்டத்து மக்கள் கள்ளம் கபடமில்லாத மக்கள், உங்கள் மீது வைத்திருக்கிற அன்பு அப்பழுக்கற்ற அளப்பரிய பேரன்பு. கடல் அளவு உயர்ந்த அந்தப் பேரன்புக்கு நீங்கள் தருகிற பரிசாக இதை நீங்கள் செய்து தர வேண்டும், தாயே!

அதுமட்டுமல்ல, என்னுடைய பொள்ளாட்சி சட்டமன்றத் தொகுதியிலே இப்போது ஒரு பேருந்து நிலையம் இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்திற்கு அருகிலே இரண்டு ஏக்கர் நிலம் காலியிடம் கிடக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்பதற்காகக் கடந்த 8 மாத காலமாக நானும் கிணத்துக்கடவுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் தேர்தல் நேரத்திலே நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு அலுவலகமாக அலைந்து கொண்டிருக்கிறோம். கடைசியிலே அந்த இடத்தைக் கொடுக்க முடியாது என்று அலுவலர்கள் கைவிரித்து விட்டார்கள். இந்தச் சூழ்நிலையை மாற்றி அந்த இரண்டு ஏக்கரையும் எங்களுக்குப் பேருந்து நிலையம் அமைப்பதற்காக நகராட்சிக்குப் பெற்றுக் கொடுத்து புதிய பேருந்து நிலையத்தினையும், ஒரு பேருந்து நிலையத்தை Mofussil Bus Stand என்றும் இன்னொரு பேருந்து நிலையத்தை Rural Bus Stand என்றும் மாற்றிக் கொடுத்து, பொள்ளாச்சித் தொகுதி, கிணத்துக்கடவுத் தொகுதி, வால்பாறைத் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையைத் தீர்த்துத் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, பொள்ளாச்சி நகரத்திலே நகராட்சியின் சார்பாக ஒரு மேல்நிலைப் பள்ளி இருந்து கொண்டிருக்கிறது. 1½ ஏக்கர் நிலப்பரப்பிலே 2,500 மாணவிகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை மாவட்டத்திலேயே தலை சிறந்த பள்ளி அது. 100 ஆண்டுகளை நெருங்கப் போகிற பள்ளி. ஒரு வகுப்பறையிலே 120 பேர் இருக்கிறார்கள்; 130 பேர் இருக்கிறார்கள். அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று சொல்கிறார்களே கடந்த ஆட்சியாளர்கள்; எதையும் செய்யாமல் போய்விட்டார்கள், அம்மா.





மகளிர் நலத்திலே மேம்பாடு மிக்க எனது அன்புமிக்க தலைவியே, அந்தக் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்காக 50 ஆண்டு காலங்களுக்கு முன்னாலேயே ஒரு புண்ணியவான் 10 ஏக்கர் நிலத்தை விவசாயிகளுக்காக, மன்னிக்க வேண்டும், அந்த மாணவர்களுக்காக எப்பொழுது வேண்டுமானாலும் பள்ளிக்கூடம் கட்டிக் கொள்வதற்காக இனாமாக, தர்மமாக எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நகராட்சியிலே 40 இலட்சம் ரூபாய் பணம் இருக்கிறது. போதாததற்குத் தாங்கள் தங்களுடைய சிறப்புக் கவனத்தின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்து அந்த நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு அந்த 10 ஏக்கர் நிலத்திலே சிறந்த விளையாட்டு மைதானத்தோடு உங்களுடைய பெயரிலேயே அந்த நகராட்சி மேல்நிலைப் பள்ளியினை அமைப்பதற்கு நீங்கள் தயவுசெய்து ஆணையிட்டு வழி காட்ட வேண்டும் தாயே. கோவை மாவட்டத்திலேயிருக்கிற அத்தனை கிராமங்களும் உங்களுடைய போயஸ் கார்டனை நோக்கிப் பாதையை வகுத்துக் காத்துக் கொண்டிருக்கின்றன.

எதிர்கால இந்தியாவினுடைய தலைமை உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் கை காட்டுகிற திசையில் தமிழகம் இப்போது தலை நிமிர்ந்து வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. உங்களைப் பார்த்து அதையும் இதையும் சொன்னவர்களெல்லாம், இங்கே உங்கள் மீது பல்வேறு புகார்கள் தொடுத்தார்கள்; புகார் சொன்னவர்கள், புகார் காண்டம் கண்டவர்கள், பூம்புகார் என்று சொன்னவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னுடைய உரையினுடைய இறுதிக் கட்டமாக, கடைசி வரியாக நான் சொல்லிக்கொள்வது அன்றைக்குச் சிலப்பதிகாரத்திலே, கோவலன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலைக் களப்பட்டான். கோவலனுடைய மனைவி கண்ணகி மன்னவனை நோக்கி, நெடுஞ்செழியப் பாண்டியனை நோக்கி மதுரையம்பதியிலே பாண்டிய மன்னனை நோக்கி, மன்னா,

"தேரா மன்னா செப்புவ துடையேன் ......

என்காற் சிலம்புகள் மாணிக்கப் பரல்."

என்று சொல்லி மாணிக்கச் சிலம்பினை எடுத்து ஓங்கி அறைந்தாள். கண்ணகியினுடைய கையிலேயிருந்த சிலம்பிலேயிருந்து மாணிக்கப் பரல்கள் சிதறி நெடுஞ்செழியப் பாண்டியன் மனைவியினுடைய முகத்திலும், நெடுஞ்செழியப் பாண்டியன் மூக்கின் மீதும் விழுந்தது. நீதி தவறிய நெடுஞ்செழியப் பாண்டியன் 'யானோ அரசன், யானே கள்வன்' என்று சொல்லி வீழ்ந்து மாய்ந்து போனான். அவனுடைய மனைவியும் அவனோடு சேர்ந்து மாய்ந்து போனாள். அது அன்றைய வரலாறு.

[திரு. வி. ஜெயராமன்] [2002 ஏப்ரல் 1

பிற்பகல் 12-20

பூம்புகார் கண்டு, இப்போது புகாரி ஓட்டல் சாப்ஸ்க்காகப் போனவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம்; எங்கள் அம்மாமீது பல்வேறு விதவிதமான பொய் வழக்குகளைப் போட்டீர்கள். அரேபியாவிலே பாலைவனத்தை வாங்கிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு மட்டும்தான் இல்லை; இங்கிலாந்து நாட்டினுடைய இளவரசியினுடைய அரண்மனையை வாங்கிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டு மட்டும்தான் இல்லை. உலகத்திலுள்ள சொத்துக்களையெல்லாம் வளைத்துப்போட்டு விட்டார்கள் என்று குற்றஞ்சாட்டினீர்களே. நீங்கள் சாட்டிய குற்றச்சாட்டுகள் அத்தனையும் பொய்யாகிப் போய் நீதிபதியினுடைய முன்னாலே பொய்யாய், பழங்கதையாய்ப் போய் விட்டதே; பொய்ப் புகார் சுமத்தினீர்களே நீங்கள் அதற்காக இப்பொழுது வருந்துகிறீர்களா, வருத்தம் தெரிவிக்கிறீர்களா, பூம்புகார் கண்டவர்களே, நெடுஞ்செழியப் பாண்டியனுடைய நீதி வழியிலே நீங்களும் செல்ல வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. எந்தச் சிறைக் கொட்டகை எங்கள் அம்மாவிற்காக அன்றைக்கு 28 நாட்கள் திறந்து வைத்து அடைக்கப்பட்டிருந்ததோ, அதில் யார் அநீதி இந்த நாட்டுக்கு இழைத்திருந்தாலும் போடலாம். எத்தனையோ தவறுகளைக் கடந்த 5 ஆண்டு ஆட்சியில் செய்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் பேசினால் சபாநாயகர் அவர்கள் மணியடித்துவிடுவார்கள். ஆகவே, நானே நாணயமாய் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியே மணியடித்துவிட்டேன். உட்காருங்கள்.

**திரு. வி. ஜெயராமன்:** ஆனைமலை நல்லாறுத் திட்டத்தை நிறைவேற்றித் தாருங்கள், பொள்ளாச்சி நகரமன்ற மேல்நிலைப் பள்ளியை உருவாக்கித் தாருங்கள், ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையிலே இப்போது இருக்கின்ற நிம்மதி தொடர்ந்து இருப்பதற்கு எதிர்க் கட்சிகள் தொடர்ந்து நல்ல ஒத்துழைப்புத் தாருங்கள் என்று சொல்லி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



2002 ஏப்ரல் 1]

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள அறிக்கைமீது கூடுதல் விவரங்களைச் சொல்ல அனுமதிக்கிறேன்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவைத் நாட்டிலேயிருந்து இந்தியாவிற்கு வந்துள்ள பெண்மணி குறித்து ஏற்கெனவே விதி 110-ன்கீழ் நான் வெளியிட்ட அறிக்கையுடன் சேர்த்து இன்னும் ஒரு தகவலை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சரியான ஆவணங்களின்றி குவைத் நாட்டிலிருந்து வந்த தலால் ஆஸ்மி என்ற பெண்ணிடமிருந்து விண்ணப்பக் கடிதம் பெற்று, அதன் அடிப்படையில் செங்கை கிழக்கு காவல் துறை கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டை அணுகி அவருக்கு ஜாமீன் பெற்றுத் தந்து, அவரை ஜாமீனில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

## 5. வரவு - செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் தமிழ்நாடு அரசின் திட்டத்தின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக உரையாற்ற வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்து, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு நிலைகளை ஆராய்ந்து சுமார் 98 நிமிடங்கள் இந்த அவையிலே உரையாற்றினார்கள். வருகின்ற வருவாயை அப்படியே செலவு செய்தால் அதை அரசாங்கம் (Government) என்று சொல்கிறோம். அந்த வருவாயிலே ஓட்டை உடைசல் இல்லாமல், திறம்பட நல்ல முறையிலே செய்தால் அதை good Government என்று சொல்கிறோம். வசதி படைத்தவர்களிடமிருந்து வரியை வாங்கி, இல்லாத ஏழை எளிய,

[திரு. டி. சுதர்சனம்] [2002 ஏப்ரல் 1

சமுதாயத்திலே பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினால் அது மக்கள் நல அரசு people Government என்று சொல்கிறோம். அந்த வகையிலே

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு."

என்று திருவள்ளுவர் சொல்லிய கோட்பாடுகளுக்கிணங்க, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் வழிகாட்டுதலின்படி நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் பாராட்டக்கூடிய பல்வேறு திட்டங்களை அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள்.

தரிசு நில மேம்பாட்டிற்காக சுமார் 40 கோடி ரூபாய் ஒதுக்கியது, விளைச்சலைப் பெருக்குவது, மலிவு விலை மதுவை ஒழித்தது, போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைக்க உயர்நிலைக் குழு ஏற்பாடு செய்வது, விவசாயிகளின் நீண்டகாலக் கடனைத் தீர்க்க ஒரே தவணையிலே கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம், ரேஷன் அரிசி விலை ரூ.3.50 காசுக்கு நீடிப்பது, அரசு மருத்துவமனைகளிலே வயதானவர்களுக்குத் தரமான சிகிச்சை அளிக்க மருத்துவ வசதி அட்டை வழங்குவது, ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்குகின்ற திட்டம், விவசாயப் பேரறிஞர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனையின்படி முதல்வர் அறிவித்த 15 அம்சத் திட்டம், இராஜா கே. செல்லையா தலைமையிலே வரிச் சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம் ஏற்படுத்துதல், போலி ரேஷன் கார்டுகளை ஒழிக்கவும், ரேஷன் அரிசியைப் பெறவும் ஜூலை மாதம் முதல் அடையாள அட்டைச் சீட்டு வழங்குதல், கோயில்களில் அன்னதானத் திட்டம், இப்படிப் பல்வேறு நல்ல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததற்குத் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

தமிழகத்தில் உள்ள முக்கியமான கோயில்களில் ஒரு வேளை அன்னதானத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது முழுக்க முழுக்க கோயில்களிலே பெறப்படும் நன்கொடையைக் கொண்டு நடத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதற்கென குறிப்பிட்ட வைப்புத் தொகை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. நன்கொடைகள் வரவில்லை என்று சொன்னால், இந்த அரசு மேற்கொண்டு இந்தத் திட்டத்தினை நடத்துவதற்கு என்ன வழிவகை செய்யவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 1] [திரு. டி. சுதர்சனம்]

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அன்னதானத் திட்டத்தினைத் தொடங்குவதற்காக, முதன்முதலாக 63 திருக்கோயில்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இந்த 63 திருக்கோயில்களிலும் ஏற்கெனவே நல்ல வருமானம் உள்ளது. அந்த அடிப்படையில்தான் இந்தக் கோயில்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இந்த 63 திருக்கோயில்களுக்கு நன்கொடைகள் வந்தாலும் வரவில்லையென்றாலும்கூட, இந்தக் கோயில்களுக்குக் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டே இந்த அன்னதானத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான் இந்தக் கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் நன்கொடைகள் வந்து குவிந்தவண்ணம் உள்ளன. அதற்கு மேலும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும், ஒரு வைப்பு நிதியை ஏற்படுத்த இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய நன்கொடைகள் கொடுப்பவர்களுக்கு வருமான வரி விலக்குக் கிடைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது; இதற்காக மத்திய அரசை அணுகியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) படிப்படியாக நன்கொடைகள் பெற்று, வைப்பு நிதிகளை ஏற்படுத்தி தமிழகத்திலுள்ள எல்லா முக்கிய திருக்கோயில்களிலும் இந்த அன்னதானத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. அரசாங்கமே இப்படிப்பட்ட நன்கொடைகளை வசூல் செய்யுமா? அல்லது கோயில்களில் இருக்கின்ற நிருவாக அதிகாரிகள் இதனை வசூல் செய்வார்களா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சிலர் நேராகவே திருக்கோயில்களில் நன்கொடைகள் கொடுத்தவண்ணம் உள்ளார்கள். சிலர் என்னைச் சந்தித்து என்னிடம் அந்த நன்கொடைகளை வழங்க வேண்டுமென்று விருப்பம்

தெரிவித்துள்ளார்கள். ஆகவே, எப்படி வேண்டுமானாலும் நன்கொடைகளைக் கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம் அவர்கள் எந்த முறையிலே நன்கொடை கொடுக்க விரும்புகிறார்கள் என்பது தெரியவில்லை.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் என்ற முறையில் அரசிடமிருந்து எனக்குக் கிடைக்கும் சம்பளப் பணத்தை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கு அன்னதானத் திட்டத்திற்காக நான் நன்கொடையாகக் கொடுக்க முடிவு செய்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இப்படி நன்கொடைகள் கொடுக்க முன்வந்தால் இந்த அரசு வரவேற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தத் திட்டம் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலில் அமலில் இருக்கிறது. வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யார் நன்கொடை கொடுத்தாலும் அவர்களுடைய பெயரிலே குறைந்தபட்சம் 100 பேருக்காவது தினசரி அங்கே அன்னதானம் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் எழுந்தவுடன், முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பினைத் தொடர்ந்து திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் கொடுக்கப் போகிறார்கள் என நினைத்தேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முதலமைச்சரைப் போல நான் முழுச் சம்பளத்தைக கொடுக்க முடியாது. ஆனால் நானும் ஆண்டுதோறும் எங்கே அன்னதானம் செய்ய முடியுமோ அங்கே செய்து கொண்டுதான் இருக்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தின்படி, என்னுடைய மாவட்டத்தில் இருக்கிற 3 கோயில்களில் அன்னதானத் திட்டத்தினைத் தொடங்கி இருக்கிறார்கள். திருவேற்காடு, திருத்தணி, திருவொற்றியூர் ஆகிய 3 கோயில்களுக்கு என்னுடைய தனிப்பட்ட முறையிலே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு இலட்சம் என்று 3 இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்குவதாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மன்றத்திலே அறிவிக்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களைப் பேரவையின் சார்பாகப் பாராட்டுகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** 2002-2003 ஆம் ஆண்டின் மாநில அரசின் மொத்த வருவாய்ச் செலவு 26,861.54 கோடி எனவும், வருவாய் வரவுகள் 20,628.32 கோடி எனவும் வருவாய்ப் பற்றாக்குறை 6,233.22 கோடி எனவும் மதிப்பீடு செய்யப்பட்டு நிகர ஒட்டுமொத்தப் பற்றாக்குறை 1,330 கோடி எனவும் புதிய வரிகள் மூலம் 690 கோடி ரூபாய் கிடைக்கும் என்றும், அதற்குப் பின்னும் 640 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய வரிகளில் தமிழகத்தின் நிதிப் பகிர்வில் 512 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்திட்ட காரணத்தினால் மாநில அரசுக்குக் கூடுதல் நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது.

இருந்தாலும், தமிழகத்தினை இந்தியாவிலே உள்ள எல்லாத் துறைகளிலும் முதன்மை பெற்ற மாநிலமாகச் செய்ய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற துணிச்சலான நடவடிக்கைகள் காரணமாக பல்வேறு நலத் திட்டங்கள் தமிழகத்தில் நடைபெறும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் நம்புகிறது. இந்த நிதி நெருக்கடியிலிருந்து மீள மத்திய அரசு முழு அளவிலான ஒரு கட்ட உதவித் திட்டம் one Time package ரூபாய் 3,000 கோடி மானியமாக வழங்க வேண்டுமென்று நியாயமான கோரிக்கையை வைத்துள்ளார்கள். இந்தத் திட்டத்தைக் கர்நாடக மாநில முதல்வர் மாண்புமிகு கிருஷ்ணா அவர்கள்—நம்முடைய முதலமைச்சர் கருத்தை — ஆதரித்துள்ளார்கள். மற்ற மாநில முதல்வர்களும் நம்முடைய முதலமைச்சருடைய கருத்தை ஆதரிக்க வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது.

பிற்பகல் 12-30

சமீபத்திலே தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலே கடுமையான மழை பெய்தது. வீடு இழந்து, மாடு இழந்து, கன்றுகள் இழந்து, ஆடு இழந்து எல்லாவற்றையும் இழந்து பயிரிட்ட பயிர்கள் எல்லாம் பாழாகிப்போன பின்னாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 49 கோடி ரூபாய் அரசு ஒதுக்கி, உதவி செய்து வருகிறது. ஆனால், மத்திய அரசோ இதுவரை சிறப்பு நிதியாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. மத்திய அரசிலே அங்கம் வகிக்கின்ற தமிழகக் கட்சிகளும் அதற்காகக் குரல் கொடுக்கவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளிலே 1998-99, 1999-2000, 2000-2001 ஆகிய ஆண்டுகளிலே மத்தியிலுள்ள பாரதிய ஜனதா அரசு; உத்தரபிரதேசம்,

[திரு. டி. சுதர்சனம்] [2002 ஏப்ரல் 1

பஞ்சாப், ஆந்திரா, குஜராத் போன்ற மாநிலங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை, சுற்றுலாத் துறை, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட பணம் ஒவ்வோர் ஆண்டும் கூடுதலாக இருந்தது. ஆனால், துரதிருஷ்டவசமாகத் தமிழ்நாட்டிற்கு ஊரக வளர்ச்சித் துறை, சுற்றுலாத் துறை, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகியவற்றுக்கு ஒதுக்கிய தொகை ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வந்துள்ளது. குறிப்பாக ஆந்திர மாநிலத்திற்குக் கடந்த 3 ஆண்டுகளிலே பல்வேறு சிறப்பு நிதிகளை மத்திய அரசு வழங்கியிருக்கிறது. மத்திய அரசிலே அங்கம் வகிக்கின்ற தமிழக அரசியல் கட்சிகள், தமிழகத்திற்குச் சிறப்பு நிதி பெறுவதற்கு ஏன் குரல் கொடுக்கக் கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மத்தியிலே இரயில்வே பட்ஜெட் வருகின்றபோது, காவிரிப் பிரச்சினை வருகின்றபோது, கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிப் பாகுபாடின்றி ஒன்றாகக் குரல் கொடுக்கின்றார்கள். ஆனால், நமது மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகச் சேர்ந்து குரல் கொடுக்காத காரணத்தினால் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படுகின்றனவோ என்ற அச்சம் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மத்திய அரசு சமீபத்திலே பல்வேறு பொருட்களுக்கு, சமையல் எரிவாயு, மண்ணெண்ணை போன்ற பொருட்களுக்கு வரியைக் கடுமையாக உயர்த்தியது. சாதாரண ஏழை மக்கள் இந்த வரி உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாரத பிரதமர் கூட சில தினங்களுக்கு முன்பாக, பா.ஜ.க. பல்வேறு மாநிலங்களிலே தோல்வியுற்றதற்கு மத்திய அரசினுடைய வரி விதிப்புத்தான் காரணம் என்று கூறியுள்ளார்கள். தமிழக மக்கள் மத்திய அரசின்மீது கடும் கோபம் கொண்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசின் வருமானத்தில் பெரும் பகுதி ஊழியர்களின் சம்பளத்திற்கே செலவிடப்படுவதாகக் கூறியுள்ளார்கள். நிர்வாகச் செலவுகளையும், அரசின் செலவினங்களையும் குறைக்காமல் எவ்வளவு வரிஸயத்தான் பொது மக்கள் தலையிலே சுமத்த முடியும். சில மாதங்களுக்கு முன்னாலே தமிழக அரசு சுமார் 3,300 கோடி ரூபாய் அளவிற்கு வரியை விதித்தது. இப்போது 690 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை விதித்திருக்கிறது. ஒரே ஆண்டிலே சுமார் 4,000 கோடி ரூபாய் வரி விதித்திருப்பது தமிழக மக்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி இருக்கிறது. வரி ....



2002 ஏப்ரல் 1]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் 3,500 கோடி ரூபாய்க்கு மேல் வரி விதிக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். இது தவறு என்று நான் கூற விழைகின்றேன். காரணம், மின் கட்டண உயர்வு என்ற முறையிலே 1,500 கோடி ரூபாய்; பஸ் கட்டண உயர்வு என்ற முறையிலே 1,030 கோடி ரூபாய்; அந்தப் பணத்தில் அரசிற்கு சல்லி காசு கூட வருவதில்லை. அந்த உயர்வைப் பொறுத்த வரைக்கும் — அந்த நிறுவனங்கள் ஏற்கெனவே, 1,025 கோடி ரூபாய்க்கு மேல் நட்டத்தில் இயங்குகின்றன—போக்குவரத்துக் கழகங்களுக்கும், ஆண்டுக்கு 5,000 கோடிக்கு மேல் நட்டத்திலே இயங்குகிற மின் வாரியத் துறைக்குமே அந்தப் பணம் போய்விடுகிறது. உணவு மானியக் குறைப்பு என்ற முறையிலே 600 கோடியும், சிக்கன நடவடிக்கைகள் என்ற முறையிலே 668 கோடியும், சென்ற ஆண்டு, சில மாதங்களுக்கு முன்னால் வரியாக விதிக்கப்பட்டன. இதிலும்கூட உணவு மானியக் குறைப்பு 600 கோடி ரூபாயை நாம் திரும்பப் பெற்று விட்டோம். அரசு அலுவலர்கள் பொது வைப்பு நிதியிலே 668 கோடியிலே கிட்டத்தட்ட 330 கோடி திரும்பப் பெறப்பட்டு விட்டது. மின் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு இவற்றில் எல்லாம்கூட 225 கோடி ரூபாய், பிறகு 331 கோடி ரூபாய், ஒட்டுமொத்தமாக 1,485 கோடி ரூபாய் அந்த 4,010 கோடி ரூபாயிலிருந்து குறைக்கப்பட்டு விட்டது. அப்படிக் குறைக்கப்பட்ட பிறகும்கூட, ஒட்டுமொத்தமாக 2,525 கோடி ரூபாய்தான் புதிய நிதி ஆதாரங்களாகச் சேகரிக்கப்பட்டன. அதிலும்கூட, அந்த மின் கட்டண உயர்வால் வந்த 1,275 கோடியையும், பஸ் கட்டண உயர்வால் வந்த 700 கோடியையும், முறையே மின் வாரியத்திற்கும், போக்குவரத்துக் கழகத்திற்கும் தந்து விட்ட பிறகு, கருவூலத்திற்கென வந்தது 550 கோடி ரூபாய்தான். அதற்குப் பிறகு, ஊழியர்களுக்கு 30 கோடி ரூபாய் சலுகை அளிக்கப்பட்டது. ஆக, 520 கோடி ரூபாய்தான் அரசுக்கு வந்தது. இந்த ஒட்டுமொத்தப் பணமும், 12 மாதங்களுக்கும் உரிய பணமாகும். ஆக, 4 மாத காலத்திற்கு, இந்த இறுதிக் கால அரசு நிதிக்கு, அரசுக்குக் கிடைத்த பணம் ஒட்டுமொத்தமாக 140 கோடி ரூபாய் மட்டும்தான். தாங்கள் நினைப்பதுபோல, 4,000 கோடியும் அல்ல; 3,000 கோடியும் அல்ல. வரி விதிப்பு என்று எல்லோரும் சொல்கிறார்கள். எதிர்க்கட்சியில் பலரும் கூறுவதுபோல, நாலாயிரத்து சொச்சம் கோடி வரி விதிப்பு, மினி பட்ஜெட் போடப்பட்டது என்பது உண்மைக்கு மாறான செய்தி. அரசுக்கு வந்த வருவாய் 4 மாத காலத்திற்கு வெறுமனே 140 கோடி ரூபாய் மட்டும்தான்.

[ 2002 ஏப்ரல் 1

பிற்பகல் 12-35

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கருத்திலே இருந்து நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதுவரையிலே நீங்கள் transport மற்றும், மின்சார வாரியத்திற்குப் பணம் கொடுத்திருந்தீர்கள். இப்போது வரி விதிப்பினால் அவர்களுக்கு நேரடியாக வரி போய் விடுகிறது என்று சொல்கிறீர்கள். ஆகையினால், அரசாங்கத்திடமிருந்து அந்த நிறுவனங்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தோமே பணம், அது உங்களுக்கு மிச்சமாகி இருக்கிறது அல்லவா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் சொல்வதைப்போல அல்ல. அரசுக்கு அதனால் இழப்புத்தான். காரணம், ஏதோ போக்குவரத்துக் கழகங்களும், மின் வாரியத் துறையும் இந்த வரி விதிப்பால் முழுவதும் நட்டத்திலேயிருந்து மீண்டு விட்டது என்ற ஒரு கற்பனையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள்: அப்படியல்ல, தொடர் நட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அவர்களுக்கு இருக்கின்ற நட்டத்தில், விதிக்கப்பட்டிருக்கின்ற அந்த வரி விதிப்பின் பலன் மிகச் சொற்பமான அளவிலே இருந்திருக்கின்ற காரணத்தால், அந்த நட்ட நிலை தொடர்கிறது; அரசு அவர்களுக்குத் தரவேண்டிய உதவியும் தொடர்கிறது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி இருந்தபோதிலும், இந்த 4,000 கோடி ரூபாயைப் பொதுமக்கள்தான் செலுத்துகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, வரி போடாமல் அரசு செயல்படமுடியாது. ஆனால், ஏழையெளிய மக்கள், சாதாரண குடும்பத்திலே வாழ்கின்ற நடுத்தர மக்கள் உபயோகப்படுத்துகின்ற அரிசி, கோதுமை, பருப்பு, மிளகு போன்ற பொருட்களுக்கு வரி விதித்திருப்பதைத் தாயுள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்யவேண்டுமென்றுதான் என்னுடைய வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த 600 கோடி ரூபாய் வரிக்குப் பதிலாக, நெல், அரிசி, பருப்பு, கோதுமை போன்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரிக்குப் பதிலாக, கன்னியாகுமரியிலேயிருந்து, சென்னை மாநகரம் வரை உள்ள பல்வேறு பகுதியிலே இருக்கின்ற ஆற்று மணலை எடுத்துப்போவதில் கோடி



2002 ஏப்ரல் 1 ] [திரு. டி. சுதர்சனம்]

கோடியாகக் கொள்ளை போய்க் கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு மணல் வாரியம் அமைத்து, அதிலே கருங்கற்கள், மணல் முதலிய பொருட்களையெல்லாம், ஏலம் விடுவீர்களேயானால், அதன்மூலமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 250 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருவாய் வரும். ஆனால், இப்போது சமூக விரோதிகள் தங்கள் கையிலே மணல் குவாரிகளை எடுத்து, மணல் எடுக்கின்ற இடங்களாக மாற்றிக்கொண்டு மிகவும் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரில் மட்டும், நாள் ஒன்றுக்கு 5,000 லாரிகள் மணல் தேவைப்படுகிறது. அந்த 5,000 லாரிகளும், மணல் எடுக்கின்ற இடத்திலே 750 ரூபாய் கொடுத்து விட்டு, வழியிலே மாட்டிக் கொண்டால் 25,000 ரூபாய் அபராதம் கட்டிக்கொண்டுதான், இப்போதும் சென்னையிலே லாரிகள் மூலம் மணல் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றினால், அரசுக்கு சுமார் 250 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும்.

அதேபோன்று, சி.எம். டி.ஏ. மூலம் சென்னையிலே இருக்கின்ற தனியார் கட்டடங்கள், அரசுக் கட்டடங்கள் ஆகியவற்றை வரைமுறைப்படுத்துவதன் மூலமாக அரசுக்கு 200, 250 கோடி ரூபாய் நிச்சயமாகக் கிடைக்கும். அதிலே 2, 3 முறை அப்படி அறிவிக்கப்பட்டும், பணம் வரவில்லை என்று சொன்னால், அந்த வரைமுறைப்படுத்தும் திட்டத்திலேகூட பல்வேறு முறைகேடுகள் பல்வேறு சங்கடங்கள், இருந்தன. அந்த முறைகேடுகள் காரணமாகத்தான் 250 கோடி ரூபாய் வராமல், முதலிலே 100 கோடி ரூபாய் வந்தது, இப்போது 26 கோடி ரூபாய் அளவிற்கு வந்திருக்கிறது. சென்னை மாநகரத்திலே பல்வேறு கட்டடங்களைக் கட்டி விட்டார்கள். அந்தக் கட்டடங்களை இடிப்பதற்கு முடியாது. அவர்கள் வரைமுறைப்படுத்திக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-40

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணா நகரிலே 'என்' 'பிளாக்கிலே 800 சதுர அடியிலே உள்ள ஒரு வீட்டுமனையைத் தமிழக அரசு ஒதுக்கியது. அந்த 800 சதுர அடி வீட்டுமனையில் ஒருவர் வீடு கட்டினார். வீடு கட்டுகிறபோது அதிகமான அளவுக்கு ஒரு அறை போட்டார்; அதற்கு வரைமுறைச் சட்டத்திலே தன்னைப் பதிவு செய்து கொண்ட பின்னாலே, அந்த அதிகாரி அங்கே போய்ப் பார்த்தபோது, இரண்டு பேர் டெய்லர் கடை வைத்திருந்தார்கள். இது வர்த்தக நிறுவனம் என்று போடப்பட்டு, 800 சதுர அடி கொண்ட வீட்டிற்கு 3 1/2 இலட்சம் ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள். நான் ஆதாரத்தோடு இந்த மன்றத்திலே நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி, அதிகமான அளவுக்கு வரி

போடுவதால், அந்தத் திட்டத்திலே சேர்வதற்கு மக்கள் மிகவும் அச்சப்படுகிறார்கள். அந்தத் திட்டத்தினை மிக எளிமையாக்கி, எல்லா மக்களும் பயன்பெறுகின்ற வகையிலே நீங்கள் செய்வீர்களேயானால், 250 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருவாய் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல; கிராமங்களிலேயெல்லாம் விவசாய மக்கள் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு 5 நிமிடம். அவர்களில் சிலர் பக்கத்திலே இருக்கின்ற புறம்போக்கு நிலங்களையெல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்த இடங்களையெல்லாம் இப்போது சமூக விரோதிகள் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, அவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களெல்லாம், அரசாங்கத்தின் உபயோகத்தில் இல்லாமல் இருக்கின்ற நிலங்களெல்லாம் யார் யாரிடத்திலே இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் அரசாங்கமே, அரசு நிர்ணயித்திருக்கின்ற விலைக்கு இரண்டு மடங்கு கொடுத்து வாங்கிக் கொள்ளலாம் என நீங்கள் ஒரு திட்டம் கொண்டுவந்து, அறிவிப்பீர்களேயானால், அதன் மூலமாக 250 கோடி ரூபாய் அரசுக்கு வரும். இப்படிப்பட்ட திட்டங்களைப் போட்டு, அரிசி, கோதுமை போன்ற மிக அத்தியாவசியமான பண்டங்களுக்குப் போட்டிருக்கின்ற வரியை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற 6 கோடி மக்களில் 1 கோடி பேர் படித்திருக்கிறார்கள். அந்த ஒரு கோடி மக்களில், 45 இலட்சம் பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். அந்த வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தவர்கள் 45 இலட்சம் பேர் எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம். ஃபில்., பட்டம் பெற்றவர்கள்; 1 இலட்சம் பேர் ஆசிரியர் பட்டம் பெற்றவர்கள்; 7,000 பேர் டாக்டர்கள்; 75 ஆயிரம் பேர் பொறியியல் பட்டதாரிகள். இவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதை நிதியமைச்சருடைய பதிலுரையிலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வேலையில்லாமல் இருக்கின்ற 49 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பைத் தரவேண்டும்; அவர்களுக்கு வருமானம் கிட்ட வேண்டும்; அதன் மூலமாக ஒட்டுமொத்தப் பொருளாதார முன்னேற்றம் மாநிலத்தில் ஏற்பட வேண்டும் என்ற நோக்கோடுதான் வேலைவாய்ப்பை





எண்ணற்ற அளவிற்குத் தரக்கூடிய தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பண்ணையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வேறு. ஆனால், படித்துவிட்டு வேலையில்லாத பட்டதாரி இளைஞர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., படித்துவிட்டு வேலையில்லாமல் 45 ஆயிரம் பேர் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். இஞ்சினியரிங் படித்துவிட்டு 75,000 பேர் காத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் படிப்பு படித்துவிட்டு 1,10,000 பேர் பதிவு செய்துவிட்டுக் காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் என்று நான் சொன்னேன். Information Technology-ஐப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டு, 2 Mbps Optic Fibre Connectivity என்பதை, இந்த ஓராண்டு காலத்தில் திட்டத்தட்ட 5,000 கிலோமீட்டர் தூரத்திற்குத் தமிழகத்தில் போட வேண்டுமென்றும், அதன் காரணமாக பொறியியல் துறையிலே படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். Back work, Call centre போன்ற பணிகளில் வெளிநாட்டு அமைப்புகள் மூலம் கிடைக்க Tidel Park-II என்ற திட்டம் பிற தனியார் துறையினர் ஆகியோர் முதலீடு செய்து, இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள வந்திருக்கிற காரணத்தால், ஓராண்டு காலத்தில் அதிகப்படியான வேலைவாய்ப்பு உருவாகும்; 2 Mbps Optic Fibre Connectivity திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி விரைவிலே நடைமுறைக்கு வர இருக்கிறது. இதுபோன்று வேலையற்றுத் தத்தளிக்கின்ற மக்களுடைய பிரச்சினைகள் இதன்மூலம் தீர்க்கப்படும் எனக் கூற விரும்புகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் டி.கே.எம். 9 ரக நெல்லை எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டதன் காரணமாக, விவசாய மக்கள் பெரும் சந்தோஷப்பட்டார்கள். அதே நேரத்திலே வெளிமாநிலங்களுக்கும் அரிசியை எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று அறிவிப்புச் செய்தீர்கள்.

அதன் மூலமாக விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால், இப்போது தஞ்சையிலே இருக்கின்ற 950 விவசாய நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே தரமான நெல்லைக் கொடுக்கவில்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால், வியாபாரிகளிடமிருந்து நெல்லைப் பெற்றுவிட்டதாக முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் அருள்கூர்ந்து யார் உண்மையான விவசாயிகளோ. யார் அதில் பயிரிடுகிறார்களோ அவர்களிடமிருந்து— அடங்கல் காப்பி இருக்கிறது. சிட்டா காப்பி இருக்கிறது. பட்டா பாஸ்புத்தகம் இருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்து — அந்த 950 விவசாய நெல் கொள்முதல் நிலையங்களை இரண்டு வாரக் காலத்திற்குத் திறந்து வைத்து நெல் கொள்முதல் செய்யவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளைத் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக வைக்கிறேன்.

பிறபகல் 12-45

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி வரை விவசாயிகள் கொண்டு வருகின்ற நெல் கொள்முதல் செய்யப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். இப்போது, தாலுகா godown-களுக்கு அந்த நெல்லைக் கொண்டு வந்தால் கொள்முதல் செய்கிறார்கள். மீண்டும் இந்தக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில விவசாயிகள் நீண்ட தூரம் நெல்லை எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால் அவர்களுக்கு அதிகச் செலவினம் ஆகிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அந்த travelling allowance போன்ற ஒரு உதவித் தொகையை வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அநேகமாக அந்தப் பகுதியிலே, வெள்ளப் பாதிப்பிற்குப் பிறகு, நடவு செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்டவையெல்லாம் ஆங்காங்கு இருக்கின்றன. தாலுகா தலைநகரம் என்பது 40 முதல் 50 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இந்த நேரடி நெல் கொள்முதலைச் சென்ற மாதம் 15 ஆம் தேதி வரையிலும் டோக்கன் கொடுத்துக் கொள்முதல் செய்தோம் என்று சொன்னார்கள். இதுவரையிலும் அந்த நெல்லை யாரும் purchase செய்யவில்லை. தாலுகா





godown ஒன்று கூடத் திறக்கப்படவில்லை. ஆங்காங்கு விவசாயிகள் சேர்ந்து சில சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய அளவிற்குச் சாலை மறியல் செய்வதால், பொது மக்களுக்கு இடையூறுமாக இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது centre-லே இருக்கின்ற நெல்லையாவது, முதலமைச்சர் அவர்கள், ஓர் அவசர உத்தரவைப் போட்டு அதனை purchase செய்துவிட்டு, அதற்குப்பிறகு இந்த நடைமுறையைக் கடைப்பிடித்தால் இந்த விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். அதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உங்களுடைய கவன ஈர்ப்பு இதோடு முடிந்தது.

* **மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரை நாம் சம்பா கொள்முதலிலே சுமார் 10 இலட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறோம். 15 ஆம் தேதி T.P.C. எல்லாம் close செய்கிறபோது 1 இலட்சத்து 55 ஆயிரம் டன்னுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டன. 1 இலட்சத்து 55 ஆயிரம் டன்களும் கொள்முதல் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குமேலாக, தாலுகா godown-கள் 39 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த 39 godown-களிலும் இதுவரை 5,071 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற விவரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். திரு. சுதர்சனம், நீங்கள் இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் உட்காருங்கள். உங்கள் எதிரில்தான் அமைச்சர் அமர்ந்திருக்கிறார், பிறகு கேட்டுக்கொள்ளுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 10 இலட்சம் ஏக்கரிலே கரும்பு பயிரிடப்படுகிறது.

தேவைக்கு அதிகமாகக் கரும்பு பயிரிடப்படுகிற காரணத்தினாலே சர்க்கரை விலை வீழ்ச்சியடைகின்ற காரணத்தினாலே இப்போது பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட்டு, மொலாசஸ்க்கும் சரியான விலை கிடைக்கவில்லை. அதனால் சர்க்கரை ஆலைகள் எல்லாம் நஷ்டத்திலே இயங்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து கரும்பிலேயிருந்து மோட்டார் வாகனங்களுக்குப் பயன்படுகின்ற எத்தனால் என்ற பொருளை உற்பத்தி செய்வதன் மூலமாக கரும்பு விவசாயிகளுக்கு அதனால் இலாபம் ஏற்பட்டு, டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கின்ற ஒரு நிலையை தமிழக அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளிடமிருந்து மின் இணைப்பிற்கு 25 ஆயிரம் ரூபாய் deposit வாங்குகிறார்கள். அதனை 10 ஆயிரம் ரூபாயாகக் குறைக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை நிறுத்தக்கூடாது.

இப்போது பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. திருப்பூரிலும், கோயம்புத்தூரிலும் உள்ள நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவற்றையெல்லாம் போக்க வேண்டுமென்று சொன்னால், வெளிநாட்டு மூலதனம் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும். அதற்கு நாம் என்ன வழிவகை செய்யப்போகிறோம் என்று தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் முடிவடைந்தவுடன் வெளிநாடுகளிலே வாழுகின்ற இந்தியர்களை எல்லாம் அழைத்து ஒரு கூட்டத்தை கூட்டி, வெளிநாடுகளிலே வாழுகின்ற இந்தியர்கள் தமிழகத்திலே முதலீடு செய்வதற்கு ஒரு பெரிய திட்டத்தை வகுக்க வேண்டும். அதன்மூலமாகப் படித்து வேலையில்லாத இளைஞர்கள், பட்டதாரி இளைஞர்கள் அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். உலக அளவிலே இப்போது மூன்று தொழில்களுக்குத்தான் பெரிய மதிப்பு இருக்கிறது. ஒன்று மருந்து உற்பத்தி செய்கின்ற தொழில்; ஒன்று பதப்படுத்திய உணவுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற தொழில்; கம்ப்யூட்டர் அடிப்படையிலே இருக்கின்ற தொழில் (Information Technology). இந்த மூன்று தொழில்களையும் ஊக்குவிக்கின்ற வகையிலே N.R.I. போன்றவர்கள் எல்லாம் இங்கே வரும் வகையில், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டும் — பல்வேறு





N.R.I. நண்பர்களை நான் சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவர்கள் எல்லாம் முதலமைச்சர் மீது — நிறையவே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீண் போகாமல் இருக்க முதலமைச்சர் அவர்கள் உலக நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து அவர்களையெல்லாம் சந்தித்து வெளிநாட்டு முதலீடு தமிழகத்திற்கு வருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் தொகுதியைப் பற்றி ஒரே ஒரு நிமிடத்திலே சொல்லி முடிக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும்.

**திரு. டி. சுதர்சனம்:** திருவள்ளூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் வளாகத்திற்குள்ளேயே மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டப்படவேண்டும். மாவட்ட தலைமை மருத்துவமனை போதிய டாக்டர்களுடன் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். மிகவும் பின்தங்கிய பகுதியான பூண்டி ஒன்றியத்தில் தேவையான அளவு நிலம், நீர் இருப்பதால் ஒரு பெரிய தொழிற்சாலையை அந்தப் பகுதியில் ஏற்படுத்த வேண்டும்.

திருவள்ளூரிலே ஒரு அரசு உயர்நிலைப்பள்ளி கூடக் கிடையாது. புதிதாக ஒரு உயர்நிலைப் பள்ளியைக் கல்வி அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டும். திருவள்ளூரிலே புதிதாகக் கட்டப்பட்டு வரும் மேம்பாலத்திலிருந்து ஒரு புற வழிச் சாலை அமைக்கப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்பட வேண்டும். மாவட்ட நீதிமன்றம் இப்போது இல்லை. எல்லோரும் செங்கல்பட்டுக்குச் செல்ல வேண்டிய ஒரு துர்பாக்கிய நிலை இருக்கிறது. ஆதலாலே, மாவட்ட நீதிமன்றம் திருவள்ளூரிலே அமைக்கப்பட வேண்டும்.

பெரிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். கடைசியாக எனது தொகுதியிலே கள்ளச்சாராயம் அதிகமான அளவு காய்ச்சப்படுகிறது. என்னுடைய தொகுதியிலேதான் பீமன்தோப்பு, ராமதண்டலம் பகுதியிலே கள்ளச்சாராயத்தைத் தடுத்த ரத்தினம்மாள், இந்திராணி போன்றவர்கள் எல்லாம் படுகொலை செய்யப்பட்டனர். எனவே அந்தப் பகுதிக்குச் செல்லும்போதெல்லாம் எப்படியாவது கள்ளச்சாரயத்தைத் தடுத்து நிறுத்துங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத்

[திரு. டி. சுதர்சனம்] [2002 ஏப்ரல் 1

தாய்மார்களுக்கு ஒளிவிளக்கு ஏற்றுகின்ற வகையிலே திருவள்ளூரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் கள்ளச் சாராயத்தை உடனடியாக அடியோடு ஒழிக்க வேண்டும். இது ஆந்திரத்தை ஒட்டியுள்ள பகுதி. ஆந்திர மாநிலத்திலிருந்து பாக்கெட் சாராயங்கள் நிறைய வந்துகொண்டிருக்கின்றன. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலேயே 39-வது பக்கத்தில் 100-வது பத்தியை அவரது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்நாட்டிலேயே அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் முக்கிய மாநிலமாக தமிழ்நாடு உருவாகி வருவது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். மத்திய அரசின் தொழில் உதவி, தலைமைச் செயலகம் தெரிவித்தபடி, 2001 செப்டம்பர் வரை நம்முடைய மாநிலத்திற்கு ஏற்பளிக்கப்பட்ட மொத்த வெளிநாட்டு முதலீடுகள் ரூபாய் 22,493 கோடி ஆகும். வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் தமிழ்நாடு இந்நாட்டில் 3-வது இடத்தை வகிக்கிறது. பெரும் தொழில் திட்டங்கள் பல இம்மாநிலத்தில் விரைவில் அமைய உள்ளன என்று நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் விவாதத்திலே கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் பெரும்பாலான பக்கங்களிலே அரசினுடைய உத்தேச விருப்பங்கள் அதாவது செய்கிறோம், செய்வதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று முழுமை பெறாத வாக்கியங்கள் அமைந்திருக்கின்றன. குறிப்பாக பக்கம் 26-27-ல் இவ்வரசு கருதியுள்ளது; உத்தேசிக்கப்பட்டுள்ளது; இப்படிப்பட்ட முழுமைபெறாத வார்த்தைகள் இருக்கின்ற காரணத்தினாலும், அதே நேரத்தில் மக்கள் மீது சுமத்தப்படுகின்ற வரிகள் என்ற நிலைகள் வருகின்ற போதும், இப்போது திட்டமிட்டு மக்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் அரசு, அரிசி, கோதுமைக்கு 2 சதவீதம் வரி



2002 ஏப்ரல் 1] [திரு. தி. வேல் முருகன்]

என்றும் வெல்லம், பருப்பு, மிளகாய் போன்றவற்றிற்கு 4 சதவீதம் வரி என்றும், தேங்காய் மீது 2 சதவீதம் வரி என்றும் விதிக்கப்பட்டுள்ளது; வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. அதுபோல் பக்கம் 25-ல் அலோபதி மருந்துகளின் விலைகள் பெரிதும் உயர்ந்துவிடும் என்பது குறித்து அரசு கவலை கொண்டுள்ளது. இந்நிலையில் சித்தா, யுனானி, ஆயுர்வேதா போன்ற இந்திய மருத்துவ முறைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று இவ்வரசு விழைகிறது என்று கூறிவிட்டு, பக்கம் 45-ல், சித்தா மற்றும் யுனானி மருந்துகள்மீது, ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஹோமியோபதி மருந்துகளுக்கு விதிக்கப்படுவதுபோல, 4 சதவிகித வரி விதிக்கப்படும் என்று கூறியிருப்பது, பாட்டாளி மக்கள் கட்சிக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

*பிற்பகல் 12-55*

அதேபோல, சாம்பிராணிக்கு 4 சதவிகித வரியும், கைக்குட்டைகளுக்கு 4 சதவிகித வரியும் விதித்து இப்போது சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற சாதாரண இந்தப் பொருட்கள்மீது இந்த அரசு இவ்வளவு பெரிய நிதிச் சுமையை ஏற்படுத்தியிருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி கண்டிக்கிறது.

அதேபோல், இப்போது ஸ்டால்களிலே எல்லாம் கிடைக்கக்கூடிய சிப்ஸ்க்கும் இந்த அரசு 10 சதவிகித வரியை விதித்திருக்கிறது.

முழுக்க, முழுக்க 66 சதவிகிதத்திற்கு மேலாக, வணிக வரிகளை நம்பியே இந்த பட்ஜெட் தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது. இது வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத ஒன்று போலத் தெரிகிறது.

அதைப்போல, இந்த நிதிநிலை அறிக்கையிலே, திட்ட ஒதுக்கீடு என்பது....(குறுக்கீடு)

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாததுபோல, தமிழ்நாட்டில் Commercial tax-ஐ நம்பியே இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள். இந்த மாநிலத்தில் மட்டுமல்ல; எந்த மாநிலமானாலும் வணிக வரிகள்தான் அந்த மாநிலத்தில் முக்கிய வருவாய்க்கு வழியாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[ 2002 ஏப்ரல் 1

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் குறிப்பிடுவது, அடித்தளத்திலே இருக்கின்ற சாதாரண, பாமர, கிராமப்புற மக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய இந்த வணிக வரிகளைக் கொண்டு இவ்வளவு சுமையைச் சுமத்துவதைக் காட்டிலும்-- இப்போது அரசுக்கு வருமானம் வரக்கூடிய மிகப்பெரிய தொழில் மணல் விற்பனை தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களிலே, சில தனி நபர்களால், கோடிக்கணக்கான ரூபாய் இப்போது மணல் விற்பனை மூலம் கொள்ளை அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு லாரிக்கு 600 ரூபாய் வெளியிலே அந்த வருமானத்தை அவர்கள் பெறுகிறார்கள். அரசுக்கு வெறும் 130 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. குறிப்பாக, செங்கல்பட்டு மாவட்டத்திலே மட்டும், கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு இப்போது 3 ஆயிரம் லாரிகளுக்கு மேல் மணல் எடுக்கிறார்கள்-- இந்த அரசு அந்த மணல் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு நிதியைப் பெருக்க வேண்டுமென்று கருதியிருக்கும் என்று சொன்னால், கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு குறைந்தபட்சம் 3000, 4000 கோடிகள் வருமானத்தை ஈட்டித் தருவதற்கு வாய்ப்பு இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அதுபோல....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது, மணலில் முறைகேடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காண்பித்தார். இது கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடுமையான உத்தரவுக்கிணங்க, கடுமையான நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதெல்லாம் உங்களுக்கு தெரியும் என்று நினைக்கிறேன். அந்த வகையிலே, முறைகேடாக நடக்கக்கூடியதற்கு, சட்டப்படியான நடவடிக்கை எடுத்து முறைப்படுத்திக் கொண்டிருக்கிறது அம்மா அவர்களுடைய அரசு என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி அதுவல்ல; வருமானத்தை... (குறுக்கீடு)



2002 ஏப்ரல் 1 ]

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டட வேலையே தமிழகத்தில் தற்போது தேக்க நிலையிலே இருக்கிறது ஒரு cartel உருவாக்கி மைய அரசில் அங்கம் வகிக்கின்ற சிலர் அதற்கு உடந்தையாக இருக்கிற காரணத்தால், சிமெண்ட் விலை உயர்வினால், கட்டட வேலை பாதிக்கப்பட்டு, இப்போது தமிழகத்திலே கட்டட வேலையே இல்லாத நிலையில், எப்படி மணல் இந்த அளவுக்குச் செலவாகும் என்று உறுப்பினர் சொல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. மணல் மூலமாக வரியை விதித்து, மூவாயிரம் கோடி ரூபாய் கொண்டுவர முடியும் என்பதை எந்த ஆதாரத்தோடு கூறுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. அப்படி ஒரு கணக்கைப் போட்டு இத்தனை லோடு மணல் எடுக்கப்படுகிறது; இதற்கு இவ்வளவு வரி விதிக்கலாம்; இப்படி வருமானம் வரும் என்ற ஓர் ஆதாரத்தோடு தாருங்கள்; கட்டாயம் அரசு அதைப் பரிசீலிக்கும் (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. வேல் முருகன் அவர்கள் சொல்கிற நேரத்திலே, 3 ஆயிரம் கோடி என்று சொல்லவில்லை; 3 ஆயிரம் லாரி மணல் எடுக்கப்படுகிறது என்று சொன்னார். (குறுக்கீடு)

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த மணல் குவாரிகளிலிருந்து எடுக்கப்படும் வருமானத்தைப் பார்த்தால், அரசுக்கு ஆண்டுதோறும் 3 ஆயிரம் கோடி அளவுக்கு வருமென்று சொன்னார் என்று அவரே ஒப்புக்கொள்கிறார். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இது மிகையான மதிப்பீடு. எந்த அடிப்படையில் இந்தக் கணக்கை அவர் போட்டிருக்கிறார் என்று அரசுக்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும். எனக்குத் தெரிந்தவரை, தமிழகத்தில், ஐந்தாறு மாவட்டங்களில், ஐந்தாறு இடங்களில்தான் இந்த மணல் குவாரிகள் இருக்கின்றன. ஆகவே, அவற்றிலிருந்து தினந்தோறும் மணலை அள்ளினால்கூட, அரசுக்கு இவர் சொல்வதுபோல ஆண்டுக்கு 3 ஆயிரம் கோடி எல்லாம் வராது. எவ்வளவு வரும் என்பதை மதிப்பிட்டு, இந்த அவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது தெரிவிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள்கூட கடந்த சில தினங்களுக்கு முன்பு draft budget என்று சொல்லக்கூடிய வகையிலே, மாதிரி நிதிநிலை அறிக்கையை அரசுக்கு ஆலோசனையாக வழங்கி இருக்கிறோம். அந்த ஆலோசனையில்கூட, ஒரு நாளைக்கு 2 ஆயிரத்திலிருந்து 3 ஆயிரம் லாரி வரையிலே மணல் செங்கல்பட்டு பகுதியிலே மாத்திரம் எடுக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறோம். அப்படி எடுக்கின்ற அந்த 3 ஆயிரம் லாரிகளுக்கு அவர்கள் செலுத்தக்கூடிய தொகை என்பது ஒரு லாரிக்கு வெறும் 130 ரூபாய். அந்த 130 ரூபாயைச் செலுத்திவிட்டு, ஒரு பெர்மிட் வாங்கிக்கொண்டு, அதை வைத்துக்கொண்டே 10 லாரி, 5 லாரி மணல் எடுக்கக்கூடிய நிலை இப்போது நிலவிக்கொண்டிருக்கிறது. யார்மீதும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அவர்கள் வேண்டுமென்றே திருட்டுத்தனமாக எடுக்கிற காரணத்தாலே, இப்படி ஒரு லாரி மணல் 130 ரூபாய் என்று, 3 ஆயிரம் லாரிகள் தினந்தோறும் என்று சொன்னால், அரசுக்கு எவ்வளவு வருமானம் இழப்பு ஏற்படுகிறது என்பதை அந்த draft budget வாயிலாக நாங்கள் சுட்டிக்காட்டி இருக்கிறோம். நாங்கள் சராசரியாகப் போட்ட கணக்குப்படி, தமிழ்நாடு முழுவதற்கும் ஆண்டுக்கு 720 கோடி ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறோம். அந்த அளவிற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை முறைப்படுத்த வேண்டுமென்று ஆலோசனையாக இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு)

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் பேசட்டும்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே திட்ட ஒதுக்கீடு என்பது இல்லாமல் இருக்கின்றது. அதையும் பா.ம.க. சுட்டிக்காட்ட விரும்புகின்றது. கடந்த ஆண்டு 6,040 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீடாக அளவு இருந்தது. ஆனால், இந்த ஆண்டு 5,200 கோடி ரூபாயாக....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவைக்கு ஏற்கெனவே-Vote on Account for expenditure in





2002-2003-என்பதிலே விளக்கமாக ஒதுக்கீடு என்ன என்று தரப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, நிதிநிலை குறித்து பகுதி-1 Budget Memorandum Part-I என்பதிலும் மிகத் தெளிவாகத் திட்ட ஒதுக்கீடு என்னென்ன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு புதிய நடைமுறையில் தரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் படிக்குமாறு வேண்டுகிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, சில துறைகளைத் தவிர்த்து மற்ற துறைகளுக்கு புதிய ஆள் எடுப்பு இல்லை என்று நம்முடைய அரசு அறிவித்து இருக்கின்றது. அப்படிப் புதிய ஆள் எடுப்பு இல்லை என்று சொன்னால், இப்போது இலட்சக்கணக்கான இளைஞர்கள் அரசினுடைய வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, படித்துவிட்டு, பல்வேறு பட்டங்களைப் பெற்றுவிட்டுக் காத்திருக்கக்கூடிய அந்த இளைஞர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக ஆகிவிடும் என்பதைக் கருத்திலே கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, நம்முடைய பக்கத்து மாநிலங்களிலே படித்துவிட்டு இப்போது வரும் சில தீவிரவாதிகளை நம்முடைய அரசு பிடிக்கின்றபோது, அவர்களுடைய கல்வித் தரத்தைப் பார்க்கின்றபோது, எம்.ஏ., எம்.பி.ஏ., பி.எஸ்சி. என்று கூறுகிறார்கள். இப்படிப் படித்துவிட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்கிற நிலை வருகிறபோது, அவர்கள் தீவிரவாதத்தை நோக்கிச் செல்லக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது; அதையும் இந்த அரசு கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பொதுத் துறை நிறுவனங்கள் படிப்படியாகத் தனியார்மயம். ஆக்கப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். பேருந்து என்று வருகின்றபோது, அதனை அப்படி ஆக்கும்போது அதிலே வேலை செய்யக்கூடிய பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய நிலைமை, பல இலட்சக்கணக்கான குடும்பங்களினுடைய நிலைமை, இவற்றையெல்லாம் இந்த அரசு கருத்திலே கொள்ளவேண்டும்.

இப்போது இட ஒதுக்கீடு என்ற சமூக நீதி இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக்கூட நம்முடைய தலைவர்கள் பட்டம் தந்து இருக்கிறார்கள் சமூக நீதி காத்த வீராங்கனை என்று. அவர்கள் நிச்சயம் சமூக நீதியைக் காக்கின்ற வகையில் செயல்படவேண்டும். இப்போது பொதுத் துறை நிறுவனங்கள்

படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும் என்ற அந்த வரிகளைக்கூட நீக்க வேண்டுமென்றும்—அப்படி ஒரு முயற்சியை எடுக்கக்கூடாது—அதைக் கைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

• **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கட்சி மத்தியிலே மத்திய அரசுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறது. எப்படியாவது மீண்டும் மத்திய அமைச்சரவைக்குள் நுழைய வேண்டும் என்று பகிரத முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு இலாபம் ஈட்டிக்கொண்டிருக்கும் பொதுத் துறை நிறுவனங்களைக்கூடத் தனியார்மயம் ஆக்குவதுதான் மத்திய அரசின் கொள்கை. அந்தக் கொள்கையை மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கிறாரா என்பதை இங்கே தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மத்திய அரசு எடுத்திருக்கக்கூடிய அந்தக் கொள்கை முடிவிலேகூட, அரசுக்கு இலாபம் வரக்கூடிய பொதுத் துறை நிறுவனங்கள் தனியார் துறைக்கு விடப்படும் என்ற முடிவிலேகூட, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களிடத்திலேயும், தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது. இப்போது உதாரணமாக என்.எல்.சி. நிறுவனம் நெய்வேலியில் இருக்கிறது; அது தனியார்மயம் ஆக்கப்படும் என்ற அறிவிப்பு வந்தவுடனே, முதலிலே கண்டனக் குரல் கொடுத்தது, போராடியது பாட்டாளி மக்கள் கட்சி என்பதை இங்கே மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், ஒரு மணித் துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இருக்கையில் இருக்கிறபோது பேசுகிற முதல் வாய்ப்பு எனக்கு; எல்லா உறுப்பினர்களும் 25 நிமிடங்கள், அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். எனக்கும் கொஞ்சம் அதிக நேரத்தை ஒதுக்கித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு என்று வருகிறபோது 1,505 கோடி ரூபாயை நம்முடைய அரசு ஒதுக்கி இருக்கிறது. இந்த 1,505 கோடி ரூபாய் நிச்சயம் உள்ளாட்சிகளுக்குப் போதாது. இப்போது கிராமப்புறங்களிலே இருக்கின்ற அந்த மக்களுடைய அடிப்படைத் தேவைகளை உணர்ந்து,





அந்த மக்களுக்கு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புகள்தான் இப்போது முதல் கூறாக இருக்கின்றன. அதனால் அந்த உள்ளாட்சிகளுக்கு இப்போது அரசு குறைந்தபட்ச நிதி ஒதுக்கியதைப் பாட்டாளி மக்கள் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது. அதுபோல சுகாதாரம், தொழில், வேளாண்மை போன்ற இந்தத் துறைகளுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவரவர்களே, ஒரு நிமிடம். சுகாதாரம் போன்ற இந்தத் துறைகளுக்கும் நிதி மிகக் குறைந்த நிலையிலேயே ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோல, இப்போது எம்.பி.சி., எஸ்.சி., எஸ்.டி., பி.சி. போன்றோருக்கான பணியிடங்களில் 25 சதவிகிதத்திற்கும் மேலாகக் காலியாக இருக்கின்றன. அதனை நிரப்புவதற்கும் இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** நன்றி சொல்லி விடுகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்கள் நேரத்தில் இரண்டு நிமிடங்களைக் குறைத்துக்கொள்கிறேன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு வேண்டுகோள். என்னுடைய தொகுதியிலே சாராயச் சாவுகள் ஏற்பட்டு 54 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தேயிலை விவசாயிகளுக்கு இந்த அரசு சொசைட்டி ஆரம்பித்து, அவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்கள் புண்ணியத்தில் அவர் ஒரு நிமிடம் பேசி இருக்கிறார்.

[ 2002 ஏப்ரல் 1

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் பல்வேறு செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதுகுறித்து இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, நிதிநிலை அறிக்கையில் மூடிய ஆலைகளைத் திறப்பதற்கான அறிவிப்புகளைப் பற்றிச் சொல்லாதது வருத்தத்தை அளிக்கிறது. குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொலகிறார்கள்; நிதி அமைச்சர் அவர்களும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இதைச் செய்வது என்பது பொதுவாகவே மிகப் பெரிய பாதிப்பைத் தமிழகத்திலே ஏற்படுத்தும் என்பது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் அழுத்தமான கருத்து.

தமிழகத்திலேதான் இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பதை, மிக வலுவாக மிகப் பெரிய போராட்டத்தை நடத்திப் பெற்றிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, 69 சதவிகித இட ஒதுக்கீடு என்ற அந்தக் கொள்கையிலே உறுதியாக இருந்து அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்தவர்கள் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே பொதுத் துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுமானால் இட ஒதுக்கீட்டுக் கொள்கை கேள்விக்குரியதாக ஆக்கப்படுமா? இல்லையா? எந்த அடிப்படையிலே வேலைவாய்ப்பைப் பெற முடியும்? இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, தனியார்மயம் என்று சொன்னாலே இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் சேர்ந்தே மறுக்கப்படுகிறது என்பதுதான் இதிலே இருக்கிற பொருளாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். அதுபோல வேலை உத்தரவாதத்திற்கும் வாய்ப்பே இருக்க முடியாது.

தனியார் விரும்புகிற அந்த ஏற்பாட்டின் அடிப்படையிலேதான் அப்படிப்பட்ட நிலைமைகள் வரும். இதைப் போக்குவரத்துத் துறையிலும் கொண்டு வருவதற்கான முயற்சி குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தரிசு நில மேம்பாடு சம்பந்தமாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். அதிலே மகிழத்தக்க வகையிலே விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழைகளும் பயன்பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமானால் நிலங்கள் அளிக்கப்படும் என்று சொல்லியிருப்பது



2002 ஏப்ரல் 1 ] [திரு. வை. சிவபுண்ணியம்]

வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால் இந்த நிலங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுப்பவர்கள் என்பவர்கள் இவர்களாக இருக்க முடியாது என்பதுதான் இப்போது இருக்கிற நிலை. மிக வசதி படைத்தவர்கள்தான் இந்த நிலங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுப்பார்கள். அப்படிக் குத்தகை எடுக்கிறபோது அவர்கள் குறைந்த விலையிலே குத்தகை எடுப்பதற்குகூட முயற்சிகள் எடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்கு அதிகாரிகளும், மற்றவர்களும்கூட உறுதுணையாகச் சென்றுவிடுவார்கள். பல தவறுகள் நடக்கலாம். அதிலே பேரங்கள்கூட, கமிஷன்கள்கூட நடைபெறுவதற்கு உரிய வாய்ப்புகள் ஏற்பட்டு விடுகிற கொடுமை இருக்கிறது.

• **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யூகத்தின் அடிப்படையில் ஒரு நல்ல திட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர் இப்படி அடிப்படை இல்லாத குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திட்டத்தைக் கொச்சைப்படுத்தவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிப் புரிந்துகொள்ள வேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை வலுவாக ஆதரிப்பவர்கள். இந்த நிலச் சீர்திருத்தத் திட்டத்தின் அடிப்படையிலே இந்த நிலங்கள் வழங்கப்பட்டு இருக்குமானால் மகிழ்ச்சியோடு வரவேற்கலாம். ஏழை எளிய மக்கள், நிலம் இல்லாதவர்கள் ஏராளமானோர் தமிழகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, அதன் மூலமாக நிலத்தை மேம்படுத்துவதும், உற்பத்தியைப் பெருக்குவதும் என்ற அந்த நிலையில் திட்டம் எடுக்கப்படுமானால் அது சரியாக இருக்கும்.

பிற்பகல் 1-10

• **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நிலத்தை ஏழை எளிய மக்களுக்குப் பிரித்துக் கொடுப்பதில் இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்த நிலத்தை மேம்படுத்த வேண்டுமானால், அதிக முதலீடு செலுத்த வேண்டும். இந்த ஏழை எளிய மக்கள் எப்படி அந்த மூதலீட்டைச் செலுத்த முடியும். திரும்ப அரசிடம் எதிர்பார்ப்பார்கள். அரசிடம் பணம் இல்லை. அதனால்தான் இதைத் தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுக்கலாம் என்று திட்டமிட்டு இருக்கிறோம். தனியாருக்குக் குத்தகைக்கு விடும்போது, அந்தப்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 1

பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதை ஒரு ஷரத்தாகப் போட்டுத்தான் அவர்களுக்குநிகூஷ் கொடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஒரு செய்தி. சென்ற நிதிநிலை அறிக்கை வைக்கிறபோது எங்களுடைய மாநிலச் செயலாளர் மரியாதைக்குரிய நல்லக்கண்ணு அவர்கள் உங்களைச் சந்தித்து. மலையடிவாரப் பகுதியிலே இருக்கிற அப்படிப்பட்ட நிலங்களை ஒப்படைத்துவிடக்கூடாது என்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். நீர் ஆதாரங்கள் மலையிலிருந்து கிடைக்கிற காரணத்தினாலே, அப்படி ஒப்படைக்கப்படுமானால், அந்த நீர் ஆதாரங்கள் தமிழகத்திற்குக் கிடைக்காமல் தடைபட்டு விடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே இந்த நிலங்களை வழங்குகிறபோது கூட இடம் பார்த்துக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களை எல்லாம் நீங்கள் பகுத்துப் பார்த்துச் செய்ய வேண்டும் என்ற செய்தியையும், இப்படிப்பட்ட பிரச்சினையை நிறுத்த வேண்டும் என்றும் உங்களிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். அதைப் பரிசீலிப்பதாகவும் உடனடியாக அப்படிப்பட்ட காரியங்கள் நடக்காது என்று நிறுத்தி வைத்ததாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தீர்கள். ஆகவே, இந்தத் தரிசு நில மேம்பாடு என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. இதிலே இருக்கிற நடைமுறைகளையும், சட்ட திட்டங்களையும் கவனித்து, அதிலே தவறுகள் நிகழாதவண்ணம் இந்த அரசு செய்யவேண்டும் என்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. இங்கே நெல் கொள்முதல் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. நிலைமை அப்படி. நான் நேற்று என்னுடைய தொகுதியினுடைய பகுதியான பரவாக்கோட்டை என்ற இடத்திற்குச் சென்றேன். அங்கே ஒரு திருமண மண்டபத்தின் வாசலிலே கிட்டத்தட்ட ஆயிரம் நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்படிருக்கின்றன. அந்தத் திருமண மண்டபத்திற்கு உள்ளே செல்ல முடியாத நிலை; அந்த இடத்தைப் போல. நூற்றுக்கணக்கான இடங்களில், கிராமங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன.

அதேபோலப் பிற்பட்ட காலத்தில் சாகுபடி செய்த பகுதிகளில் இப்போது தான் அறுவடை தொடங்குகிறது. குறிப்பாகத் தஞ்சை



2002 ஏப்ரல் 1] [திரு. வை. சிவபுண்ணியம்]

மாவட்டம், பூதலூர் ஒன்றியப் பகுதியில் இப்போது தான் அறுவடை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான சூழ்நிலை இருக்கிறபோது இந்த நெல் கொள்முதலை உடனடியாக நிறுத்தியது என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இன்னும் பல இடங்களிலே அடுக்கி வைக்கப்பட்ட நெல் மூட்டைகள் எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. தாலுகா கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வருவது என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்துச் செலவை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னால்கூட அங்கே இருக்கிற நிலைமையின் அடிப்படையிலே அவ்வளவு நெல்லையும் கொண்டு வந்து போடுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. இது நடைமுறையிலே சாத்தியமில்லாத ஒரு பிரச்சினை. ஆகவே இருக்கிற நெல்லை, எங்களுடைய உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னது போல, கொள்முதல் நிலையங்களிலே அடுக்கி வைக்கப்பட்டிருக்கிற நெல்லை உடனடியாகக் கொள்முதல் செய்வதற்குரிய உத்தரவை நீங்கள் பிறப்பித்தால் நல்லது.

கடனைப் பற்றி நான் சென்ற முறை பேசுகின்றபோது 311 கோடி ரூபாயை நீங்கள் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்தீர்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் அதனை மனதார வரவேற்றோம்: பாராட்டினோம்; வாழ்த்தினோம். அதேபோல அந்த வாழ்த்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிற நிலைமையில் இந்தக் கொள்முதல் நிலையத்தினுடைய இந்தப் பிரச்சினை இருக்கிறதே, அது அந்தச் சாதனைகளோ அல்லது அதிலே இருக்கிற மகிழ்ச்சிகளோ இல்லாமல் இதனை மறந்துவிடுகிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது என்பது தான் இதிலே இருக்கிற உண்மை. இதை ஆழமாகப் புரிந்துகொண்டு அதற்குரிய மாற்று ஏற்பாடாக இந்தக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து விவசாயிகளுடைய நெல்லைக் கொள்முதல் செய்யவேண்டும். குறிப்பாக இதிலே இருக்கிற ஒரு அபாயம் ஒரு கிலோ நெல்லை ஒரு ரூபாய் விலைக்கு வியாபாரிகள் கேட்கிறார்கள். இந்தக் கொடுமை எங்களுடைய திருவாரூர் மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில் நடைபெற்று இருக்கிறது. ஒரு மூட்டை 70 கிலோ நெல் ஒரு ரூபாய் என்ற விலையில் கேட்டால், ஒரு மூட்டை 70 ரூபாய்க்கு கேட்கிறார்கள் என்ற கொடுமையான நிகழ்ச்சி இருக்கிறது. 415 ரூபாய் ஒரு மூட்டை நெல் விற்ற இடத்தில், வெறும் 70 ரூபாய்க்கு ஒரு மூட்டையை விலைக்குக் கேட்கிறார்கள் என்று சொன்னால் விவசாயிகள் என்ன செய்வார்கள்? விவசாயி வெள்ளத்தாலே பாதிக்கப்படுகிறான், புயலாலே பாதிக்கப்படுகிறான், வறட்சியாலே பாதிக்கப்படுகிறான். இயற்கைச் சீற்றத்திற்குத் தொடர்ந்து ஆளாகிற விவசாயி இப்படி நெல்லை

உற்பத்தி செய்த முறையில் அவன் விற்க முடியாமல் தடுமாறுகிறான் என்று சொல்லுகிறபோது, தயவுசெய்து இந்தக் கொள்கையினை மறுபரிசீலனை செய்து, எப்படியாவது அறிவிப்பினைச் செய்து கொள்முதலைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்குச் சிரமம் இருக்கிறது; நிதிப் பிரச்சினை இருக்கிறது. இருந்தாலும் நிலைமைகளைப் பகுத்துப் பார்த்து இதனைச் செய்யவேண்டுமென்று நான் அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வரியைப் பற்றிச் சொன்னார்கள். நான் அதை விலாவாரியாகச் சொல்ல நேரம் இல்லை. குறிப்பாகத் தமிழகத்திலே அரிசிக்கும் கோதுமைக்கும் வரி போட்டது என்பது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. அரிசி என்று சொன்னாலே தமிழகத்திலே அரசியலாகி விடுகிற நிலைமையைப் பற்றி நாம் அறியாதவர்கள் அல்ல. ஆகவே தமிழகம் என்று சொன்னாலே அரிசி அரசியலாகி விடுகிறது. ஆகவே அந்த அரசியலாகி விடுகிற அரிசிக்கு வரியைப் போட்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து ரத்து செய்யவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

மலிவு விலை மதுவைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே இருக்கிற நிலைமைகள் பற்றிச் சொன்னீர்கள். Bar திறப்பது என்பது பிரச்சினைக்குரிய விஷயமாக இருக்கிறது என்பது பொதுவான கருத்தாக உருவாகியிருக்கிறது. ஆகவே இந்த நிலைமைகளை மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கவேண்டும். குறிப்பாகக் கள்ளுக் கடைகளைத் திறந்து விடலாம். இதிலே இருக்கிற நிலைமை என்னவென்றால், கள்ளுக்கடைகளைத் திறப்பதனாலே பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அதேபோல பனைத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். கள் அருந்துகிற காரணத்தினாலே உடல் நலம் பெரிய அளவிலே பாதித்துவிடாது. ஆகவே, அது ஒரு மருத்துவ குணம் உடையதாக இருக்கிற காரணத்தாலே, கள்ளுக்கடைகளைத் திறப்பது என்பது பொருத்தமாக இருக்கும். வீணாக, வெளிநாட்டு மது வகைகளைச் சாப்பிட்டுவிட்டு உயிர் விடுவதைவிட, கள்ளுக்கடைகளைத் திறப்பதன் மூலம் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பது மட்டுமல்ல; தென்னை விவசாயிகளுக்கும் ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். தென்னைக்கு விலை கிடையாது. மிகப் பெரிய பாதிப்பிலே தென்னை விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்கத்தக்க வகையில்கூடக் கள்ளுக்கடைகளைத் திறக்கலாம். அதன்



மூலமாக மிகப் பெரிய வாய்ப்பு ஏற்படும். அதைச் செய்ய வேண்டும் என்பதை நான் அன்போடு இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வியைப் பொறுத்தவரையில் ஒரு செய்தி. பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் கட்டணங்களை வசூலித்துக் கொள்ளலாம் என்று தனியார்களை ஊக்கப்படுத்துகிற செய்தி வந்திருக்கிறது. இதிலே இருக்கிற முரண்பாடு, கட்டாயக் கல்வியை உறுதி செய்வதற்கான முயற்சியை இந்திய அரசு எடுக்கிறது; தமிழக அரசும் எடுக்கிறது. வரவேற்கிறோம். கல்வியை உறுதி செய்வதற்கான முயற்சியை எடுப்பது என்பதே, ஏழை எளிய மக்கள் கல்வி பெறவேண்டும் என்பதற்கான முயற்சி. அப்படி எடுக்கின்ற அந்தச் சூழ்நிலை வருகின்றபோது, உயர் கல்வியைச் சாதாரண ஏழை எளிய மக்கள் பெற முடியாத ஒரு இக்கட்டான நிலை இந்தத் திட்டத்தின் மூலமாக வந்து விடுகிற அபாயம் இருக்கிறது. ஆகவே, கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம், படிப்படியாக அரசு அவர்களுக்கு வழங்குகிற நிதியையும் நாங்கள் நிறுத்திவிடுவோம் என்று சொன்னாலேயே, இப்பொழுது கட்டணம் வசூலிக்கின்ற தனியார் நிறுவனங்கள் மேலும் பல மடங்கு கட்டணத்தை வசூலிக்கின்றபோது, உயர் கல்வி என்பது சாதாரண ஏழை, நடுத்தர மக்களுக்கு எட்டாக் கனியாக ஆகிவிடுகின்ற அபாயம் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சுயநிதிக் கல்லூரிகள் எல்லாம் செயல்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அச்சம் கொள்வதுபோல், எந்தத் தனியார் கல்வி நிறுவனமாவது அதிகமான கட்டணத்தை வசூலித்தாலோ; முறைகேடுகள் செய்தாலோ அவற்றின்மீது கடுமையான நடவடிக்கையை எடுப்பதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதோடு இந்த முறையில், புதிய ஒரு முறையைப் புகுத்துவதற்கும் நம்முடைய அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் நேரடியாகக் கல்லூரிகளில் பணம் கட்டுவதன் மூலமாக அதிக பணம் வசூலிக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு என்ன கட்டணத்தை நிர்ணத்திருக்கிறதோ, அதனை வங்கிகளிலே கட்டிவிட்டால், நேரடியாக அவர்களுடைய account-க்குப் போய்விடும். ஆகவே, இந்தப் பிரச்சினை வராது. ஆகவே, உயர் கல்வியிலே என்னென்ன நிலைமைகள் எல்லாம் வரும் என்று நீங்கள் சொல்கிறீர்களோ, அவற்றை எல்லாம் களைவதற்கு அனைத்து

நடவடிக்கைகளையும் புரட்சித் தலைவி அரசு செய்து கொண்டிருக்கிறது. அதோடு, ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாக ஆதி திராவிடப் பெண்களுக்கெல்லாம் கல்லூரிகளில் இலவசக் கல்வி தருவதற்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, எந்தவிதத்திலும் இந்தத் திட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு உயர் கல்வியிலே எந்தத் தடையும் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கத்திற்கு நன்றி. ஆனால் தனியார்மயம் என்று சொல்கிறபோது, கல்வி என்பது படிப்படியாக ஏழைகளுக்கு எட்டாக் கனியாகிவிடும் என்பதுதான் இருக்கிற நிலைமை. நான் இதைச் சொல்கிறபோது, இதிலே அரசியலோ, பிரச்சினையோ இல்லை. இதை நீங்கள் தொலைநோக்குப் பார்வையோடு பார்க்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான கருத்தாக இருக்கிறது. உயர் கல்வியைப் பெறுகிற சூழ்நிலை என்பது ஒருசில குடும்பத்திற்குத்தான் இருக்கும். சாதாரணமாக ஏழை, நடுத்தரப் பகுதி மக்கள்தான் அதிகமாக வாழ்கிறார்கள். ஆகவே, அந்த வாய்ப்பு என்பது தமிழகத்தில் கிடைக்கிறது என்ற மகிழ்ச்சி இருக்கிற இந்தச் சூழ்நிலையில் இது எதிராகப் போய்விடுமோ என்று நினைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். கொஞ்சம் அதிக நேரம் வேண்டும். ஆகவே, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலை இருப்பதாக நான் கருதுகிறேன். 385 ஒன்றியங்களிலே, 1 கோடி முதலீட்டில் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது கிராமத்தினுடைய தேவைகளை அறிந்து, அடிப்படை. .

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொகுதியிலும் ஏதாவது ஒரு கிராமம்தான் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும். ஆகவே, அது ஒரு பாரபட்சமான திட்டம் என்று கருதி, இந்த அரசு தமிழகம் முழுமையிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் பயன்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காக 385 ஒன்றியங்களிலும் தலா 1 கோடி ரூபாய் முதலீடு உள்ள ஒரு தொழிற்சாலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





*பிற்பகல் 1-20*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு இருந்த திட்டத்திலேகூட ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஒன்றியம். ஆக இரண்டு ஒன்றியங்கள் ஒரு தொகுதியில் இருந்தால் இரண்டு ஒன்றியங்களில் ஒரு ஒன்றியத்திற்கு நிச்சயமாக அந்தத் திட்டம் உண்டு. (குறுக்கீடு) அதாவது ஒரு தொகுதிக்கு ஒன்று இருந்தது. இப்போது ஒரு தொகுதிக்கு இரண்டு வரும்.

ஒரு தொகுதிக்கு ஒரு கிராமம் என்னும்போது அந்தக் கிராமம் தன்னிறைவு பெறுகிறது. ஆகவே அதைப் பரவலாக்கும்போது பலன் இல்லாமல் போய்விடக் கூடாது என்பதற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார் என்று நினைக்கிறேன்.

*** மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிற அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு பஞ்சாயத்து யூனியனின் ஒரு பஞ்சாயத்துக்கு For a Panchayat within a Union என்ற முறையிலே ஒதுக்கப்பட்டு, ஆங்காங்கே சாலைகள் போடுவது (குறுக்கீடுகள்) அதற்காகத்தான் சொல்கிறேன். What I am telling is the same. அப்படி ஒதுக்கப்பட்டு அந்த ஒரு பஞ்சாயத்தில் மட்டும் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது மேற்கொண்டிருக்கிற திட்டத்தினுடைய நோக்கம் வேறு. உங்களுக்கு ஏற்கெனவே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. Rural based agro activities—விவசாயத்தை ஒட்டிய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொள்கை. கிட்டத்தட்ட நமது மக்கள் தொகையில் 70 சதவிகிதம் பேர் கிராமத்தில் வாழ்கிறார்கள். அதுவும் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 11 சதவிகிதம் நிலங்கள்தான் முழுமையாக நீர்வசதி பெற்ற நிலங்களாக இருக்கின்றன. மீதம் இருக்கிற 89 சதவிகிதம் நிலங்கள் நீர்வளம் மிகக் குறைந்த நிலையிலே உள்ள நிலங்களாக இருக்கின்றன. நிலத்தடி நீர் 500 அடி, 700 அடி, 800 அடி என்று போய்விட்ட நிலையில் இருக்கின்றன. எனவேதான், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், உலக விவசாய விஞ்ஞானி அவர்களை, Deputy Chairman of Planning Commission என்றுகூட அந்தத் தகுதியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். இந்தியத் துணை கண்டத்திலேயே எந்த மாநிலமும் ஒரு பொருளாதார விஞ்ஞானியை, ஒரு விவசாய விஞ்ஞானியை Deputy Chairman of Planning Commission என்று நியமிக்கவில்லை. அவரோடு சேர்த்து பல அறிஞர்களை. அந்தக்

[திரு. சி. பொன்னையன்] [ 2002 ஏப்ரல் 1

முழுவிலே உள்ளடக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஒருவர் இந்த ஆண்டு தக்காளி போட்டு கிலோ 5 ரூபாய்க்கு விற்றுவிட்டால், அடுத்த ஆண்டு எல்லோரும் தக்காளியை போடுவார்கள் கிலோ 10 காசு என்று போய்விடும். உழவனுக்கு வருமானம் இல்லை, உழைக்கும் தொழிலாளி, ஆதிதிராவிடர், அருந்ததி மக்களுக்கும் கூலி கிடைப்பதில்லை. எல்லோருக்கும் பொருளாதாரச் சரிவு, நலிவு என்று ஏற்பட்டுவிடுகிறது. இந்த முறை மாறவேண்டும் என்பதற்குத்தான் Crop Pattern என்று கொண்டு வந்து எந்தப் பயிரை எந்தெந்தப் பகுதியில் பயிரிடுவது; பயிர்க் கடன் கொடுப்பது; கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்த 2 பிளாக்கில், 4 பிளாக்கில் தக்காளி உற்பத்தி செய்யவேண்டும்; அந்த 4 பிளாக்கில் மிளகாய் உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்கிறோம்.

Another 4 blocks are meant for onion cultivation என்ற முறையிலே என்னென்ன பயிர்களை உற்பத்தி செய்தால் அந்த விளைபொருளை விற்பனை செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும். The product should be a marketable product. உற்பத்தி செய்த பொருளுக்கு இலாபம் கிட்டாமல், உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது என்ற முறையிலே உழவர்கள் தத்தளிக்கக் கூடாது என்பதற்குத்தான் டாக்டர் சுவாமிநாதன் கமிஷன் தற்போது கூறி இருப்பது; வெளிநாடுகளில், தாய்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இருப்பதுபோல நாம் செய்யலாம் எனச் சொல்லி இருக்கிறார்கள்.

Even நைஜீரியா, கென்யா போன்ற நாடுகளில்கூட எந்தப் பயிரை எத்தனை ஏக்கர் நிலத்தில் ஒரு விவசாயி பயிரிடலாம் என்று நிர்ணயிக்கிறார்கள். அப்படிப் பயிரிடக்கூடிய பொருளுக்கும் மார்க்கெட்டிங் இருக்கவேண்டும்; தமிழகத்தில் மார்க்கெட்டிங் இருக்கவேண்டும், அகில இந்திய அளவில் மார்க்கெட்டிங் இருக்கவேண்டும்; வெளிநாடுகளில் மார்க்கெட்டிங் இருக்கவேண்டும் என்ற முறையில் அவற்றைக் கண்டறிந்து அவர் சொல்கிறார்.

அப்படி ஒரு பொருளை உற்பத்தி செய்கிறபோது, an agro-based industries will be set up in that area; அந்தந்த பிளாக்கில் an agro-based industries will be set up in that area; அதாவது விவசாயப் பொருளை ஒட்டிய தொழிலை உருவாக்கவேண்டுமென்பது சுவாமிநாதன் கமிஷனுடைய நோக்கம். உதாரணமாக இரண்டு பிளாக்கில் நெல்லிக்காய் பயிரிடுகிறார்கள் என்றால், அந்த நெல்லிக்காயிலிருந்து anti-oxidant extract எடுக்கக்கூடிய தொழிற்சாலையை அந்த ஊரிலே போடவேண்டும். குறைந்தபட்சம் ஒரு



2002 ஏப்ரல் 1 ] [திரு. சி. பொன்னையன்]

கோடி ரூபாய்; அதற்கு மேலும் வரலாம். கிட்டத்தட்ட 32 வகையான விவசாயப் பொருட்களுக்கு ஒரு கோடியிலிருந்து 20 கோடி வரை முதலீடு செய்து விவசாயத் தொழிலை அந்தந்த பிளாக்கிலே தொடங்குவதற்குத் தனியார் துறைக்கு வாய்ப்புள்ளது. அதை சுவாமிநாதன் கமிஷன் தற்போது ஆய்ந்து வருகிறது. அந்த அடிப்படையில் அரசு முதலீடு, தனியார் முதலீடு இரண்டையும் சேர்த்து கிராமப்புறத்தில் இலாபமான விவசாய விளைபொருளை உற்பத்தி செய்யவேண்டும்; மார்க்கெட்டிங் உள்ள பொருளை விவசாயம் செய்யவேண்டும். அதன்மூலம் வருடம் பூராவும் கிராமப்புறத்தில் இருக்கிற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டவேண்டும். சிறு குறு நில உழவர்களுக்கும் வருமானம் கிட்டவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தத் திட்டம் அந்தப் பஞ்சாயத்து யூனியனில், ஒன்றியம் முழுவதும் உள்ள மக்களுக்குப் பலன் தரக்கூடிய அளவிற்கு அண்ணாவின் பெயரிலே அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று விரிவாக்கப்பட்ட நல்ல திட்டம்; கிராமப்புற பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு உறுதுணையாக இருக்கிற திட்டம். இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்தவொரு மாநிலத்திலும் agro based industries at Panchayat level-Panchayat Union level என்று பஞ்சாயத்து யூனியனில் இதுகாறும் தொடங்கப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்தான் கிராமப்புறப் பொருளாதாரத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த உன்னத திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவை தலைவர் அவர்களே, ஒரு தொகுதியில் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு Industry ஒரு கோடி ரூபாய்க்கு என்று அதை 100 கோடி ரூபாய் திட்டம் மாதிரி நிதியமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் வரவேற்கிறோம். நீங்கள் திட்டம் போடுங்கள். ஆனால் ஒரு கிராமத்திலே தன்னிறைவைப் பெருக்குகிற அளவுக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஒரு தொகுதியில் ஒவ்வொரு வருடமும் எடுத்துக்கொண்டிருந்தோம். ஐந்து பெரிய major villages அதிலே cover ஆகின்றன. ஆகையினால், அந்தத் திட்டத்தை அப்படியே விட்டுவிட்டு நீங்கள் இந்த மாதிரி ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய்க்கு வேறு திட்டங்களை அறிவித்து, எதை எடுத்தாலும், திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொண்டுவந்தது என்ற ஒரே காரணத்திற்காக, பெருமாள் பெத்த பெருமாள் ஆன கதையாய், இது அண்ணா, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று சொல்லி அந்தத் திட்டத்தை எடுத்துவிட்டு ஒரு கோடி ரூபாயிலே ஓராயிரம் பேருக்கு வேலை கிடைக்கிற மாதிரி பேசலாம். அந்த திட்டம் நல்ல திட்டம், ஆனால் இருக்கிறது, நீங்கள் பேசியது...

பிற்பகல் 1-25

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாயில் அந்தத் தொழிற்சாலை அமைக்கபபடுகிறது. Non-farm workers will be able to get employment opportunities in this agro industry. அதுமட்டுமல்ல. அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருளான விவசாயப் பொருளை உற்பத்தி செய்கிற நேரம் உழவர்களுக்கு வேலை கிடைக்கிறது. ஆங்கு இருக்கின்ற உழைக்கும் தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கிறது. Market based products உற்பத்தி செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல, இப்படி ஒட்டுமொத்த கிராமப் பொருளாதாரம் வருகிறபோது, ஆங்கே அந்தத் திட்டத்தின் மூலமாகப் பொருளாதார வளர்ச்சி, கிராமத்திற்கு வருகிறபோது, சாலைகள் போடுவது, கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வது, அத்தோடு மேற்கொள்ளப்படும். நாங்கள் நடைமுறையிலே கொண்டு வந்திருக்கிற திட்டம் ஒரு பஞ்சாயத்து யூனியனிலே 40 பஞ்சாயத்துகள் இருக்குமேயானால், ஒரு பஞ்சாயத்துக்கு அந்தத் திட்டத்தைத் தருகிறீர்கள். மீதமுள்ள 39 பஞ்சாயத்துகளுக்கும் அதைத் தருவதில்லை; மாறுபாடு வருகிறது; பாகுபாடு வருகிறது; அவர்கள் ஓர் ஆண்டுக்குத்தான். அப்படி 42 பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்க 42 ஆண்டுகளாகும். நாங்களும் இருக்க மாட்டோம், நீங்களும் இருக்க மாட்டீர்கள். எனவேதான் குறுகிய காலத்திலே இந்த 42 பஞ்சாயத்துகளுக்கும் ஒட்டுமொத்த வளர்ச்சியைத் தரவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த விரிவாக்கம்; It is a comprehensive scheme; இந்த விரிவான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினுடைய விரிவாக்கமே ஒழிய, அந்தத் திட்டம் மாற்றப்படவில்லை. இதைத்தான் நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக சிமெண்டைப் பற்றி ஒரு செய்தி. 24 சதவீத வரி என்கிற பெயரிலே சொல்கிற காரணத்தினாலே இந்த சிமெண்ட் ஆலை உரிமையாளர்கள் எல்லாம் சப்ளை செய்வதை நிறுத்தி விட்டார்கள் என்ற பத்திரிகைச் செய்தி வருகிறது. விலையைக் குறைப்பதற்கான முயற்சி எடுப்பதாக அரசு அறிவிக்கப்போய், உற்பத்தியாளர்கள் சப்ளை செய்வதை நிறுத்துகிறார்கள் என்று சொல்கிறபோது மேலும் விலை உயர்வதற்குரிய வாய்ப்புத் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே...



* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் உற்பத்தியாளர்கள் சிமெண்ட் சப்ளை செய்வதை நிறுத்தினாலும்கூட இப்போது நுழைவு வரியை எடுத்துவிட்டதால், வெளி மாநிலங்களிலிருந்து தாராளமாக சிமெண்ட் வந்து இங்கே மார்க்கெட்டில் குவிவதற்கு வழி செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. ஆகவே, இந்த சிமெண்ட் என்பது ஒரு பிரச்சினைக்குரியதாக மாறிவிடாமல், விலை உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசினுடைய பொறுப்பாக இருக்கிற காரணத்தாலே நான் இதை வலியுறுத்திச் சொல்கிறேன். அதிலே இருக்கிற பிரச்சினையைத் திரும்பவும் பரிசீலித்து சரி செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, காலத்தின் அருமை கருதி, ஒரே செய்தியோடு முடித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டம், குறிப்பாக ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம்: திருவாரூர், நாகை மாவட்டங்கள் முற்றிலும் விவசாயத்தைச் சார்ந்திருக்கிற மாவட்டங்கள். அதுவும் அந்த மாவட்டத்தில் தொழில்கள் என்பது அறவே கிடையாது. விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொண்டாவது தொழில்கள் தொடங்குவதற்கான முயற்சிகளை எடுக்கலாம். அதற்கான முயற்சியை இந்த அரசுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

O.N.G.C. மூலமாக எங்களுடைய மாவட்டத்தில் ஏராளமாக எண்ணெய் எரிவாயு எடுக்கப்படுகிறது. பல கோடிக்கணக்கான் ரூபாய் ஆதாயம் மத்திய அரசாங்கத்திற்கு வருகிறது. மாநில அரசுக்கு அதற்குரிய ராயல்டி தொகையும் வருகிறது என்பதையும் நான் அறிகிறேன். இந்த ராயல்டி தொகை என்பது எந்தப் பகுதியில் எடுக்கப்படுகிறதோ அந்தப் பகுதிக்கு எந்தவகையிலும் பயன்படவே இல்லை. கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிற அந்த ராயல்டி தொகையை திருவாரூர், நாகை மாவட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக, அங்கே இருக்கிற அனைத்து சாலைகளுமே பழுதடைந்து விடுகின்றன. அனைத்து பாலங்களுமே வீணாகிவிடுகின்றன. ஆகவே, O.N.G.C. மூலம் கிடைக்கிற அந்த ராயல்டி தொகையை அந்த மாவட்டங்களுடைய சாலையை மேம்படுத்துவதற்குரிய நிதியாகச் சிறப்பு நிதியாக ஒதுக்குவதற்கு நம்முடைய மாநில அரசு திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கைகள் ஏராளம் இருக்கின்றன.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 ஏப்ரல் 1

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் நேரில் கொடுக்கின்றபோது பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-4-2002) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

61. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 5-11-2001-ஆம் நாளிட்ட 235 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 2-1-2002 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

63. 1999 ஆம் ஆண்டு வரன்முறைப்படுத்த விண்ணப்பம், மதிப்பீடு மற்றும் வசூலிப்பதற்கான (சென்னை பெருநகர்ப்பகுதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் 5-12-2001 ஆம் நாளிட்ட 480 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



2002 ஏப்ரல் 1]

64. 1998-99-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

65. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

66. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

67. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் முப்பத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

68. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

69. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

44. 2001-2002 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

45. 2001-2002 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்)

[ 2002 ஏப்ரல் 1

46. 2001-2002 ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

47. 1990-91 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

48. 1990-91 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

49. 1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு திரு. சி பொன்னையன், நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224484.
சென்னை-600 008
நூலகம்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.